


கல்கி
KALKI
ஜனவரி 31,1954
4

"வெண்மையான, சுத்தமான
# லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம்
கமழ்வது . . ."

என்கிறார் *நிருபா ராய்*




இந்தியாவில்
தயாரித்தது.

நிருபா ராய் மேலும் கூறுவதாவது: "சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப் ஒன்றுதான் என் சருமத்தை நன்றாக சுத்தம் செய்கிறது. அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரங்களில் புகுந்து மேனியின் இயற்கை அழகை வெளிக்கொண்டு வந்து, ஒரு தனிப்பொலிவை அளிக்கிறது. இந்த சுத்தமான, வெண்மையான சோப் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தையும் நான் மிகவும் விரும்புகிறேன்."



". . . அதனால்தான் என் சருமத்தை
எழிலோங்கச் செய்ய லக்ஸ் டாய்லட்
சோப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 410-50 TM

மலர் 13
இதழ் 27

கல்கி

விஜய
தை 18

# பொருளடக்கம்

1954 ஜனவரி 31


| | | | |
|---|---|---|---|
| விண்ணவர் வியக்க வாழ்வோமாக! | (தலையங்கம்) | ... | 3 |
| விபத்து நேரிடலாம்! | (கார்ட்டூன்) | ... | 4 |
| இளம் எழுத்தாளர்கள் | ... | ... | 4 |
| ஒன்று பட்டால் உண்டு வெற்றி! | ... | ... | 5 |
| பாரதத் தலைவரின் சீரிய யோசனை | ... | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| அமோக ஆதரவு! | ரகு | ... | 16 |
| வன மல்லிகை (பாப்பா மலர்) | விஜயம் | ... | 19 |
| பம்பாயில் சங்கீத விழா (போட்டோ: ஆர். கண்ணன்) | ... | ... | 23 |
| சோதிட அநுபவங்கள் | ... | ... | 25 |
| அவள் அதிர்ஷ்டம் | ஜயலக்ஷ்மி | ... | 35 |
| தமிழ்க் களஞ்சியம் | டி. கே. சி. | ... | 40 |
| மனோரமா | ரமண்லால் வசந்தலால் தேசாய்-ரா.வீ. | ... | 43 |
| பல்லவர் காலத்து விக்கிரகங்கள் | வை. மு. நரஸிம்மன் | ... | 50 |
| உயர்ந்த உள்ளம் | சௌமித்திரி | ... | 54 |
| யோகாசன சிகிச்சை | வி. என். குமாரஸ்வாமி | ... | 58 |
| திரு. வி. க. மணி மண்டப நிதி | ... | ... | 60 |
| கடமை முடிந்தது | ரா. பாலகிருஷ்ணன் | ... | 63 |
| நந்தகுமாரின் பரிசு | கே. ஆர். கௌசல்யா | ... | 69 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

வசீகர வனப்பிற்கு
ஆப்கான் ஸ்னோ
ஆசியாவின் தலைசிறந்த அழகு இரகசியம்




ESP
Patanwala
for PERFUMES AND COSMETICS
BOMBAY-27

படான்வாலா - வாசனைத் திரவியங்களுக்கு

# ஜனவரி 29ம் முதல்

## சென்னை வெலிங்டன்

## பிரபாத் • சரஸ்வதி

மூன்று தியேட்டர்களிலும்


# ராஜி.

என் கண்மணி..

மற்றும் கீழ்க்கண்ட
இடங்களில்

மதுரை
பெங்களூர் சிட்டி
பெங்களூர் கண்டோன்மெண்ட்
கோயமுத்தூர் - திருச்சி
சேலம் - திருநெல்வேலி
காரைக்குடி - கும்பகோணம்
மைசூர் - தஞ்சாவூர்
பாண்டிச்சேரி
ராபர்ட்சன்பேட்டை
காஞ்சிபுரம் - ஈரோடு
திண்டுக்கல் - நாகர்கோயில்
எர்ணாகுளம் - விருதுநகர்
பாலக்காடு - கோட்டயம்

## அன்பும் தியாகமும் பரிமளிக்கும் அருமையான கதை.....





# ஜெமினி

தயாரிப்பு...

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 27

# விண்ணவர் வியக்க வாழ்வோமாக!

கரைகாணாத திரைகடலின் நீளத்தையும் அகலத்தையும் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

ஈடு இணையின்றிக் கம்பீரமாக நிற்கும் இமயத்தில் உள்ள எவரெஸ்டு சிகரத்தின் உயரத்தைக் கண்டு பிடித்து, உச்சியையும் எட்டிப் பிடித்து விட்டார்கள்.

ஆனால், அகில உலகும் அஷ்ட திக்கும் வியாபித்து, நட்சத்திர மண்டலத்தைத் தொட்டுக் கொண்டு வானோங்கி நிற்கும் காந்தி மகானுடைய புகழின் சிகரத்தை யாராவது அளவிட்டுக் கூற முடியுமா?

காந்திஜி மரணத்தை வென்ற மாபெரும் முனிவர்; இந்த உலகை நீத்த பிறகும் அவர் ஒவ்வொருவருடைய ஹிருதய பீடத்திலும் உயிருடன் வீற்றிருப்பார் என்ற கவி ரவீந்திரநாத் தாகூரின் தீர்க்கதரிசனம் அப்படியே உண்மையாகி இருப்பதைக் காண்கிறோம்.

இன்று காந்தி மகானின் புற உடல் மறைந்து விட்டது. ஆனால், அவரது ஆத்ம ஜோதி சந்திர சூரிய நட்சத்திர மண்டலங்கள் உள்ளளவும், பாரத புண்ணிய பூமி உள்ளளவும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமும் உண்டோ!

• • • •

மகாத்மா காந்தி குறிப்பிட்ட மதத்தையோ, நாட்டையோ மாத்திரமல்ல, அகில உலகத்தையும் உய்விக்க வந்த உத்தமராகத் திகழ்ந்தார்.

*"...மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்*
*இழிபடு போர், கொலை, தண்டம்*
*பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்*
*பிணைத்திடத் துணிந்தனை..."*

என்று கவிச் சக்கரவர்த்தி பாரதியார் கூறியதுபோல், பொய்யும் பித்தலாட்டமும் போர் வெறியும் நிறைந்த அரசியலைத் தூய்மைப் படுத்தும் வழியைக் காட்டினார்.

அன்பும் அறநெறியும் மிளிர்ந்த அரசியல் முறைகளைச் செயலில் காட்டி வெற்றி பெற்றார்.

வெளி நாடுகள் செய்யும் தவறைச் சுட்டிக்காட்டி, அவற்றின் கடமைகளை வற்புறுத்தவும் காந்திஜி தயங்கியதில்லை.

சென்ற மகா யுத்தத்தின்போது இந்திய மக்களின் இஷ்டத்துக்கு விரோதமாக இந்தியாவை யுத்தத்தில் இழுக்கக் கூடாது என்று பிரிட்டிஷாருக்கு அறிவுறுத்தினார்.

அதே சமயம், பிரிட்டிஷாரும் ஜெர்மானியர்களும் தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வழியையும் எடுத்துக் கூறினார்.

காந்திமகான் அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும் ஜெர்மன் சர்வாதிகாரி அடால்பு ஹிட்லருக்கும் எழுதிய கடிதங்களே இதற்குச் சான்று ஆகும்.

"ஜெர்மனியை அழித்து விட்டு, பிரிட்டனோ, ஐரோப்பாவோ வாழ முடியாது; அதுபோலவே பிரிட்டனை நாசம் செய்து விட்டு ஜெர்மனி வாழ முடியாது. இந்தப் போரைத் தடுக்கும் சக்தி உங்கள் ஒருவருக்குத்தான் உண்டு. நீங்கள் இந்தக் கோரிக்கைக்குச் செவி சாய்க்காவிடில் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளை எண்ணவும் நடுங்குகிறது!"

இவ்விதம் காந்திஜி ஹிட்லருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.


ஆனால், போர் வெறி கொண்டிருந்த ஹிட்லரின் செவிகளில் அந்த உத்தமரின் உபதேசம் ஏறவில்லை.

இறுதியில் காந்திஜியின் தீர்க்க தரிசனம் உண்மையாயிற்று!

அந்த யுத்தத்தில் அழிந்த ஜெர்மனியைப் புனருத்தாரணம் செய்து பலப்படுத்தினாலன்றி, ஐரோப்பாவுக்குப் பாதுகாப்பு ஏற்படாது என்று இப்போது பிரிட்டனும் அமெரிக்காவும் அபிப்பிராயப் படுகின்றன.

ஜெர்மனியை மறுபடியும் ஆயுத பலம் வாய்ந்ததாகச் செய்யும் விஷயத்தில் வல்லரசுகளுக்குள் ஏற்பட்டுள்ள வேற்றுமை, மற்றொரு போருக்கு விதையாக அமைந்திருக்கிறது.

## விபத்து நேரிடலாம்!




பாகிஸ்தான் அமெரிக்க ராணுவ உதவியை நாடுவது பாகிஸ்தான் சுதந்திரத்துக்கே ஆபத்தாக முடியும் என்று கல்யாணி காங்கிரஸில் பிரபல தலைவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

---

அன்று காந்திஜியின் அறமொழிகளுக்கு வல்லரசுத் தலைவர்கள் செவி மடுத்திருந்தால், இன்று உலகம் பரிதவிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிராது என்பது நிச்சயம்.

ஆனால் வல்லரசுகளைப் போல் பாரத நாடு ஏமாந்து போகவில்லை.

காந்தி மகானின் உபதேசத்தைச் சிரமேற்கொண்டு, அவரது அடிகளைப் பின்பற்றியதாலேயே இன்று பாரத நாடு பெறுதற்கரிய சுதந்திரத்தை அடைந்து, உலக நாடுகளிடையே உன்னத ஸ்தானத்தை வகிக்கின்றது.

அறநெறியையும் அன்பு வழியையும் அனுஷ்டித்து வரும் வரையில், பாரத நாட்டை எத்தகைய இன்னல்களும் அணுகா என்று காந்தி மகான் அபயம் அளிக்கும் அற்புதக் காட்சியை நாம் கற்பனை செய்து கொள்ளலாம்.*

காந்திஜி காட்டிய வழியில் அகிலம் புகழ விண்ணவர் வியக்க வாழ்வோமாக!

# இளம் எழுத்தாளர்கள்

சிறுகதை எழுதும் துறையில் இளம் எழுத்தாளர்கள் பலர் ஈடுபட்டு வருகிறார்கள். புதிய எழுத்தாளரின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இது மகிழ்ச்சிக்குரியது.

புதிய எழுத்தாளர்கள் தாங்கள் மிகப் பிரயத்தனப்பட்டு எழுதிய சிறுகதைகளை மாதப் பத்திரிகைகளுக்கும் வாரப் பத்திரிகைகளுக்கும் அனுப்புகிறார்கள். அவற்றில் சில பிரசுரிக்கப்படுகின்றன. சில கதைகள் ஆசிரியரின் வந்தனத்துடன் திருப்பி அனுப்பப்படுகின்றன.

கதைகளைத் திரும்பப் பெற்றவர்கள் மனத்தில் அதிருப்தி ஏற்படுகிறது. அவர்கள் பத்திரிகை ஆசிரியர்களிடம் குறைப்படுகிறார்கள். பத்திரிகை ஆசிரியர்கள் இளம் எழுத்தாளர்களை ஆதரிப்பதில்லை என்றும், அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதில்லை என்றும், திரும்பத் திரும்ப ஒரு சில எழுத்தாளர்களின் கதைகளையே வெளியிடுகிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

சிறுகதை எழுதும் துறையில் புதிதாக ஈடுபடும் ஆரம்ப எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதில் நம் "கல்கி" பத்திரிகை எப்போதும் ஆர்வம் கொண்டு வந்திருக்கிறது. அந்த ஆர்வம் காரணமாக, எத்தனையோ இளம் எழுத்தாளர்களின் கதைகளைப் பரிசீலனை செய்து, அவசியமான திருத்தங்களைச் செய்து, வெளியிட்டிருக்கிறோம். பெரும்பாலும் ஆரம்ப எழுத்தாளர்களின் கதைகளுக்கே நாம் அதிகச் சலுகை காட்டி வருகிறோம். "கல்கி" பத்திரிகை மூலம் எழுத்துலகில் பிரவேசித்த எழுத்தாளர்கள் பலர் இன்று நல்ல புகழுடன் இருந்து வருகிறார்கள்.

இவ்வாறு நாம் இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்க எவ்வளவு ஆர்வம் உடையவர்

---

* இக் காட்சியைத்தான் நமது சைத்திரிகர் மணியம் அட்டைப் படத்தில் சித்திரித்திருக்கிறார்.

களாயிருப்பினும், அதனால் சில சமயம் பெருந் தொல்லைக்கு ஆளாக வேண்டி நேரிடுகிறது.

ஒரு சில ஆரம்ப எழுத்தாளர்கள் வேறு பத்திரிகைகளில் வெளியான கதைகளை, கதா பாத்திரங்களின் பெயர்களை மட்டும் மாற்றிப் புதிதாகத் தாங்கள் எழுதியது போல் அனுப்பி விடுகிறார்கள். இன்னும் சிலர் முன்னம் வெளியான கதைகளில் சிற்சில நிகழ்ச்சிகளை மட்டும் மாற்றி எழுதி அனுப்பி விடுகிறார்கள். அத்தகைய கதையைத் திருத்தம் செய்து வெளியிட்டால், கதை அந்த எழுத்தாளர் ஏற்கெனவே பார்த்து எழுதிய மூலக் கதையின் உருவத்தைப் பெற்று விடுகிறது!

பல பத்திரிகைகளைப் படிக்கும் வாசக நேயர்கள் ''இந்தக் கதை இன்ன தேதியில் இன்ன பெயரில் இந்தப் பத்திரிகையில் வெளியானது'' என்று கடிதம் எழுத ஆரம்பித்து விடுகிறார்கள்.

அப்படிக் கடிதம் எழுதும் உற்சாகமான வாசக நேயர்களுக்குப் பத்திரிகாசிரியர்களின் நன்றி உரியது. அவர்கள் அவ்வாறு பத்திரிகை ஆசிரியர்களுக்கு எழுதவில்லையென்றால், பழைய கதைகளேதான் திரும்பத் திரும்பப் புதிய போர்வையில் வெளியாகிக் கொண்டிருக்கும். புதுப் புது எழுத்தாளர்களும், புதிய கற்பனைகளும் தோன்றுவது குறைந்து போய் விடும்.

பத்திரிகைகளில் கதைகள் வெளியிடுவதற்கு உதவி ஆசிரியர்கள் கதைகளைப் பொறுக்கி எடுக்கிறார்கள். ஏற்கெனவே வெளியான கதை என்பது வாசக நேயர்களுக்குத் தெரியும்போது, உதவி ஆசிரியர்களுக்குத் தெரியாமலா போய் விடும் என்ற கேள்வி எழுகிறது.

ஆம்; உதவி ஆசிரியர்களுக்குச் சில சமயம் தெரியாமல்தான் போய் விடுகிறது. அதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது.

சற்றுப் பிரபலம் அடைந்த பத்திரிகைகளுக்கு நூற்றுக்கணக்கான சிறு கதைகள் புதிய இளம் எழுத்தாளர்களிடமிருந்தும் வழக்கமாக எழுதும் பழைய எழுத்தாளர்களிடமிருந்தும் வாரந்தோறும் வருகின்றன. இவ்வளவையும் உதவி ஆசிரியர்கள் படித்து, வெளியிடத் தகுதியானவற்றைப் பொறுக்கி எடுக்க வேண்டி வருகிறது.

வருஷக் கணக்கில் பார்க்கும்போது இவ்வாறு உதவி ஆசிரியர்கள் படிக்கும் கதைகள் ஆயிரக் கணக்கில் போய் விடுகின்றன.

இவற்றுடன் வேறு பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளையும் உதவி ஆசிரியர்கள் படிக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, எந்தக் கதையைப் படித்தாலும், ''முன்னே எங்கேயோ படித்த மாதிரி இருக்கிறதே!'' என்று தோன்றுகிறது. சமூகக் கதைகள், குடும்பக் கதைகள், கிராம வாழ்க்கைக் கதைகள் எல்லாவற்றிலும் சில நிகழ்ச்சிகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. சில சமயம் கதைப் போக்கும் ஒன்றுபோல இருக்கும். எழுதும் முறையிலேதான் வித்தியாசம் இருக்கும்.

நூற்றுக்கணக்கான கதைகளைப் படித்துப் பரிசீலனை செய்யும் உதவி ஆசிரியர்கள், ''முன்னே படித்த மாதிரி இருக்கிறதே!'' என்று தோன்றுவதற்காக மட்டும் கதைகளை நிராகரிப்பதாயிருந்தால் கதைகளைப் பொறுக்கவே முடியாது!

வாசக நேயர்களுக்குக் கையெழுத்துப் பிரதிகளைப் படிக்கும் கடமை இல்லை. பத்திரிகைகளிலே அச்சிட்டு வெளியாகும் கதைகளை மட்டும் படிக்கிறார்கள். ஆகையால், அவர்களில் சிலருக்கு இந்தக் கதை இந்தப் பத்திரிகையில் முன்னமே வந்தது என்பதைத் திட்டமாக உடனே கண்டு பிடிக்க முடிகிறது.

உதவி ஆசிரியர்களுக்கு இந்தச் சௌகரியம் கிடையாது.

ஆகையால், கதை எழுதி அனுப்புகிறவர்கள் எல்லாம் சொந்தக் கற்பனையிலும் எழுதுகிறார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படை பேரில்தான் அவர்கள் கதைகளைப் பரிசீலனை செய்து பொறுக்க வேண்டியிருக்கிறது.

இந்த நிலைமையில், இரண்டொரு எழுத்தாளர்கள் பழைய கதைகளைப் பெயர்த்து எழுதி அனுப்பி, அவை பிரசுரிக்கப்பட்டு விட்டால், பத்திரிகையின் நல்ல பெயர் பாதிக்கப்படுகிறது.

இம்மாதிரி நேரிடாமல் தடுக்க ஒரு வழி உண்டு. நன்றாகப் பழக்கமான பழைய எழுத்தாளர்களின் கதைகளையே பிரசுரிப்பது என்று வைத்துக் கொண்டால், வேறு பத்திரிகைகளில் வெளியான பழைய கதைகளையே மீண்டும் பிரசுரிக்கும்படியான நிலைமை ஏற்படாது. ஆகையினாலேதான், சில பத்திரிகைகளில் வழக்கமாக எழுதும் எழுத்தாளர்களின் கதைகளே வெளியாகின்றன. இவ்வாறு, இரண்டொருவர் செய்யும் முறையற்ற வேலைகள் புதிதாகக் கதை எழுதத் தொடங்கும் இளம் எழுத்தாளர்கள் அனைவரையும் பாதிப்பதாக இருக்கின்றன.

நம்மைப் பொறுத்த வரையில், இம்மாதிரி தவறுகள் (அதாவது ஏற்கெனவே வெளியான கதைகள் புதிய உருவத்தில் வெளியாதல்) சில சமயம் நேர்ந்து விட்டாலும் புதிய எழுத்தாளர்களின் கதைகளைப் பரிசீலனை செய்து வெளியிடுவது என்ற கொள்கையையே கடைப் பிடிக்க விரும்புகிறோம். இந்த முறையைக் கடைப் பிடிப்பதினால்தான் சென்ற இருபது ஆண்டுகளில் தமிழ் நாட்டில் நூற்றுக் கணக்கான சிறுகதை ஆசிரியர்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதை நினைவில் வைத்துக் கொண்டு, ஆரம்ப எழுத்தாளர்களும் வாசக நேயர்களும் நம்முடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# ஒன்று பட்டால் உண்டு வெற்றி!

லட்சக் கணக்கான மக்கள் ஏக காலத்தில் ''ஜெய் ஹிந்த்'' கோஷம் செய்ய, ''ஜன கண மன'' தேசிய கீதம் திசை எங்கும் ஒலிக்க, ஐம்பத்தொன்பதாவது தேசிய காங்கிரஸ் மகா சபைக் கூட்டம் சென்ற வாரத்தில் அமோக வெற்றியுடன் முடிவுற்றது.

மக்களின் வெற்றிக்கும் பெருமைக்கும் சின்னங்களாக விளங்கும் அழியாப் பொக்கிஷங்களான ''ஜெய் ஹிந்த்'' மந்திரத்தையும், ''ஜன கண மன'' கீதத்தையும் பாரத நாட்டுக்கு அளித்த பாரதத் தவப்புதல்வர், வீரத் தளபதி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என்பதை யாரும் என்றென்றும் மறக்க முடியாது.

அமர வாழ்வுபெற்ற அந்த அருமைத் தலைவரின் ஐம்பத்தெட்டாவது ஜெயந்தி வைபவமும் ஒன்று சேர்ந்ததால், இவ்வருஷத்திய காங்கிரஸ் மகா சபைக் கூட்டம் தனிச் சிறப்புடன் விளங்கியது.

காங்கிரஸ் நகரில் காட்சி அளித்துக் கொண்டிருந்த நேதாஜியின் சிலைக்கு அக்ராசனர் நேருஜி பூமாலை சூட்டியதுடன், அந்த வீர புருஷரின்

தியாகத்தை எடுத்துக் கூறிப் புகழ் "மாலையும் சூட்டி எல்லோரையும் மகிழ்வித்தார்.

நேருஜி தமது தலைமைப் பேருரையில் தேசத்தின் முன்னுள்ள பல முக்கியப் பிரச்னைகளையும் சாங்கோபாங்கமாகக் குறிப்பிட்டார்.

இந்தியக் குடியரசு சர்க்கார் வகுக்க உத்தேசித்திருக்கும் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தின் பலனாக, இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும்பாலும் ஒழிய வழி உண்டாகும் என்ற நற்செய்தியை ஜவாஹர்லால்ஜி தேச மக்களுக்கு அறிவித்தார்.

ஆறு ஆண்டுகளாகப் பாகிஸ்தான் சிறையிலிருந்த எல்லை காந்தி கான் அப்துல் கபார்கானும் டாக்டர் கான் சாஹிபும் இப்போது விடுதலை பெற்றதைக் குறித்து, நேருஜி பாரதத்தின் மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்தார்.

* * *

தமது தலைமை உரையில் நேருஜி குறிப்பிட்ட முக்கியமான பிரச்னைகளில் அமெரிக்கா-பாகிஸ்தான் ராணுவ பேர விபரீதமும் ஒன்று.

இவ் விஷயமாகக் கவலையைத் தெரிவித்துக் காங்கிரஸில் தீர்மானமும் நிறைவேறியது.

இந்தியா உள்பட உலகத்தில் உள்ள பல நாடுகள் எதிர்த்தும் கூட, அமெரிக்கா – பாக் ராணுவ ஒப்பந்தம் ஏற்படுமானால், அதைக் குறித்துப் பாரத மக்கள் பீதி கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று நேருஜி கூறினார்.

நாம் எத்தகைய படையெடுப்பையும் எதிர்ப்பையும் சமாளித்து வெற்றி பெறுவது இராணுவ பலத்தில் இல்லை; பாரத மக்களின் ஐக்கியத்தில், ஆத்ம சக்தியில், ஒற்றுமையில், தன்னம்பிக்கையில்தான் இருக்கிறது என்ற உண்மையை நேருஜி சரித்திரச் சான்றுகளுடன் விளக்கினார்.

ஜாதி, மதம், இனம், பிராந்தியம், மொழி சம்பந்தமான சில்லறைப் பூசல்களில் ஈடுபட்டு மகத்தான தேசிய ஐக்கியத்தைக் குலைப்பது பேராபத்தாக முடியும் என்று எச்சரித்தார்.

மக்கள் ஏகோபித்து ஒற்றுமையுடனிருந்தால் நமது சுதந்திரத்துக்கோ, சமாதான லட்சியத்துக்கோ உலகத்தில் உள்ள எந்தச் சக்தியும் குந்தகம் விளைவிக்க முடியாது; சுதந்திர விரோதிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்க ஒற்றுமை அத்தியாவசியம் என்பதை வலியுறுத்தினார்.

"இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளின் நலனும் இவ்விரண்டுக்கும் இடையே நிலவும் நட்பையே பொறுத்திருக்கிறது. இரு நாடுகளுக்கும் உள்ள சில்லறைத் தகராறுகளைத் தீர்க்க வெளியாரின் உதவியை நாடுவது ஆபத்தாக முடியும். இதை மனதிற் கொண்டே, மூன்று வருஷங்களுக்கு முன் இரு நாடுகளும் பரஸ்பரம் போர் மறுப்புப் பிரகடனம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறினேன். ஆனால் மேற்படி கோரிக்கையைப் பாகிஸ்தான் நிராகரித்து விட்டது. இன்றுங்கூட பாகிஸ்தானுடனும், அடுத்துள்ள எந்த நாட்டுடனும் எக்காரணத்தைக் கொண்டும் போர் தொடுப்பதில்லை என்று உறுதி கூறி ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறோம்."

இவ்விதம் நேருஜி தமது தலைமைப் பிரசங்கத்தில் இந்தியாவின் கொள்கையை ஐயம்திரிபுக்கும் அரசியல்வாதிகளின் விபரீத வியாக்யானத்துக்கும் இடமின்றி வியக்தமாகக் கூறினார்.

இந்தியா போரை வெறுக்கிறது; இந்தியாவுக்கு எந்த நாட்டின்மீதும் ஆக்கிரமிப்பு நோக்கம் இல்லை என்பதைத் தெளிவாக்க இதைக் காட்டிலும் என்ன செய்ய முடியும்!

# பாரதத் தலைவரின் சீரிய யோசனை

இன்று உலக நாடுகளில் பெரும்பாலும் இரு கட்சிகளாகப் பிரிந்து நிற்கின்றன. அதன் விளைவாக யுத்த பீதியும் கெடுபிடியும் நிரந்தரமாக இருந்து வருகின்றன.

தற்போது வல்லரசுகள் ஐரோப்பிய நாடுகளின் கூட்டணியை உருவாக்கி யிருக்கின்றன.

மத்திய கிழக்கு நாடுகளை ஒன்று சேர்த்துத் தங்கள் கட்சிக்குப் பலம் தேட முற்படுகின்றன.

இவ்வாறு புதிது புதிதாகப் போர் மண்டலங்களைச் சிருஷ்டி செய்வதில் தங்களுடைய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் காட்டும் வல்லரசுகளின் செவிகளில் ஜவாஹர்லால்ஜியின் யோசனை விழுமா என்பதுதான் கேள்வி.

போரைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகப் போர் மண்டலங்களை உருவாக்குவதைக் காட்டிலும் பொருத்தமற்ற காரியம் வேறு என்ன இருக்க முடியும்!

ஆனால், அகில உலகிலும் அமைதி நிலவ வேண்டும் என்பதே காந்திஜி வழியை மேற்கொண்டுள்ள பாரத நாட்டின் பேரவா. வல்லரசுகளின் இன்றைய விபரீதமான போக்கு காரணமாக அது சாத்தியமில்லையாயின், உலகத்தில் உள்ள சில பகுதிகளிலாவது சாந்தி நிலவும்படி, அமைதி தவழும்படி செய்யலாம் அல்லவா!

இதற்கு ஜவாஹர்லால் நேரு ஒரு அருமையான யோசனையைக் கூறி யிருக்கிறார்.

"இந்தியா உள்படப் போரை விரும்பாத ஆசிய நாடுகள் யாவும் சேர்ந்து சாந்தி மண்டலத்தைச் சிருஷ்டிக்கலாம். அத்தகைய மண்டலம் எவ்வளவுக் கெவ்வளவு பெரிதாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு போர் பீதி ஒழிந்து அமைதி நிலவும் பிரதேசத்தின் பரப்பு அதிகமாகும்."

இவ்வாறு பாரதத் தலைவர் கூறியுள்ள உருவான சீரிய யோசனையை அகில உலகமும் ஆழ்ந்து சிந்திக்கும் என்பதில் ஐயமில்லை.

இதன் பலனாக உலகம் முழுவதுமே சாந்தி மண்டலமாகப் பரிணமிக்கும் காலம்கூட வரலாம்!

கல்யாணி நகர் காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தின் ஆரம்பத்தில் நேருஜி தாயின் மணிக்கொடியை ஏற்றுவித்தபோது மழை கொட்டுக் கொட்டு என்று கொட்டியது. அதனால் ஜவாஹர்லால்ஜி உள்படப் பதினாயிரக் கணக்கான ஜனங்களும் சொட்டச் சொட்ட நனைந்து விட்டார்கள்.

எனினும் கார்மேகங்களையோ பெரு மழையையோ ஒரு சிறிதும் லட்சியம் செய்யாமல் காங்கிரஸ் வெற்றிகரமாக முடிந்தது.

அது போலவே இன்று பல பயங்கரப் பிரச்னைகளாகிற மேகங்களும் பெரு மழையும் புயல் காற்றும் பாரத நாட்டைச் சூழ்ந்து நிற்கின்றன.

இவற்றை யெல்லாம் தீரத்துடன் எதிர்த்து நின்று சமாளித்துப் பாரத நாட்டு மக்கள் வெற்றிகரமாக முன்னேற வேண்டும்!

# இசைத் திருமணம்



★ சங்கீத கலாநிதி திருவாங்கூர் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களின் செல்வத் திருக்குமாரி கோமளவல்லிக்கும், விளக்கர் ஸ்ரீ சுப்பய்யா பி.ஏ. அவர்களுக்கும் கும்பகோணத்தில் ஜனவரி 25வ திங்கள் கிழமை திருமணம் சிறப்பாகவும், கோலாகலத்துடனும் நடைபெற்றது. தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த பல பிரமுகர்களும் தமிழ் நாடெங்கிலுமிருந்து பிரபல சங்கீத வித்வான்களும் சங்கீத ரஸிகர்களும் திருமணத்துக்கு விஜயம் செய்து சிறப்பளித்தார்கள். 24வ மாலை ஸ்ரீமதி எம்.எல். வஸந்தகுமாரியின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. 25வ மாலை சங்கீத ரத்னாகர ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்கள் ஸ்ரீ பாப்பா வெங்கட்ராமய்யர் வயலின், ஸ்ரீ பழனி சுப்பிரமண்யப் பிள்ளை மிருதங்க வாத்தியங்களுடன் அமோகமான சங்கீத மழை பொழிந்தார். பின்னர் ஆலத்தூர் சகோதரர்கள், மாயவரம் கோவிந்தராஜப் பிள்ளை வயலின், தஞ்சாவூர் மூர்த்தி மிருதங்கத்துடன் சக்கைப் போடாகக் கச்சேரி செய்தார்கள். குழிக்கரை ஸ்ரீ பிச்சப்பா, திருவிடைமருதூர் ஸ்ரீ வீருசாமிப் பிள்ளை ஆகியவர்களின் நாதஸ்வர வாத்தியக் கச்சேரிகளும் நடைபெற்றன. செவி விருந்தைத் தவிர, ஆயிரக்கணக்கான நண்பர்களுக்கும், உறவினருக்கும் அறுசுவை விருந்தும் அளிக்கப்பட்டது. இவ்வளவு வைபவங்களுடன் திருமணம் செய்து கொண்ட இளந் தம்பதிகள் சீரும் வாழ்ந்து, இல்லறம் இனிது நடத்தும்படி இறைவன் தன்னருள் புரிவாராக! ★








BINACA
புகை பிடிப்பவரின் கனவு
புகை பிடிப்பதனால் ஏற்படும் கஷ்டங்களுக்குப் பரிகாரம் ஒன்று கனவில் கண்டேன். ஆம், பினாகா பற்பசைதான் அது.
புகை பிடிப்பதனால் பற்களில் படியும் நிக்கோடைன் கறையையும் சுவாசத்தில் ஏற்படும் துர்க்கந்தத்தையும் சாஸ்திரீய முறையில் தயாரிக்கப் பட்ட ரசாயனப் பொருள்கள் சேர்ந்த பினாகா பற்பசை அறவே ஒழிக்கிறது.—ஆம், புகை பிடிப்போரின் கனவு நனவாகி விட்டது!
பினாகா (ரோஸ்) சக்தி வாய்ந்த "ஸல்போரிஸினோலியட்" என்னும் பொருள் கொண்டது.
பினாகா க்ரீன் இயற்கையின் ஆச்சர்ய துர்க்கந்த நாசினியான சக்தி செய்த க்ளோரோபில்லும் கொண்டது.
எதைத் தேர்ந்தெடுத்தாலும் சரி, நல்லதையே தேர்ந்தெடுக்கிறீர்கள்
'ஸிபா'வின் விசேஷ குணம் பொருந்தியுள்ள பற்பசை.
ரேடியோ சிலோனில் பிரதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு பினாகா ஹிட் பரேடையும் பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு பினாகா மௌனத் மதுரவையும், பிரதி புதன்கிழமை இரவு 8 மணிக்கு பினாகா கீத மாலாவையும் கேளுங்கள்

# பொன்னியின் செல்வன்






அத்தியாயம் 71

## 'திருவயிறு உதித்த தேவர்'

செம்பியன்மா தேவியைப் பார்க்க வேண்டுமென்று சுந்தர சோழர் பல முறை சொல்லி அனுப்பிய பின்னர், அம் மூதாட்டி சக்கரவர்த்தியைக் காண்பதற்கு வந்தார். சக்கரவர்த்தி அவர் வரும் செய்தி அறிந்து வாசற்படி வரையில் நடந்து சென்று காத்திருந்து வரவேற்று அழைத்துச் சென்றார். தம் பக்கத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

"அரசர்க்கரசே! அடுத்தடுத்துத் துயரமான செய்திகளை கேட்டு நொந்திருக்கும் என் உள்ளம் தாங்கள் உடல் நலம் பெற்றிருப்பதைப் பார்த்துத் திருப்தி அடைகிறது. இறைவன் அருளால் நெடுங்காலம் தாங்கள் சிரஞ்சீவியாக வாழ்ந்திருந்து இந்த உலகத்தைப் பரிபாலித்து வர வேண்டும்" என்று முதிய பிராட்டியார் கூறினார்.

"அன்னையே! என் கால்கள் மீண்டும் நடக்கும் சக்தி பெற்றிருப்பதைக் குறிப்பிடுகிறீர்கள். அதைப் பற்றி எனக்கும் திருப்திதான்! இந்தச் சோழ நாடெல்லாம் போற்றி வணங்கும் தாங்கள் வரும்போதும் எழுந்து வரவேற்க முடியாதவனாயிருந்தேன். ஊமையும் செவிடுமான ஒரு தெய்வப் பெண்மணியின் அன்பின் சக்தியால் என் கால்கள் இழந்திருந்த இயல்பை மீண்டும் பெற்றன. எழுந்து நின்றும் நடந்து வந்தும் தங்களை வரவேற்கும் பாக்கியம் பெற்றவனானேன். ஆயினும், தேவி, நான் உயிர் வாழ்ந்திருப்பது பற்றித் திருப்தி அடையவும் இல்லை; இனி நெடுங்காலம் உயிர் வாழ விரும்பவும் இல்லை. தாங்கள் அத்தகைய ஆசி எனக்குக் கூற வேண்டாம். விரைவில் சிவ பதம் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துங்கள்!" என்றார் சுந்தர சோழர்.

"சக்கரவர்த்தி! தங்கள் குலத்து மூதாதையர் எல்லாரும் வீர சொர்க்கத்தையோ, சிவ பதத்தையோ அடைந்தார்கள். தங்களுக்கும் பரலோகத்தில் அவர்கள் இடந்தேடி வைத்திருப்பார்கள். உரிய காலம் வரும்போது சிவ கணங்கள் வந்து தங்களை அழைத்துப் போவார்கள். ஆனால் அத்தகைய பதத்தை அடைவதற்குத் தாங்கள் அவசரப்படுதல் ஆகாது. இந்த உலகில் தங்களுக்கு இன்னும் கடமை எவ்வளவோ இருக்கிறது. நேர்மை நெறி பிறழாத தங்கள் ஆட்சியின் கீழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். சிவாலய கைங்கரியங்கள் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன.

சைவர்கள், வைஷ்ணவர்கள், புத்தர்கள், சமணர்கள் முதலான பல மதத்தினரும் தங்கள் ஆயுள் நீடிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள்..."

"தாயே! அவர்கள் யாரும் இனி அத்தகைய பிரார்த்தனை செய்யலாகாது. என் ஆயுள் நீடிக்கப் பிரார்த்திப்பது என் மன வேதனையை நீடிக்கச் செய்யும் பிரார்த்தனை யாகும். சோழநாடு அளித்த வீரர்களுக்குள்ளே வீராதி வீரனை ஆதித்த கரிகாலனைப் பறி கொடுத்து விட்டு, நான் இவ்வுலகில் நெடுங்காலம் உயிரோடு இருக்க வேண்டுமா? அவன் இறப்பதற்கு முன்னதாக என் உயிர் போயிருக்கக் கூடாதா?..."

"சக்கரவர்த்தி! புத்திர சோகம் மிகக் கொடியது தான். ஆனாலும் விதியின் வலிமையைப் பற்றிப் பேதையாகிய நான் தங்களுக்குச் சொல்ல வேண்டிய தில்லை. கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுடன் இணைபிரியாத் தோழரா யிருந்தார். காக்கும் கடவுளாகிய திருமாலின் அவதாரம் கிருஷ்ண பரமாத்மா. அவராலே கூட அரவானையும் அபிமன்யுவையும் காப்பாற்றிக் கொடுக்க முடிய வில்லை. அத்தகைய வீரப் புதல்வர்கள் இறந்த பிறகும் அர்ச்சுனன் உயிர் வாழ்ந்திருக்க வில்லையா? பெற்ற பிள்ளைகளின் மீது ஆசை இல்லாதவன் அல்லவே அர்ச்சுனன்? 'மன்னுயிரைக் காக்கும் பொருட்டு நீ உன் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும்' என்று கிருஷ்ண பரமாத்மா போதித்ததை ஏற்றுக் கொண்டு அர்ச்சுனன் உயிர் வாழ்ந்தான். சக்கரவர்த்தி! கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்குச் செய்த போதனை தங்களுக்கும் பொருத்தமானது."

"தாயே! அபிமன்யு போர்க் களத்தில் வீரப் போர் புரிந்து மரண மடைந்தான்; வீர சொர்க்கம் எய்தினான்!"

"தங்கள் குமாரன் வீரத்தில் அபிமன்யுவுக்குக் குறைந்தவன் அல்லவே! பன்னிரண்டாம் வயதில் சேவூர்ப் போர்க் களத்திலும் பதினெட்டாம் பிராயத்தில் வீர பாண்டியன் இறுதிப் போரிலும் ஆதித்த கரிகாலன் புரிந்த வீரச் செயல்களை இந்த உலகம் என்றும் மறக்காதே! அபிமன்யுவைக் கடைசியில் பலர் சூழ்ந்து கொண்டு அவனை நிராயுதபாணியாக்கி அதர்ம யுத்தம் செய்து கொன்றார்கள். அது போலவே ஆதித்த கரிகாலனையும் தந்திரத்தால் தனிமைப் படுத்திச் சதிகாரர்கள் பலர் சூழ்ந்து நின்று திடீரென்று தாக்கிக் கொன்றார்கள்......"

"தாயே! அவன் இறந்தது எப்படி என்பதை மட்டும் நான் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடியுமானால் என் மனம் ஓரளவு நிம்மதி அடையும்."

"சென்று போனதைப் பற்றி எதற்காக மனத்தைப் புண்படுத்திக் கொள்ள வேண்டும்? கரிகாலனுடைய விதி முடிந்தது; வால் நட்சத்திரம் விழுந்தது; சோழ நாடு ஒரு மகா வீரனை இழந்தது. ஏன், எப்படி என்று விசாரித்து என்ன ஆகப் போகிறது?"

"உண்மை தெளிவாகாத படியால், யார் யார் பேரிலோ சந்தேகம் உண்டாகிறது, தாயே! பூமியை ஆதிசேஷன் தாங்குவது போல் சோழ சாம்ராஜ்யத்தையே தாங்கி வந்தவரான பெரிய பழுவேட்டரையர் மேலேயே சிலர் சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள்; வீண் பழி சுமத்துகிறார்கள்."

"அவரையே கேட்டு உண்மையைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?"

"பெரிய பழுவேட்டரையரைக் கேட்க யாருக்குத் தைரியம் உண்டு? எனக்கு இல்லை, தாயே! எப்படியோ அவர் இதில் சிக்கிக் கொண்டு மனம் நொந்து போயிருக்கிறார். என்ன நடந்தது என்று அவராகச் சொல்லாத வரையில், அவரை யார் கேட்க முடியும்? அம்மா! தக்கோலம் போர்க் களத்தில் என் பெரிய தந்தை இராஜாதித்தர் யானைமேல் துஞ்சி வீர சொர்க்கம் புகுந்த பின்னர், சோழ சைன்யம் சின்னபின்னப் பட்டுச் சிதறி ஓடத் தொடங்கியது. ஓடிய வீரர்களை வழி மறித்து நிறுத்தி மறுபடியும் ஒரு சைன்யமாக்கிக் கன்னர தேவன் படைகளை விரட்டியடித்த மகா வீரர் பெரிய பழுவேட்டரையர். அன்று அவர் அவ்விதம் செய்திரா விட்டால், இன்றைக்குச் சோழ ராஜ்யமே இருந்திராது. தக்கோலத்துப் போரில் அவருடைய திரு மேனியில் அறுபத்துநாலு காயங்கள் பட்டன. அப்படியும் அவர் சோர்ந்து விடாமல் போர்க் களத்தில் நின்று வெற்றி கண்டார். அதற்குப் பிறகு அவர் போர்க்களத்துக்கே போகக் கூடாதென்று கட்டுப்பாடு செய்து தனாதிகாரியாக்கினோம். அத்தகைய பெரியவரை,— என் தந்தைக்குச் சமமானவரை,—நான் என்ன கேட்க முடியும்?"

"உண்மை வெளியாவதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?"

"வாணர் குலத்து வந்தியத் தேவன் கரிகாலனுடைய உடலின் அருகில் இருந்

தான் என்று சொல்கிறார்கள். அவனைக் கேட்டு உண்மை அறியலாம் என்று எண்ணினேன். அவனும் பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டான். இதைப் பற்றிச் சின்னப் பழுவேட்டரையர் முதன் மந்திரிமேல் குறை சொல்லுவதற்கு நியாயம் இருக்கிறது."

இது வரையில் மௌனமாக இருந்த குந்தவை இப்போது குறுக்கிட்டு, "தந்தையே! அந்த வீரரை எப்படியும் கொண்டு வந்து ஒப்புவிப்பதாக முதன் மந்திரி பொறுப்பு ஒப்புக் கொண்டிருக்கிறாரே?" என்றாள்.

"குழந்தாய்! இம்மாதிரி முதன் மந்திரி பல தடவை பொறுப்பு ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் நிறைவேற்றுவது நிச்சயமில்லை. சம்புவரையர் மகன் கந்தமாறன் ஓடியவனைத் துரத்திக் கொண்டு போயிருப்பதாக அறிகிறேன். கந்தமாறன் அவ்வளவு முன்யோசனைக்காரன் அல்ல; அவசர புத்தி படைத்தவன். அதிலும் சம்புவரையர் குலத்துக்குக் களங்கம் உண்டாகக் கூடாது என்ற ஆத்திரமுள்ளவன். அவன் வந்தியத்தேவனைத் தொடர்ந்து போயிருப்பது என் கவலையை அதிகமாக்குகிறது."

"ஐயா! சென்று போனதை மறந்து விடுவதே நல்லது. இனி நடக்க வேண்டியதைப் பற்றி யோசியுங்கள்."

"அன்னையே! அதற்காகவே தங்களை அழைத்து வரச் சொன்னேன். ஆளுக்கு மேல் ஆள் அனுப்பிக் கொண்டிருந்தேன். மேலே நடக்கவேண்டியது பற்றி எனக்கு யோசனை கூறி உதவ வேண்டும்."

"சக்கரவர்த்தி! அறிவிற் சிறந்த அமைச்சர்கள் பலர் தங்களுக்கு யோசனை சொல்ல இருக்கிறார்கள். இந்தப் பேதை ஸ்திரீ என்ன யோசனை சொல்லப் போகிறேன்? என்னைக் கரம் பிடித்து என் ஜீவியத்தைப் புனிதப் படுத்திய மகா புருஷர் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலத்திலும் நான் அரசாங்க காரியங்களில் கவனம் செலுத்தியதில்லை. அவர் தேவருலகம் சென்ற பிறகு சிவ கைங்கரியத்திலேயே ஈடுபட்டிருக்கிறேன். என்னால் என்ன யோசனை சொல்ல முடியும்?"

"தேவி! கோபித்துக் கொள்ளக் கூடாது. எங்கள் சோழ குலத்தில் தோன்றிய பெண்கள் எல்லாரும் பேதைகளாயிருக்கவில்லை. இதோ இருக்கிறாளே, என் அருமை மகள் குந்தவை, அவளுக்கு நிகரான அறிவு படைத்தவர்களை நான் கண்டதில்லை......"

"மன்னிக்க வேண்டும், சக்கரவர்த்தி! நான் சோழ குலத்தில் பிறந்தவள் அல்லவே? மழவரையர் குலத்தில் பிறந்தவள் தானே?" என்றார் முதிய பிராட்டியார்.

"எந்தக் குலத்தில் பிறந்தாலும், பெண்கள் அறிவுடையவர்களாக இருக்கலாம்; பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் நன்மை உண்டாக்கலாம். பெண்கள் வெறும் பிடிவாதம் பிடித்துப் பிறந்த குலமும் புகுந்த குலமும் அழிந்து போவதற்குக் காரணம் ஆவதும் உண்டு. தாயே! தாங்கள் அத்தகைய குல நாசத்துக்குக் காரணமாகப் போகிறீர்களா?"

இவ்விதம் சுந்தரசோழர் கேட்டதும், செம்பியன் மாதேவி நெருப்பை மிதித்தவர்போல் துடித்து, "சக்கரவர்த்தி! இது என்ன வார்த்தை? என்னால் ஏன் சோழ குலம் நாசம் அடைய வேண்டும்? நான் அவ்வளவு சக்தி படைத்தவள் அல்லவே?" என்று கண்களில் நீர் மல்க விம்மிக் கொண்டே கூறினார்.

"தேவி! சிறிது கடுமையாகப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். என் மூத்த குமாரன் இறந்து நான் உயிரோடிருக்கிறேன் என்னும் எண்ணம் என் நெஞ்சைப் பிளந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் இதைக் காட்டிலும் எனக்கு ஏற்படக் கூடிய துன்பம் ஒன்றும் உண்டு. என் மூதாதையர் காலத்திலிருந்து வலுப்பெற்றுப் பரவி வரும் இந்தச் சோழ ராஜ்யம் என் காலத்தில் சின்னபின்னப்பட்டு அழிந்தது என்றால், அதைக் காட்டிலும் கொடிய தண்டனை எனக்கு வேறொன்றும் இல்லை. மூன்று வருஷங்களாக என் அருமைக் குமாரன் கரிகாலனை நான் பார்க்காமலே இருந்தேன். எனக்காகக் காஞ்சி நகரில் அவன் பொன் மாளிகை கட்டினான். அங்கு வந்து தங்கும்படி என்னை அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தான். நான் போகவில்லை. என் உடல் நிலையைக் காரணமாகச் சொல்லிக்கொண்டிருந்தேன். உண்மையான காரணம் அதுவல்ல. நான் காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றால், பழுவேட்டரையர்களின் சிநேகத்தில் அவநம்பிக்கை கொண்டு நான் போய் விட்டதாக அவர்களும் நினைக்கலாம்; மற்றச் சிற்றரசர்களும் பெருந்தர அரசாங்க அதிகாரிகளும் கருதலாம். அதிலிருந்து என்ன சச்சரவு நேருமோ, என்ன விபரீதம் இந்தச் சோழ ராஜ்யத்துக்கு ஏற்படுமோ என்று எண்ணித்தான் நான் காஞ்சிக்குப் போகவில்லை.



நான் போயிருந்தால் ஒரு வேளை என் அருமைக் குமாரன் கரிகாலன் இன்று உயிரோடு இருந்திருப்பான்......''

''மன்னர் மன்னா! தாங்கள் எவ்வளவோ அறிவாளி; ஆற்றல் மிகப் படைத்தவர். ஆயினும் விதியை மாற்றி எழுதத் தங்களால் கூட முடியாது!...''

''ஆம், அன்னையே! விதியை என்னால் மாற்றியிருக்க முடியாது. ஆனால் என் குமாரனை அந்திய காலத்தில் பார்க்க முடியாமலே போய் விட்டதே. அவன் மனத்தில் குடி கொண்டிருந்த வேதனையை அறியாமல் போய் விட்டேனே என்று இன்றைக்கு நான் படும் பச்சாத்தாபம் இல்லாமற் போயிருக்கும். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன்? விஜயாலய சோழரும் அவர் வழியில் வந்த வீராதி வீரர்களும் இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்து ஸ்தாபித்த இந்தச் சோழ ராஜ்யத்தின் நலத்தைக் கருதி என் சொந்த ஆசாபாசங்களையெல்லாம் நான் வேரோடு களைந்து விட்டிருந்ததைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான். ஆதித்த கரிகாலனை என்ன காரணத்தினாலோ பழுவேட்டரையர்களுக்கும் அவர்களைச் சேர்ந்த சிற்றரசர்களுக்கும் பிடிக்காமல் போய் விட்டது. தங்கள் குமாரனும், என் சகோதரனுமான மதுராந்தகனை எனக்குப் பிறகு சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்க வேண்டும் என்று பிரயத்தனம் செய்தார்கள். அவர்கள் அப்படிப் பிரயத்தனம் செய்ததில் தவறு ஒன்றுமில்லை. மகா புருஷரும் சிவஞான சித்தருமான கண்டராதித்தருடைய புதல்வன் சோழ சிங்காதனத்தில் ஏற எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவன். உண்மையில் நான் முடி சூட்டிக் கொண்டதே தவறான காரியம். அப்போது பெரியவர்கள் எல்லாரும் சொன்னார்களே என்று, மறுத்துப் பேச முடியாமல், இசைந்து விட்டேன்.



அதன் பலன்களை இன்று அநுபவிக்கிறேன். என் அருமைக் குமாரனைப் பறி கொடுத்து விட்டு நான் உயிரோடிருக்கிறேன்! இவ்வளவு துன்பமே எனக்குப் போதும். இனி இந்தப் பெரிய இராஜ்யம் உள்நாட்டுச் சண்டையினால் அழிந்து போவதை என் கண்ணால் பார்க்க விரும்பவில்லை. தேவி! அத்தகைய அழிவு இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு நேராமல் தடுப்பதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்!'' என்றார் சுந்தர சோழர்.

செம்பியன் மாதேவி தம் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''அரசர்க்கரசே! தாங்கள் கூறியது எதுவும் என் சிற்றறிவுக்குச் சரியென்று தோன்ற வில்லை. என்னுடைய கணவருக்குப் பிறகு என் மைத்துனரும் தங்கள் தந்தையுமான அரிஞ்சய தேவர் சிங்காதனம் ஏறினார். என் கணவர் விருப்பத்தின்படியே அது நடந்தது. அரிஞ்சயருக்குப் பிறகு தாங்கள் சிங்காதனம் ஏற வேண்டும் என்பதும் என் கணவரின் விருப்பந்தான். மூன்று உலகையும் ஒரு குடையில் ஆண்ட தங்கள் பாட்டனார் பராந்தகத் தேவரும் அவ்வாறு ஏற்பாடு செய்து விட்டுச் சென்றார். ஆகையால், தாங்கள் சோழ சிங்காதனம் ஏறியதில் முறைத் தவறு எதுவும் இல்லை. என்னுடைய நாதர் சிவ பக்தியில் ஈடுபட்டு ஆத்மாநுபூதிச் செல்வராக விளங்கினார். இராஜரீக காரியங்களில் அவருடைய மனம் ஈடுபடவில்லை. ஆகையால் அவருடைய காலத்தில் சோழ ராஜ்யம் சுருங்கிக் கொண்டு வந்தது. தாங்கள் பட்டத்துக்கு வந்த பிறகு மறுபடியும் இராஜ்யம் விஸ்தரித்தது. தெற்கேயும் வடக்கேயும் தோன்றியிருந்த பகைவர்கள் அழிக்கப்பட்டார்கள். இவ்விதம் இராஜ்யம் மேன்மையுறுவதற்கு முக்கிய காரணமாயிருந்தவன் தங்கள் அருமைச் செல்வன் ஆதித்த கரிகாலன். அவனுக்கு உலகம் அறிய இளவரசுப் பட்டம் கட்டப்பட்டது. அதை மாற்றி என் மகனுக்கு இராஜ்ய உரிமையை அளிக்க வேண்டும் என்பதற்கு நான் எப்படிச் சம்மதிக்க முடியும்? நான் சம்மதித்தாலும் உலகம் சம்மதிக்குமா? இராஜ்யத்தின் மக்கள் சம்மதிப்பார்களா? சக்கரவர்த்தி!



உள்நாட்டுச் சண்டையினால் இராஜ்யம் அழிவதைத் தடுக்க விரும்புவதாகச் சற்று முன்னால் சொன்னீர்கள். ஆதித்த கரிகாலனைப் புறக்கணித்து விட்டு என் புதல்வனுக்குப் பட்டம் கட்டி யிருந்தால், அதே உள் நாட்டுச் சண்டை நேர்ந்திராதா? இராஜ்யம் அழிந்திராதா?'' என்று கேட்டார்.

"ஆம், தாயே! அதனாலே தான் நானும் தயங்கிக் கொண்டிருந்தேன். எல்லாரையும் சமரசப் படுத்தி அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஏற்பாடு செய்யப் பிரயத்தனப் பட்டேன். அது கைகூடுவதற்குள்ளே, விதி குறுக்கிட்டு விட்டது; கரிகாலனுடைய ஆயுள் முடிந்து விட்டது. தாயே! அடுத்தாற் போல் நான் செய்யவேண்டியது என்ன? தாங்களே சொல்லுங்கள்! இந்த இராஜ்யத்தின் பொறுப்பை என்னால் இனித் தாங்க முடியாது. யாரிடமாவது ஒப்புவித்து விட்டுக் கரிகாலனுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகிறேன். காஞ்சியில் எனக்காகவென்று கரிகாலன் கட்டியுள்ள பொன் மாளிகையில் தங்கி என் அந்திய காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். இப்போது யாருக்குப் பட்டம் கட்டுவது என்று சொல்லுங்கள். அருள்மொழியைக் காட்டிலும் மதுராந்தகன் பிராயத்தில் மூத்தவன். என்னைவிட இளையவன் ஆனாலும், அவனுக்குச் சிறிய தந்தை முறையில் உள்ளவன். கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் அருள்மொழிக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்கிறார்கள். தர்மத்துக்கும் நியாயத்துக்கும் குல முறைக்கும் விரோதமான இந்தக் காரியத்துக்கு நான் எப்படி உடன்பட முடியும்? அல்லது தாங்கள் தான் எப்படி உடன்பட முடியும்? அன்னையே! எனக்கு உதவி செய்யுங்கள்! மதுராந்தகனுக்கு முடிசூட்டத் தங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள். அதை வைத்துக் கொண்டு, நான் சேனாதிபதி பெரிய வேளாரையும் திருக்கோவலூர் மலையமானையும் சம்மதிக்கச் செய்வேன்! தங்கள் சம்மதத்தையும் அநுமதியையும் தெரிவித்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிய புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளுங்கள்!'' என்றார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

செம்பியன் மாதேவி, "ஐயா! என் சம்மதத்தைக் கேட்க வேண்டாம். சிவபதம் அடைந்த என் இறைவர் எனக்கு இட்ட கட்டளைக்கு மாறாக நான் நடக்க முடியாது. ஆனால், இராஜ்ய விவகாரங்களில் நான் இனிக் குறுக்கிடுவதில்லை. மதுராந்தகனை அழைத்து அவன் சம்மதத்தைக் கேட்டு எப்படி உசிதமோ அப்படிச் செய்யுங்கள்!'' என்றார்.

"ஆம், ஆம்! மதுராந்தகனை அழைத்து அவனுடைய சம்மதத்தைக் கேட்டுக் கொண்டுதான் எதுவும் தீர்மானிக்க வேண்டும். அதற்கும் தங்கள் உதவி வேண்டும். தேவி! மதுராந்தகன் எங்கே?'' என்றார் சக்கரவர்த்தி.

செம்பியன் மாதேவி தம் தொண்டை அடைக்க, நாத் தழுதழுக்க, "மதுராந்தகன் எங்கே? சென்ற மூன்று தினங்களாக அந்தக் கேள்வியைத்தான் நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். யாரும் மறுமொழி சொல்லவில்லை. அரசே! என் புதல்வன் எங்கே? கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரைக் கூப்பிட்டுக் கேளுங்கள்!'' என்றார்.

"சின்னப் பழுவேட்டரையர் தங்களைக் கேட்க வேண்டும் என்கிறார். தாங்களும் முதன் மந்திரி அநிருத்தரும் ஏதோ சூழ்ச்சி செய்து மதுராந்தகனை மறைத்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார். அன்னையே! இப்போது சின்னப் பழுவேட்டரையரையும் முதன் மந்திரியையும் அழைத்து வரச் செய்கிறேன். அநுமதி கொடுங்கள்!'' என்றார் சக்கரவர்த்தி.

"அப்படியே அழைத்துவரச் செய்யுங்கள். நானும் அவர்களைக் கேட்கிறேன்!'' என்றார் செம்பியன் மாதேவி.

குந்தவை உடனே வாசற் பக்கம் சென்று அங்கிருந்த காவலர்களிடம் சொல்லி அனுப்பினாள். சிறிது நேரத்துக்கெல்லாம் முதன் மந்திரியும் சின்னப் பழுவேட்டரையரும் வந்தார்கள்.

சக்கரவர்த்தி சின்னப் பழுவேட்டரையரை நோக்கி, "தளபதி! சோழ நாடு போற்றி வணங்கும் மூதாட்டியார், நீர் கேட்ட அதே கேள்வியைக் கேட்கிறார். 'மதுராந்தகன் எங்கே?' என்று வினவுகிறார். மதுராந்தகத் தேவரைப் பற்றித் தாங்கள் அறிந்ததைச் சொல்லுங்கள். தங்கள் சந்தேகத்தையும் ஒளிவு மறைவின்றிக் கூறுங்கள்!'' என்றார்.

சின்னப் பழுவேட்டரையர் கூறினார்:– "தேவியாரின் சிவ பக்தியும் சீலமும் உலகம் அறிந்தவை. சோழநாட்டு மக்கள் அவரை நடமாடும் தெய்வமாகக் கருதிப்

போற்றுகிறது போல் நானும் போற்றுகிறேன். நான் இப்போது தெரிவித்துக் கொள்வதைக் குற்றம் கூறுவதாக எண்ணக் கூடாது. எந்தக் காரணத்தாலோ தேவியார் தமது குமாரர் சோழ சிங்காதனம் ஏறுவதை விரும்பவில்லை. இதுவும் எல்லாரும் அறிந்தது. மூத்த பிராட்டியாரைக் காட்டிலும் எனக்காவது மற்றவர்களுக்காவது அவருடைய புதல்வர் விஷயத்தில் அதிக அன்பு இருக்க முடியாது. ஆயினும் மர்மமா யிருக்கும் சில விஷயங்களை விளக்குதல் அவசியமா யிருக்கிறது. அதிலும் சக்கரவர்த்தி 'மதுராந்தகரைக் கொண்டு வருக!' என்று அடியேனுக்குக் கட்டளையிட்டிருப்பதால், என்னுடைய சில சந்தேகங்களையும் வெளியிட வேண்டி வருகிறது. மூன்று நாளைக்கு முன்னால் மூத்த எம்பெருமாட்டியும் மதுராந்தகத் தேவரும் கோட்டைக்கு வெளியே சென்றார்கள். புஷ்பத் திருப்பணி செய்யும் சேந்தன் அமுதனுடைய குடிசைக்குச் சென்று க்ஷேமம் விசாரித்தார்கள். பின்னர் தேவியார் மட்டும் கோட்டைக்குத் திரும்பினார். சிறிது நேரத்துக்குப் பிறகு நானும் என் தமையனாரும் கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் நின்று கொடும்பாளூர் வேளாருடன் பேசிக் கொண்டிருந்தோம். மதுராந்தகத் தேவரைப் பற்றி நான் விசாரித்துக் கொண்டிருந்த சமயத்தில் யானை—பல்லக்கு பரிவாரத்துடன் சிலர் கோட்டைக்குள் நுழைந்தார்கள். 'மதுராந்தகத் தேவர் வாழ்க!' என்ற கோஷமும் கேட்டது. முதன் மந்திரி அவர்கள்தான் அப்போது அதைச் சுட்டிக் காட்டினார். யானைமேலிருந்தவர் மதுராந்தகத் தேவர் என்று கூறினார். எனக்கு அதைப் பற்றிச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. பின்னர், சக்கரவர்த்தியின் கட்டளைப்படி கோட்டைக் காவல் என் வசத்தில் வந்தது. என் அரண்மனையில் தான் மதுராந்தகர் தங்குவது வழக்கம். அன்றிரவு அதைப் பற்றி நான் விசாரிக்கவில்லை. மறுநாள் விசாரித்த போது என் அரண்மனைக்கு வரவில்லை என்று தெரிந்தது. பின்னர் கோட்டை முழுவதும் தேடிப் பார்த்தும், யார் யாரையோ விசாரித்துப் பார்த்தும், மதுராந்தகத் தேவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை! கோட்டைக்குள் பிரவேசித்தவர் எப்படி மாயமாய் மறைந்தார்? தேவியாரும் முதன் மந்திரியும் இப்பொழுது நான் சொல்லப் போவதற்காக மன்னிக்க வேண்டும். அவர்கள் இருவரும் ஏதோ சூழ்ச்சி செய்து, மதுராந்தகர் பீதி கொள்ளும்படியான செய்தி எதையோ அவரிடம் சொல்லி, இந்த நகரை விட்டும் நாட்டை விட்டுமே ஓடிப் போகும்படி செய்து விட்டார்கள் என்று நான் ஐயுறுகிறேன். நான் சொல்லுவது தவறா யிருந்தால் மீண்டும் பெரிய பிராட்டியாரின் மன்னிப்பைக் கோருகிறேன்."

செம்பியன் மாதேவி தழதழத்த குரலில் "தளபதி! தாங்கள் இப்போது கூறியது முற்றும் தவறு. சிவபெருமானுடைய பாத கமலங்கள் சாட்சியாகச் சொல்லுகிறேன். முதன் மந்திரி அநிருத்தரிடம் சமீபத்தில் என் குமாரனைப் பற்றிப் பேசியதுமில்லை; சூழ்ச்சி செய்ததும் இல்லை. அன்று மாலை நானும் மதுராந்தகனும் சேந்தன் அமுதன் குடிசைக்குப் போனது உண்மைதான். நான் அங்கிருந்து புறப்பட்டபோது மதுராந்தகன் சிறிது நேரம் கழித்து வருவதாகச் சொன்னான். அதற்குப் பிறகு நான் அவனைப் பார்க்கவில்லை. மூன்று நாட்களாக நானும் அவனைத் தேடிக் கொண்டுதானிருக்கிறேன்!" என்றார்.

"தேவியார் கூறுவதை ஒப்புக் கொள்கிறேன். அப்படியானால், முதன் மந்திரிதான் இந்த மர்மத்தை வெளியாக்க வேண்டும்!" என்றார் காலாந்தகர்.

"எந்த மர்மத்தை?" என்று முதன் மந்திரி அநிருத்தர் கேட்டார்.

"தேவியின் புதல்வர் காணாமற் போன மர்மத்தைப் பற்றித்தான்!"

"தளபதி! இந்தக் கோட்டை முழுவதும் தாங்கள் நன்றாகத் தேடிப் பார்த்ததாகக் கூறியது உண்மைதானா?"

"ஆம்; தங்கள் அரண்மனையைத் தவிர மற்ற எல்லா இடங்களையும் தேடித் துருவிப் பார்த்தாகி விட்டது."

"என் அரண்மனையை மட்டும் விட்டு விட்ட காரணம் என்ன?"

"தாங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் முதன் மந்திரி என்கிற மரியாதை காரணமாகத்தான்!"

"ஆகா! அப்படியானால் தங்கள் கடமையைத் தாங்கள் சரியாகச் செய்யவில்லை என்று ஏற்படுகிறது. போனது போகட்டும். சக்கரவர்த்தி! தங்களுடைய பெரிய அன்னையும் சோழ நாடு போற்றும் சிவபக்த சிரோமணியுமான

மூத்த எம்பிராட்டியார் தமது புதல்வரைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. நான் அவருடன் சூழ்ச்சி எதுவும் செய்யவில்லை. ஆனால் 'ஒன்று சொல்கிறேன். தேவியாரின் **திருவயிற்றில் உதித்த தேவர்** என்னுடைய மாளிகையிலேதான் மூன்று நாளாக இருந்தார். இப்போது இந்த அறையின் வாசலிலே வந்து தங்களையும் அன்னையையும் தரிசிப்பதற்காகக் காத்திருக்கிறார். அநுமதி கொடுத்தால், அழைத்து வருகிறேன்!''

இவ்வாறு முதன் மந்திரி கூறியதும் அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவரும் அடைந்த வியப்பைச் சொல்லி முடியாது.

சக்கரவர்த்தி, ''முதன் மந்திரி! இது என்ன வேடிக்கை! தேவியின் புதல்வரை அழைத்து வருவதற்கு அநுமதி கேட்பானேன்! சீக்கிரமே வரவழையுங்கள்!'' என்றார்.

முதன் மந்திரி அநிருத்தர் வாசற்படியண்டை சென்று கை தட்டி விட்டு மறுபடியும் உள்ளே வந்தார்.

அடுத்த கணம் சேந்தன் அமுதனை முன்னால் விட்டுக் கொண்டு ஆழ்வார்க்கடியான்நம்பி வந்தான்.

சின்னப் பழுவேட்டரையர் மிக்க ஆத்திரத்துடன் ''முதன் மந்திரியின் பரிகாசத்துக்கு ஓர் எல்லை வேண்டாமா?'' என்று கேட்டார்.


ஆனால் செம்பியன் மாதேவி இரு கரங்களையும் நீட்டித் தம் திரு முகத்தில் அன்பும் ஆர்வமும் ததும்ப ''மகனே!'' என்று அழைத்ததும், தளபதிக்கு மனக் குழப்பம் உண்டாகி விட்டது.

சேந்தன் அமுதன் ''தாயே! என்னை அழைக்க இப்போதேனும் தங்களுக்கு உள்ளம் உவந்ததோ? அது நான் செய்த தவத்தின் பயன்தான்!'' என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லிக் கொண்டு செம்பியன் மாதேவியை நெருங்கினான்.

மதுராந்தக உத்தமச் சோழன் என்று சரித்திரத்தில் புகழ் பெற்ற சிவபக்திச் செல்வனைத் திருவயிறு வாய்த்த தேவி அன்புடன் அணைத்துக் கொண்டு மெய் மறந்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார்.

---


## அமோக ஆதரவு!




உலக அரசியலில் யுத்த மேகம் சூழ்ந்து வரும் வேளையில், சமாதானத்துக்காகப் பாடுபடும் இந்தியாவில் மக்கள் ஒற்றுமையுடனிருக்க வேண்டிய அவசியத்தைக் கல்யாணி காங்கிரஸில் நேருஜி வற்புறுத்தினார்.

# குமுதம்

1-2-54 இதழில்
ஆரம்பமாகிறது



# அருள் பண்ணை

'சங்கரராம்' எழுதும் தொடர் கதை


லிப்டன்
டீ
கெர்ல்
LIPTON'S
TEA GIRL
FINEST
INDIAN DUST TEA
சிறந்த ஸ்ட்ராங் டீ
தருகிறது
LTGX 26 TM



# வன மல்லிகை

விஜயம்

அந்தக் காட்டாற்றில் ஜலம் பிரவாகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அப் பிரவாகத்தின் செழிப்புக் காரணமாக ஆற்றங் கரையின் இருபுறமும் பசுமை நிறைந்த செடி கொடிகளும் மரங்களும் அடர்ந்து காணப்பட்டன. அந்தப் பசுமைக்கு இடையில் பலவித வர்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. அங்கு ஜன நடமாட்டம் இல்லாததால் அந்த அழகிய மலர்கள் பறிப்பாரற்று வாடி வதங்கின.

வான வில்லின் வர்ண விசித்திரம் போன்ற பல வர்ணங்கள் கொண்ட எத்தனை எத்தனையோ மலர்கள் பூத்திருந்த அந்த ஆற்றங்கரைப் படுகைப் பிரதேசத்தில், அழகான வன மல்லிகைக் கொடியும் தழைத்துப் படர்ந்து செழித்து விளங்கியது. அம்மலர்க் கொடியில், நீல வானத்தில் கண் சிமிட்டிக் கொண்டு கூட்டம் கூட்டமாக விளங்கும் நட்சத்திரங்களைப் போன்ற மல்லிகை மலர்கள் கூட்டம் கூட்டமாக நன்ருக மலர்ந்து 'கலீ'ரெனச் சிரித்தன.

ஒரு நாள் அங்கிருந்த மலர்ச் செடிகளும், கொடிகளும், மரங்களும் பேசிக் கொண்டிருந்தன.

"நம்மிடம் பூக்கும் மலர்களெல்லாம் ஜன நடமாட்டம் இல்லாத இடத்தில் உதிர்ந்து விடுவதால் ஒன்றுக்கும் உதவாமல் போய் விடுகின்றன. மல்லிகையையும் முல்லையையும், மகிழம் பூவையும் செடியில் பார்க்கும் போது என் உள்ளமும் மலருகிறது. ஆனல் அம் மலர்களெல்லாம் யாருக்கும் பயனில்லாமல் வாடிப் போவதைப் பார்க்கும் போது என் உள்ளமும் வாடி விடுகின்றது. அதுவும் எல்லா மலர்களையும் விட மலர்ந்த முகத்தோடு மிகவும் அழகாக விளங்கும் மலர், வன மல்லிகை மலர்தான். அதுவும் இந்தக் காட்டில் உதிர்ந்து விடுகின்றதே என்பதை நினைக்கும் போது என் மனம் சொல்ல முடியாத வேதனை அடைகிறது. மல்லிகை மலர் அழகிய பெண்மணியின் கூந்தலில் இருந்து அவளுக்கு அழகு தர வேண்டியது. இங்கு வீணகிறது!" என்று கூறி, கொன்றை மரம் கண்ணீருக்குப் பதிலாகக் கொன்றைப் புஷ்பங்களைச் சொரிந்தது.

மற்றப் பூங்கொடிகளும், பூஞ்செடிகளும் கொன்றை மரம் சொன்னதை ஆமோதிப்பது போல் ஏராளமான மலர்களை உதிர்த்து வருத்தம் தெரிவித்தன.

வனமல்லிகைக் கொடிக்குக் கொன்றை மரம் சொன்ன வார்த்தைகள் மனத்தில் பலமாகப் பதிந்தன.

ஆனல், தன்னிடம் பூக்கும் மலர்கள் எப்படிப் பிறருக்குப் பயன்படும் என்பது தான் மல்லிகைக் கொடிக்கு விளங்கவில்லை. அது இது வரையில் மிருகங்களையும், பறவைகளையும், தாவர இனங்களையும் தவிர வேறு மனித இனத்தையே பார்த்ததில்லை. ஆகவே, அது கொன்றை மரம் சொன்னதையே நினைத்துக் கொண்டு 'எப்படியாவது ஒரு அழகிய பெண்மணியின் கூந்தலைத் தன் மணத்தினலும் மலர்ச்சியினலும் அழகு படுத்த முடியாதா, இந்த ஆவல் நிறைவேறுமா?' என்று நினைத்து ஏங்கியது.

மல்லிகைக் கொடியின் வேதனையை யாரும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. அந்த வனத்தில் பூத்துக் குலுங்கிய மலர்களெல்லாம் வழக்கம் போல், கவனிப்பாரற்று, வாடி உதிர்ந்து கொண்டு தானிருந்தன.

ஒரு நாள் அதிகாலையில் தாரை, தப்பட்டை, கொம்பு முதலிய வாத்திய கோஷங்களுடனும் யானை, குதிரை முதலிய பரிவாரங்களுடனும் அந்தக் காட்டுக்கு ஒரு மன்னன் வந்தான்.

மன்னனேடு அவனது குமாரியும் வந்திருந்தாள். வன விநோதங் காணவும், வேட்டையாடுவதைப் பார்க்கவும் தன் குமாரியைக் கானகத்துக்கு அழைத்து வந்திருந்தான் மன்னன். செழிப்புடன் கொழித்துக் கொண்டிருந்த, அந்த ஆற்றங் கரைப் படுகைப் பிரதேசத்து மலர்கள் மன்னனையும் மன்னன் மகளையும் பார்த்து மகிழ்ச்சியினல் ஒரேயடியாகக் குபீரென்று மலர்ந்து சிரித்தன.

ராஜகுமாரி அந்த அதியற்புதக் காட்சியில் தன்னையே மறந்து விட்டாள்.

"அப்பா, அந்தப் பூக்களையெல்லாம் பறிக்க வேண்டும் என்று ரொம்ப ஆசை

யாக இருக்கிறது. ஆகா, என்ன அழகு!" என்று பொங்கும் ஆவலோடு சொன்னாள் அந்த ராஜகுமாரி.

உடனே ராஜகுமாரியை அழைத்துக் கொண்டு மன்னன் அந்தக் காட்டுப் பொழிலுக்குள் புகுந்தான்.

மனிதக் குரலையே கேட்டிராத மலர்ச் செடிகளும் கொடிகளும் ராஜகுமாரியின் இனிய குரலைக் கேட்டுப் பூரித்தன.

கீழே உதிர்ந்த மலர்கள் எல்லாமாகச் சேர்ந்து மெத்தென்றிருந்தது பூமி. அதில் பாத சரங்கள் 'கலீர், கலீர்' என்று ஒலிக்க, கை வளைகள் 'கல் கல்' என்று குலுங்க, ஒரு பூங்கொடி போல் அசைந்து நடந்து ராஜகுமாரி எல்லா மலர்களையும் முக மலர்ச்சியோடு பார்வை யிட்டாள்.

அப்படி அவள் பார்வை யிட்டுக் கொண்டே வந்த போது, வனமல்லிகைக் கொடிகளிடம் வந்ததும் அவள் கால்கள் மேலே செல்ல மறுத்தன.

ராஜகுமாரி வனமல்லிகை மலர்களைக் கை கொண்ட மட்டும் பறித்தாள். அழகிய அவளது தளிர்க் கரங்கள் பட்டதும் அம் மல்லிகை மலர்கள் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது.

"அப்பா, இது போன்ற காட்டு மல்லிகைக் கொடியை நமது அரண்மனை நந்த வனத்தில் கொண்டு போய் வைக்க வேண்டும் என்று ரொம்ப ஆசையாக இருக்கிறது எனக்கு!" என்று கிளி மொழியில் கொஞ்சினாள் ராஜகுமாரி.

உடனே அரசன், "இது என்ன பிரமாதம்! இப்பொழுதே துளிர் விட்டிருக்கும் ஒரு இளங்கொடியை அப்படியே பெயர்த்து எடுத்துச் சென்று அரண்மனை நந்தவனத்தில் வளர்க்கலாம்!" என்று சொல்லி உடன் வந்த வேலைக்காரர்களை அழைத்து, இளங்கொடிகள் சிலவற்றை வேரோடு ஜாக்கிரதையாகப் பெயர்த்து எடுத்துக் கொள்ளும்படி கட்டளை யிட்டான். வேலையாட்கள் அரசனின் உத்தரவுப்படி மல்லிகைக் கொடிகள் சிலவற்றை எடுத்து ஜாக்கிரதையாகச் சேகரித்தனர்.

ராஜகுமாரி அங்கே கொஞ்சம் மல்லிகை மலரை எடுத்து ஒரு நாரில் தொடுத்துத் தன் தலையில் மகிழ்ச்சியோடு சூடிக் கொண்டாள்.

அப்போதுதான் மல்லிகைப் பூவுக்குக் கொன்றை மரம் அன்றொரு நாள் சொன்னது எவ்வளவு பெரிய உண்மை என்று தெரிந்தது. ராஜகுமாரியின் கரங்கள் பட்டதும் அந்த மலருக்கு எத்தகைய மகிழ்ச்சி உண்டாகி விட்டது! தான் பூமியில் முளைத்து, பூத்துக் குலுங்கியதற்குத் தகுந்த பயனை இன்றுதான் அது குதூகலமாக அனுபவித்தது. ராஜகுமாரியின் அழகிய கூந்தலை யல்லவா அது இப்போது அலங்கரிக்கிறது!

அரசனும் ராஜ குமாரியும் யானை, குதிரை, பரிவாரங்களுடன் நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர். ராஜகுமாரியின் அழகிய கூந்தலை அலங்கரித்த காட்டு மல்லிகை மகிழ்ச்சி தாங்காமல் மலர்ந்த முகத்தோடு சென்றது. அந்த அழகில் மற்றக் காட்டு மரங்களும் தங்களை மறந்து மகிழ்ந்தன. கொன்றை மரம் தன்னிடம் பூத்துக் குலுங்கும் பொன் வண்ணக் கொன்றை மலர்களைக் கல கல வென்று சொரிந்து மகிழ்ந்தது.

மகிழ மரம், வாடாத வண்ணம் பொருந்திய மகிழம் பூக்களை அந்தப் பொழில் முழுவதும் உதிர்த்து மனம் பூரித்தது. மற்றும் அங்கே உள்ள மலர்ச் செடிகளும் கொடிகளும் ஏராளமான மலர்களை உதிர்த்தன. இந்த மலர்களின் விசேஷத்தால் அந்தக் கானகம் முழுவதும் கம்மென்று பூ மணம் கமழ்ந்தது.

ராஜகுமாரி, கூந்தலில் மல்லிகை மலரும், முகத்தில் மகிழ்ச்சியும் மலரப் பல்லக்கில் ஏறி அரசனுடன் சென்றாள்.



இந்திய விளம்பரதாரர்கள் சங்கத்தின் புதிய தலைவர்

## ஸ்ரீ ஏ. டி. ஷராப்

இந்திய விளம்பர தாரர்கள் சங்கத்தின் தலைவராக ஸ்ரீ ஏ. டி. ஷராப் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்னும் மகிழ்ச்சி யூட்டும் செய்தி வந்திருக்கிறது.

ஸ்ரீ ஏ. டி. ஷராப் அவர்கள் பிரபல தொழிலதிபர்; பொருளாதார நிபுணர்; டாடா ஸன்ஸ் லிமிடெட் கம்பெனியின் டைரக்டர்-மற்றும் பல கம்பெனிகளின் டைரக்டராக இருந்து வருகிறார். இந்திய நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்காக வகுக்கப் பட்ட 'பம்பாய்த் திட்டம்' என்ற பிரசித்தி பெற்ற திட்டத்தை உருவாக்கியவர்களுள் ஒருவர் ஸ்ரீ ஷராப். இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள தனிப்பகுதி நீதிக் கமிட்டியின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார். இப்படிப் பல துறைகளில் பணியாற்றி வரும் ஷராப் அவர்களின் தலைமையில் இந்திய விளம்பர தாரர்கள் சங்கமும் பெரிதும் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.



பிப்ரவரி 12 முதல்
ஜெயந்தியின்
பொன் வயல்
கதை : கல்கி
மதராஸ் பிக்சர்ஸ் வெளியீடு
டைரக்ஷன் :
ஏ. டி. கே
ஸ்டுடியோ :
வாஹினி
பூரண உரிமையாளர்கள் :
மதராஸ்
பிக்சர்ஸ்
சர்க்யூட்
மதராஸ். 14

**INDISPENSABLE FOR S. S. L. C. STUDENTS**

## Agasthiar's Guide to

| | | | | |
|---|---|---|---|---|
| SOCIAL STUDIES | Rs. | 2 | 8 | 0 |
| GENERAL SCIENCE | „ | 2 | 4 | 0 |

## New Model Test Papers with Answers in

| | | | | |
|---|---|---|---|---|
| MATHEMATICS (Composite)* | Rs. | 1 | 4 | 0 |
| MATHEMATICS (General)* | „ | 0 | 13 | 6 |
| GENERAL SCIENCE | „ | 1 | 2 | 0 |
| SOCIAL STUDIES | „ | 1 | 2 | 0 |

(**Special Feature :* Solutions for Parts I & II)

★

FOR COPIES APPLY TO

**AGASTHIAR BOOK DEPOT**

TEPPAKULAM - - TIRUCHIRAPALLI

பத்தாவது

## வட இந்திய யாத்திரை

( ஸ்ரீ துவாரகை பிரபாஸ் பட்டிணம், ஸித்தபூர், ஆஜ்மீர், ஜெயப்பூர் மற்றுமுள்ள முக்கிய க்ஷேத்திரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன )

மஹாசிவராத்திரிக்கு மிகப் புராதனமான சோமநாதர் (ஜோதி லிங்கம்) ஆலய தர்சனம்

13-2-54ல் சென்னையிலிருந்து புறப்படும்

**III வகுப்பு சார்ஜ் ரூ. 245**

மேற்படி சார்ஜில் இரவில் படுத்துக் கொள்வதற்கும் வசதிகள் அடங்கியுள்ளன

●

முழு விவரங்களுக்கு எழுதவும்:

**பாரத் டிராவல் சர்விஸ் லிமிடெட்**

( Recognised by Govt. of India )

310-311, லிங்கிச் செட்டி தெரு, சென்னை-1

போன் : 2400 & 55400 தந்தி : "EXCURSION"

பம்பாய் மாதுங்காவில் வாழும் தமிழர்கள் "ஷண்முகானந்தா நுண்கலைச் சங்கீத சபா" என்ற பெயரில் ஒரு சங்கீத சபையை நிறுவி, சென்ற மூன்று ஆண்டுகளாக சங்கீத விழாவை நடத்தி வருகிறார்கள். இந்த வருஷத்துச் சங்கீத விழாவை மேற்படி சபையின் கட்டிட உதவி நிதிக்காக வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

ஜனவரி எட்டாம் தேதி ஸ்ரீ தியாகராஜ தினத்தில் ஆரம்பமாகிப் பதினேழாம் தேதி வரை பத்து தினங்கள் சங்கீத விழா கோலாகலமாக நடந்தேறியது. அந்தச் சங்கீத விழாவில் தென்னாட்டுப் பிரபல சங்கீத வித்வான்களும், பிரசித்தி பெற்ற ஹிந்துஸ்தானி வித்வானும், பரதநாட்டிய குமாரிகளும் கலந்து கொண்டனர். இந்தக் கலை விழா தென்னாட்டுச் சங்கீதத்தின் மேன்மையையும், தென்னிந்தியர்களின் பண்பாட்டையும் பாரத நாட்டுக்கு எடுத்துக் காட்டும் முறையில் சிறப்புடன் விளங்கியது.

திருவிடை மருதூர் ஸ்ரீ வீருசாமிப்பிள்ளையின் நாதஸ்வர இசையுடன் ஸ்ரீ தியாகராஜ பூஜை 'ஜாம் ஜாம்' என்று ஆரம்பமாகியது. ஜெமினி அதிபர் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் விழாவைத் துவக்கி வைத்துச் சிறப்பித்தார்.

ஸ்ரீ செம்மங்குடி சீனிவாச ஐயர், ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர், ஸ்ரீ மகா ராஜபுரம் விஸ்வநாத ஐயர், ஆலத்தூர் சகோதரர்கள், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி முதலிய தென்னாட்டுப் பிரபல சங்கீத வித்வான்களும், இளம் பாடகிகளான ஸ்ரீமதிகள் ராதா, ஜயலக்ஷ்மியும், ஹிந்துஸ்தானி வித்வான் ஸ்ரீ பலூஸ்கரும் கச்சேரி செய்து விழாவைச் சோபிக்கச் செய்தனர்.


குமாரி கமலா, வைஜயந்தி மாலா ஆகியவர்களின் பரத நாட்டியமும், திருவிசநல்லூர் ஸ்ரீ ராமசாமி சாஸ்திரி அவர்களின் விகடக் கச்சேரியும் நடந்தன.

சங்கீதக் கச்சேரிகளுக்கு ஸ்ரீ பாப்பா வெங்கட்ராமய்யர், மாயவரம் ஸ்ரீ கோவிந்தராஜப் பிள்ளை, ஸ்ரீ ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி, ஸ்ரீ டி. என். கிருஷ்ணன், முதலியவர்கள் வயலினும், பாலக்காட்டு மணி, பழனி சுப்ரமணியப் பிள்ளை, மாவேலிக்கரை கிருஷ்ணன் ஆகியவர்களின் மிருதங்கமும், ஸ்ரீ சாமிநாத பிள்ளை கஞ்சிராவும், உமையாள்புரம் ஸ்ரீ கோதண்டராமய்யர் கடமும் வாசித்து ஒத்துழைத்தார்கள்.

விழாவுக்கு இந்திய அரசாங்க மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஸ்ரீ எஸ். கே. பட்டீல், தொழில் அதிபர்களான ஸ்ரீ நவால் எச். டாட்டா, ஸ்ரீ கே. எச். கபூர் முதலியவர்கள் விஜயம் செய்து சிறப்பித்தார்கள்.

இந்தச் சங்கீத விழாவைத் திறமையுடன் நடத்திய ஷண்முகானந்த சபை நிர்வாகிகளையும், அவர்களுடன் ஒத்துழைத்த பம்பாய்த் தமிழர்களையும் பாராட்டவேண்டும்.

மேற்கூறிய விழாக் காட்சிகளில் சிலவற்றை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.



# பம்பாயில் சங்கீத விழா



குறைந்த செலவில், குறைந்த நேரத்தில், சிறந்த விவசாயத்திற்கு

# உலகப் பிரசித்தி பெற்ற


# பெர்குஸன் டிராக்டர் மற்றும் உபகரணங்கள்





டிஸ்க் கலப்பை

கட்டியான நிலங்கள், சதுப்பு நிலங்கள், கல்லும் காடும் நிறைந்த பூமியை உழும்.



சால் கலப்பை


ஆழமாக நிலம் பெயர்த்து களைகளும் தழை தாங்களும் மண்ணில் புதையச் செய்யும்.

பெர்குஸன் டிராக்டர், உபகரணங்களின் எண்ணிறந்த சிறந்த அமைப்பு முறைகள் அவற்றை இந்திய விவசாய உபயோகத்திற்கு உகந்தவையாக்குகின்றன.

அவற்றை

- வாங்கும் விலை மலிவு
- இயக்குவது சுலபம்
- பராமரிப்பு செலவு கம்மி.

நாற்றங்காலில் விதை பாவுவது முதல் அறுவடை முடியத் தேவையான விவசாயக் கருவிகள் பெர்குஸன் இயந்திரங்களாக உள்ளன.



ஜெனரல் பர்ப்பஸ் டில்லர்

கலபமாக ஒரு நாளில் 20 முதல் 25 ஏகர் வரை கொத்தி முடிக்கும்.



தண்ணீர் இறைக்கும் பம்பு

பெல்ட் இணைக்கத் தகுந்த கப்பியுடன் கூடிய டிராக்டர்கள் தண்ணீர் பாய்ச்ச, மரம் வெட்ட பயன் படுபவை.

விரிவான விவரங்களுக்கு தயவு செய்து விசாரிக்கவும்:

## ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (சௌத் இந்தியா) லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்.

கிளைகள்: கோழிக்கோடு, உதகமண்டலம், திருவனந்தபுரம், கோட்டயம்.




3 டன் டிப்பிங் ட்ரெயிலர்

காடு முரடான, குறுகலான செங்குத்தான ரோடுகளில் மலிவாக, சிக்கனமாக பாரம் ஏற்றிப் போக

டிஸ்க் ஹேரோ

பரம்படிக்க, புழுதியாக்க.



இங்கு கண்டவற்றிற்கும் ஏஜன்டுகள்:

செவர்லட் கார்கள், டிரக்குகள்; ஆஸ்டின் கார்கள், டிரக்குகள்; வாக்ஸால் & ப்யூக் கார்கள்; A. J. S. & ப்ரான்ஸிஸ் பார்னெட் மோட்டார் சைகிள்கள்; ஆட்டோ & டொமெஸ்டிக் ரேடியோக்கள்; ஜி. இ. ஸி. ரெப்ரிஜெரேட்டர்கள்.

பிரசித்திபெற்ற 'டயர்ஸோல்ஸ்' ப்ராஸஸ் மூலம் டயர்களைப் புதுப்பிப்பவர்கள்.

EP

★★★ சோதிட சாஸ்திரத்தைப் பற்றியும், சோதிடம் பார்ப்பதில் உள்ள அநுகூலங்கள்—பிரதிகூலங்கள் பற்றியும் பல நேயர்கள் எழுதி வருகிறார்கள். சில கடிதங்களைக் கீழே வெளியிட்டிருக்கிறோம். பிப்ரவரி மீ 28உ வரையில் இந்த விஷயம் பற்றி நேயர்கள் எழுதலாம். வெளியிடத் தகுதியான கடிதங்களையெல்லாம் வெளியிட்ட பிறகு, பரிசுக்குரிய நான்கு கடிதங்களைப் பொறுக்கி எடுத்துத் தெரிவிக்கப்படும்.

நேயர்கள் சிலர் சோதிட சாஸ்திரம் பற்றிய தங்கள் அபிப்பிராயத்தை மட்டும் தெரிவிக்கிறார்கள். தக்க ஆதாரங்களுடன் கூடிய அபிப்பிராயங்களையும் வரவேற்கிறோம். ஆனால் சொந்த அநுபவங்களை அடிப்படையாகக் கொண்ட அபிப்பிராயங்களாயிருந்தால், இப் பகுதியில் வெளியிடுவதற்குப் பொருத்த முள்ளவை யாகும். —ஆசிரியர்

# சோதிட அநுபவங்கள்

என் தகப்பனார் அவர்கள் பல சோதிடப் புத்தகங்களைப் படித்து, பிறருக்குச் சோதிடம் சொல்லா விட்டாலும் தாம் சம்பந்தப்பட்ட வரையில் தமது ஆயுள் முடிவை நிர்ணயித்து எழுதி வைத்ததோடு, தமது பந்துக்களையும், நண்பர்களையும் வரவழைத்து அவர்கள் புடைசூழ இருக்கும் அதே நேரத்தில், அவருக்கு மரணம் ஏற்பட்டது. மேற்படி விஷயத்தின் உண்மையை அறிந்த எனக்குச் சோதிடத்தில் நம்பிக்கை ஏற்பட்டதில் ஆச்சரிய முண்டோ!

தம் மனைவி பிரசவ காலத்தில் கூட இருந்த ஒரு சோதிடர் அவர் தாயாரிடம் ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுத்துக் குழந்தை பிரோதயமானவுடன் வெளியே பழத்தை உருட்டச் சொன்னார். அதன்படி பழம் உருட்டியபோது, மேற்படி பழம் சுவரில் தட்டி வரவே லக்னசந்தி ஏற்பட்டு ஒரு லக்னம் மாறி விட்டது. அந்தப் பிரபல சோதிடர் குழந்தை தமக்குப் பிறந்ததல்லவென நிர்ணயித்துப் பரதேசம் சென்று விட்டார்.

பின்னை பெரியவனான பின் தன் தகப்பனாரைப் பற்றி விசாரித்தபோது, தாயார் நடந்தவற்றைச் சொன்னாள். அதற்குள் குமாரன் பெரிய சோதிடனாயிருந்ததால் தகப்பனார் வீட்டை விட்டுப் போனபோது எழுதிய குறிப்புகளைப் பார்த்துக் காரணமறிந்து கொண்டான். தன் தகப்பனாரைத் தேடி அழைத்து வருவதாகச் சபதம் செய்து வீட்டை விட்டு வெளியேறினான். அப்படி அவன் தந்தையைத் தேடி வரும் போது பன்னிரண்டு வருஷங்களாக மழையே பெய்யாமல் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுத் தவிக்கும் ஒரு இராஜ்யத்துக்கு வந்தான். அரசன் தனது சபையில் பல சோதிடர்களை வரவழைத்துத் திட்டமாய் இந்த நாள் இந்த நேரத்தில் இவ்வளவு மழை பெய்யலாம் எனச் சொல்லுபவர்களுக்கு அமோக வெகுமானம் தருவதாயும், பொய்த்துப் போனால் சிரச்சேதம் செய்வதாயும் நிபந்தனை ஏற்படுத்தி இருந்தான். அந்த நிபந்தனைக்குட்பட்டு இரண்டு சோதிடர்கள் மழையைப் பற்றிச் சொன்னார்கள். இந்த நாள் இந்த நேரத்தில் மூன்று அங்குல மழை பெய்யும் என்று ஒரு கிழச் சோதிடர் சொன்னார். அப்போது மற்றொரு வாலிபச் சோதிடர், "கிழச் சோதிடர் சொன்ன நேரத்தில் மூன்று அங்குல மழை பெய்தது போல் தோன்றுமே ஒழிய ஆராய்ந்து பார்த்தால் அதில் 100ல் 2 பாகம் குறைவாகவே பெய்திருக்கும்" என்று சொன்னார்.

சோதிடர்கள் சொன்ன நேரத்தில் மூன்று அங்குல மழை பெய்ததாகத் தெரிந்தது. வாலிப சோதிடரைப் பார்த்து "100ல் 2 பாகம் குறையுமென்று சொன்னீரே, சரியாய் மூன்று அங்குலம் இருக்கிறதே!" என்று கிழச் சோதிடர் கேட்டார். வாலிபச் சோதிடர் ஒரு குச்சியை எடுத்து மழை அளக்கும் கருவிக்குள்ளிருக்கும் தண்ணீரில் விட்டுக் கிளறியவுடன் உள்ளிருந்து ஒரு தவளை குதித்து வெளியேறியது. பின் அளந்து பார்த்ததில் அந்த வாலிபச் சோதிடர் சொன்னபடி குறைவாக இருக்கக் கண்டு கிழவர் வியந்தார். இவ்வளவு திட்டமாய்ச் சொன்ன வாலிபரை அணுகி அவர் ஊர்பேர் விசாரித்துத் தம் மகன் என்று அறிந்து ஊர் திரும்பியதாகச் சோதிடத்தைப் பற்றி ஒரு கதை உண்டு. இதை இங்கு ஏன் எழுத நேர்ந்ததென்றால், சோதிட சாஸ்திரத்தை ஆராய்வதில் ஒரு மயிரிழை பிசகினாலும் அதனால் ஏற்படும் விபரீதங்களை எடுத்துக் காட்டுவதற்காகத்தான். என் அநுபவங்களிலிருந்து சோதிடம் பொய்யல்ல என்றே நினைக்கிறேன்.

சென்னை-25
14—1—54 ஜெகநாபி ரகுபதி ரங்கராஜு

★

என் இளம் பிராயத்தில் சோதிடம் சொன்னவர், எனக்குக் கல்வி அறிவு அறவே ஏற்படாது, உத்தியோகம் ஏதும் இல்லை, நிலத்தில் பயிர்த்தொழில் செய்து, வரும் சொற்ப வருமானம் கொண்டு கஷ்ட ஜீவனம் மேற்கொள்ள வேண்டுமென அபிப்பிராயப் பட்டனர். இது கேட்டு என் பெற்றோர்கள் மிகவும் வருந்தினர்.

ஆனால் நடந்தது வேறு. நான் ஒரு வகுப்பிலும் தவறாமல் சர்க்கார் உபகாரச் சம்பளம் பெற்று எல்லா வகுப்பிலும் உயர்ந்த மார்க்குகள் வாங்கி எஸ். எஸ். எல். சி. வரை பாஸ் செய்தேன். கடந்த எட்டு வருடங்களாக மத்திய சர்க்கார் காரியாலயம் ஒன்றில் வேலை பார்த்து ஊதியம் பெற்றுச் சௌகரியமாக வாழ்க்கை நடத்தி வருகிறேன்.

சோதிடம், ஜாதகம் எதுவுமே பார்க்காமல், பலருடைய எதிர்ப்பைப் புறக்கணித்து விட்டு, பெண்ணின் குணம், பழக்கவழக்கங்கள் இவற்றை மட்டும் நன்கு நேரில் ஆராய்ந்து அறிந்த பின்னர் நான் மணம் செய்து கொண்டேன். மூன்று வருடங்களாக மிக ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் குடும்பம் நடந்து வருகிறது. எங்களை மகிழ்விக்கக் குழந்தையும் ஒன்று உண்டு.

விவாகத்துக்கு முன்னர், பல சோதிடர்கள் ஒருங்கே, என் மனைவிக்கு, அவள் இரண்டாம் தாரமாகத்தான் வாழ்க்கைப் படுவாள் என ஆருடம் கூறினர். இதுவும் தவறி விட்டது. நான் முதல் தாரமாகவே அவளை மணந்தேன்.

மானிட வாழ்க்கைக்குச் சோதிடத்தை அடிப்படையாகவோ உறு துணையாகவோ கொள்ளக்



"இரண்டு மூன்று தினங்களாக அசாத்திய பனி; குளிர் தாங்க முடியவில்லை. தை மாதத்திலேயே இப்படி இருக்கிறதே. என்ன காரணமோ தெரியவில்லை!"

"அடாடா! உங்களுக்குத் தெரியாதா விஷயம்? ஹிமாலயத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த டென்ஸிங் இப்பொழுது சென்னைக்கு வந்திருக்கிறார். அதனால்தான் இப்படி ஒரே அடியாகக் குளிருகிறது!"

கூடாது. சோதிட சாஸ்திரத்தில் பல உண்மைகள் இருக்கலாம். ஆயினும் தினசரி மனித வாழ்க்கைக்கும் முன்னேற்றத்துக்கும் அவை அவசியமே இல்லை. முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்.

பொன்மலை
17-1-54
எஸ். ஆர். ராஜன்

★

அரசாங்கத்தில் ஓர் பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் நான், அன்றாடக் காரியங்களில் சோதிட விதிகளின்படி நடந்து கொண்டால், எடுத்த காரியங்கள் நன்மையாக முடிகிறது என்பதற்காக என் அனுபவங்களைக் குறிப்பிடுகிறேன்.

ஒரு சமயம் ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் பதவி ஏற்றதும், புது அதிகாரியைப் பார்த்தல் என்னும் சம்பிரதாயப்படி, தாசில்தார் அந்தஸ்தில் உள்ள பல நண்பர்கள் ஒரு தினத்தில் போக நிச்சயிக்க, அந்த நாள் சரியா யில்லை யென்றும், அடுத்த நாள் காலையில் சென்றால் நல்லது என்றும் நான் தெரிவித்தேன். அவ்விதமே நாங்கள் சென்று வெகு எளிதில் கலெக்டரைக் கண்டும், திருப்தி யடைந்த மனத்துடனும் திரும்பினோம். முதலில் என் நண்பர்கள் போக நிச்சயித்த தினத்தில் கலெக்டர் வெளியூர் முகாம் போயிருந்ததாகத் தெரிய வந்ததும், சோதிடத்தின் அவசியத்தை என் நண்பர்கள் உணர்ந்தார்கள்.

பரணி, கார்த்திகையில் பொதுவாய்ப் பிரயாணஞ் செய்யாதே என்று சோதிடம் சொல்கிறது. சர்க்கார் கையிருப்பு தானியங்கள் நல்லபடியாகக் கிடங்குகளில் வைக்கப்பட் டிருக்கிறதா வென்று மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒரு டிப்டி கலெக்டர் பிரத்தியேகமாய்ப் பரிசீலனை செய்வது வழக்கம். ஒரு சமயம் பரமக்குடியில் உள்ள கிடங்குகளைப் பார்க்க அப்போது சிவகாசியில் சப் கலெக்டரா யிருந்தவர் வரவேண்டி யிருந்தது. சர்க்கார் வசம் தானிய மூட்டைகள் பரமக்குடியில் இல்லை என்றும் வரவேண்டாமென்றும் நான் தந்தி கொடுத்தேன். ஆனால் தந்தி கிடைப்பதற்கு முன்னதாகவே புறப்பட்டு, ராமநாதபுரம் போய்ப் பிறகு பரமக்குடி வந்து அவருக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டது. அவர் சிவகாசியிலிருந்து கிளம்பியது பரணி நட்சத்திரத்தில்.

ஒரு சமயம் இன்னொரு தாசில்தாருடன் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கும் விஷயமாய்ப் போக வேண்டியிருந்தது. சுமார் பன்னிரண்டு மணிக்குத் தனுர் லக்னத்தில் என் யோசனையின்படி 'ஜீப்' காரில் சென்றோம். போகும் வழியில் ஒரு பையன் மீதும், ஒரு மாட்டின் மீதும் கார் மோதுவதிலிருந்து மயிர் இழையில் தப்பினோம். திருப்புவனம் எல்லையை யடைந்ததும் ஜீப் காரின் டயர் வெடித்தது. அதே இடத்தில் காலியாக ஓர் பிரயாண பஸ் இருந்தது. எங்களைத் தெரிந்து கொண்ட டிரைவர் பஸ்ஸில் எங்களை ஏற்றிக் கொண்டு சுமார் முக்கால் மைலுக்கு அப்பாலுள்ள முசாபரி பங்களாவில் கொண்டு போய்ச் சேர்த்தார். அங்கு எங்களுடைய நண்பரான மதுவிலக்கு அதிகாரி முகாம் செய்திருந்தார். எங்களுக்குச் சுடச் சுடக் காப்பி கிடைத்தது. வழக்கத்துக்கு மாறாக எல்லாக்கிராம அதிகாரிகளும் தவறாது வந்திருந்ததால், நாங்கள் சென்ற வேலையை ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொண்டு திரும்பினோம். அன்று தனுர் லக்னம் அவ்விதப் பெருமையைக் கொண்டதா யிருந்தது.


இது மாதிரி இன்னும் எத்தனையோ சம்பவங்களை என்னுடைய அனுபவத்திலிருந்து குறிப்பிட முடியும். நம் கடமையைச் செய்வதில் "எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்(று) அறியேன் பராபரமே" என்பது போல், காலத்தின் பெருமை, சக்திகளைத் தெரிந்து, அனுசரித்து நடந்தால் நலம் பெறலாம்.

மானாமதுரை
16—1—54
வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி
(டிப்டி தாசில்தார்)

★


என் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டர் குடியிருந்தார். அவர் காலரா வியாதி பரவாமல் தடுப்பதில் கெட்டிக்காரர். அதனால் அவரை எல்லோரும் 'காலரா ராமன்' என்று அழைத்து வந்தார்கள். அவர் ஜாதகம் பார்ப்பதில் நிபுணர். அந்தக் காலத்தில் அவரிடம் ஜாதகங்களைக் காட்டாமல் கல்யாணம் நிச்சயம் செய்யும் அளவுக்கு எந்தப் பெற்றோருக்கும் தைரியம் கிடையாது.

அவருக்கு மீனாக்ஷி என்று ஒரு பெண் இருந்தாள். "என் பெண் காலை 6-10க்குப் பிறந்தாள். அவள் மாத்திரம் 6 மணிக்கே பிறந்திருந்தால் ஒரு ராஜகுமாரனுக்கு மாலையிட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அந்த ராஜயோகத்தின் வாசனை இவள் ஜாதகத்திலும் வீசுகிறது. ஆகையால் மன்மத சொரூபம் வாய்ந்தவனாகவும் குறைந்த பட்சம் ஒரு லட்சாதிபதியாகவாவது இருப்பவனாலும்தான் மீனாக்ஷியின் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட முடியும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். எங்கள் வீதியில் வசிக்கும் எவ்வளவோ மாமிகள் மீனாக்ஷியை நாட்டுப் பெண்ணாக ஏற்கத் தயாரா யிருந்தார்கள். ஆனால் அவர்கள் பிள்ளைகள் கையில் மூன்றும் தேதிக்குப் பிறகு முக்காலணா இருக்காது. மீனாக்ஷி


ஊம்... ஓர் உயர்ந்த ரக ஸிந்தடிக் எனமல் தேவை
...உறுதியாகவும் சீக்கிரமாகவும் உலரக்கூடியது
...இலகுவாகவும் நன்றாகவும் படியக்கூடியது
ஸ்ப்ரே செய்வதற்கும் பிரஷால் பூசுவதற்கும் ஏற்றது
வெளிப் பூச்சு மேலும் உட்பூச்சு வேலைக்கும் தகுதியானது
தொழிற்சாலைகளுக்கும் வீடுகளுக்கும் ஏற்றது
...கண்டுபிடித்து விட்டேன்! அது தான்...
ஷாலிமார் சூப்பர்லாக்
ஸிந்தடிக் எனமல்
நீடித்து உழைக்கக் கூடியது -பளபளப்பான அமைப்பளிக்கக்கூடிய 38 விதமான, பிரகாசமான நிறங்களில் கிடைக்கும். 1 இ. எம். பைண்ட், ¼ & 1 இ. எம். காலன் டின்களிலும் 5 இ. எம். காலன் ட்ரம்களிலும் பாக் செய்யப்பட்டது.
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.
Post Box 136, Madras 1
Importers & Distributors for Ceylon :
LEWIS BROWN & CO., LTD., POST BOX 85, COLOMBO

"உயிர்களுக்கு மறுபிறப்பு உண்மையென்றால் அடுத்த பிறவியிலும் இவரையே நான் புருஷனுக்ப் பெற வேண்டும்." என்கிறார்

'விடுதலை'யில் கல்யாணியாக நடிக்கும் கிருஷ்ணகுமாரி



"காதலொருவனைக் கைப்பிடித்தேயவன் காரியம் யாவினுங் கைகொடுத்து மாதரறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி"........

என்றார் - பாரதியார்

இக்கருத்தை உள்ளடக்கியதுதான் நியூ இரா ப்ரொடக்ஷன்ஸாரின் முதல் சித்திரம்

# விடுதலை

டைரக்ஷன் ராமனாத் ☆ ஸ்டூடியோ பிலிம் சென்டர்

**பிப்ரவரி வெளியீடு**

நியூ இரா ப்ரொடக்ஷன்ஸ், சென்னை 26.



## ஜலதோஷத்தை அகற்றுங்கள்

2 விதங்களில் அதிசீக்கிரமாக!

இப்பொழுது நீங்கள் ஜலதோஷத்தை முன்னேக்காட்டிலும் அதிக சீக்கிரத்தில் நிறுத்தலாம். படுக்கப் போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை உங்கள் குழந்தையின் மார்பின் மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும், தடவித் தேயுங்கள். இந்த நவீன ஔஷதம் பலதேசங்களில் பிரக்யாதிபெற்றுள்ளது. ஏனெனில் அது ஜலதோஷத்தை இரண்டு விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.

1. அதன் குணப்படுத்தும் உஷ்ண மார்பிலுள்ள வலியை அகற்றுகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்துச் சத்து சருமத்தின் வழியாக உட்சென்று மார்பிலுள்ள சளியை வெளியேற்றுகிறது. மேலும், அதே சமயத்தில்...

2. அதன் நல்ல வாசனை சுவாசக் குழாய்களைச் சுத்தம் செய்கிறது.

நல்ல வாசனையுள்ள விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். உங்கள் குழந்தை இந்த வாசனையை இரவு முழுவதும் சுவாசிக்கிறது. அடைசலாயிருந்த அவனுடைய மூக்கு சுத்தமாகிறது. தொண்டைப்புண்ணுக்கு ஆறுதலளிக்கப்படுகிறது. இருமல் நிறுத்தப்படுகிறது. அநேகமாக மறுநாள் காலையில் ஜலதோஷத்தின் கொடுமை மறைந்துவிடுகிறது.

தடவித் தேயுங்கள்...

# விக்ஸ் வேபோரப்




"விக்ஸ்" மற்றும் "வேபோரப்" டிரேட் மார்க்குகள்.

320

யைக் கடைக் கண்ணால் பார்த்து உள்ளம் பொருமிப் பெருமூச்சு விட்டு என்ன பயன்!

மீனாக்ஷி பாவாடைக்கு மேலாக்கும் போட ஆரம்பித்ததும், காலரா ராமன் வரன் வேட்டையில் இறங்கினார். இரண்டு வருஷங்களில் சுமார் இருநூறு ஜாதகங்களை அலசிப் பார்த்து, தஞ்சை ஜில்லா மிராசுதாரின் பிள்ளையை நிச்சயம் செய்து, தடபுடலாகக் கல்யாணம் செய்தார்.

கல்யாணமாகி அடுத்த ஆறு மாதத்துக்குப் பிறகு ஒருநாள் மீனாக்ஷி வீட்டில் திடீரென்று எல்லோரும் அழ ஆரம்பித்தார்கள். விசாரித்ததில் அவள் கணவன் 'டைபாய்டு' ஜுரத்தில் காலமாகி விட்டதாகத் தெரிய வந்தது. உடனே என் கண்கள் கலங்கிற்று. மீனாக்ஷியின் தாயார் அழும் சத்தம் கேட்ட போதெல்லாம் என் கண்களில் கண்ணீர் வழிந்து ஓடும்.

"மீனாக்ஷியின் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் கடுமையாக இருந்தது. மாப்பிள்ளை ஜாதகத்திலும் செவ்வாய் தோஷம் இருந்தது. ஆனால் கேதுவும் ராகுவும் தனித் தனியாய் இருந்ததால், மீனாக்ஷியின் செவ்வாய் தோஷத்தை எதிர்த்து நிற்க முடியவில்லை" என்று 'காலரா ராமன்' சமாதானம் சொன்னதைக் கேட்டதும், என் உள்ளம் துடிதுடித்து விட்டது.

இந்த உண்மைச் சம்பவத்தைத் தெரிந்து கொண்ட பிறகு எனக்கு எப்படிச் சோதிடத்தில் நம்பிக்கை யிருக்கும்!

மங்களூர்
17—1—54 வி. வெங்கண்ணன்

★

என் வாழ்நாளில் மிக முக்கியமான நாள், என் குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த நாள். நான் அப்போது ஹைதராபாத்தி லிருந்தேன். என் மாமனாரிடம் பணம் இல்லாத காரணத்தினால் என் மனைவியை முதன் முதலில் பம்பாயில் என் மைத்துனன் கொண்டு வந்து விட்டுத் தன் கடமை முடிந்தது என்று திரும்பிப் போய்விட்டான். நான் ஹைதராபாத்திலிருந்து பம்பாய்க்கு வந்து அவளை அழைத்துக் கொண்டு சென்றேன். அன்று ஒரு ஆடம்பரமும் இல்லாமல் நான் என் மனைவியுடன் இல்வாழ்க்கையை ஆரம்பித்தேன். பல மாதங்கள் கழித்து என் தாயார், என் சொந்தக்காரர் ஒருவரிடம் இந்த விஷயத்தைக் கூறினார். நான் மனைவியை ஹைதராபாத்துக்கு அழைத்து வந்த தினம், செவ்வாய்க்கிழமை (நல்ல காரிய ஆரம்பத்துக்கு ஆகாத நாள்). மேலும் அன்று கேட்டை நட்சத்திரம். குடித்தனம் ஆரம்பித்தே இருக்கக் கூடாது. "கேட்டை, மூட்டை, செவ்வாய்க்கிழமை" ஒன்றுக்குமே ஆகாது என்பார்கள். இந்தக் கெடுதலான நாளில் என் மனைவியுடன் நான் இல்வாழ்க்கை தொடங்கியதால் எனக்கு ஒரு குறையும் வந்து விடவில்லை.

சோதிட சாஸ்திரத்தின் உண்மை எப்படியானாலும், தினசரி வாழ்க்கை நடத்துவதற்குச் சோதிடம் பார்ப்பது அவசியம் இல்லை.

நான் வார பலன்களைப் படித்துப் பார்த்து ஏமாந்திருக்கிறேன். அதனால் சோதிடம் பார்க்க வருகிற எவரிடமும் என் கையைக் காட்ட விரும்புவதில்லை. நமக்கு வர இருக்கும் நல்லதோ கெட்டதோ யாராலும் ஒன்றும் மாற்றிவிட முடியாது என்பதே என் அபிப்பிராயம்.

செகந்தராபாத்
16—1—54 எஸ். எம். சௌந்தரராஜன்

★

சென்ற ஆண்டு, நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதியபோது, எப்படியும் பரீட்சையில் தேறி விடுவேன் என்ற துணிவு இருந்தும், சோதிடப் பித்துக் காரணமாகச் சோதிட நிபுணர் ஒருவரைக் கண்டு கேட்டேன். அரைமணி நேரம் என் கையைப் பார்த்து விட்டு, உதட்டைப் பிதுக்கினார்! "ஆங்கிலத்தில் போய்விடும்!" என்று குறிப்பாகக் கூறினார். எனக்கு அழுகையே வந்து விட்டது. நிஜமாகவே பரீட்சையில்தோற்று விட்டது போல் வருத்தமுற்றேன்.

என் பரீட்சை முடிவு வந்தது. தினப்பத்திரிகையில் என் நம்பரைக் கண்டவுடன்தான் எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது! ஆங்கிலத்தில் எனக்கு '71 மார்க்' என்று பின்னர் தெரிய வந்தது.

இரண்டாவது சம்பவம். ஒரு வாரப் பத்திரிகையில் எனது ராசிக்கு, 'இலக்கியத் துறையில் பிரவேசிப்போருக்கு ஏமாற்றம் சம்பவிக்கும்' என்று போட்டிருந்தது. ஆனால் அதே பத்திரிகையில் என் கட்டுரை ஒன்று பிரசுரமாகி யிருந்தது!

இதில் இன்னொரு வேடிக்கை. இக் கட்டுரை பிரசுரமானதற்காகப் பணம் வந்து சேர்ந்த


உதவி நாடகம்

க்ஷயரோகத்தால் உடல் நலம் சீரழியும் நமது குழந்தைகளுக்காக வென்று தாம்பரம் அரசாங்க "ஸானடோரியத்தில்" புதிதாகக் கட்டப்படவிருக்கும் கட்டிட உதவி நிதிக்காக மேன்மைதங்கிய நமது சென்னை கவர்னர் ஸ்ரீ-ஸ்ரீ பிரகாசா அவர்கள் தலைமையின் கீழ்

அண்ணாமலை மன்றத்தில்

31 - 1 - 54 ஞாயிறு மாலை 6 மணிக்கு

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி நாடகக் குழுவினரால்

"கள்வனின் காதலி"

என்ற நாடகம் நடத்தப்படும்

கட்டணம்: ரூ. 25/-, ரூ. 10/-, ரூ. 5/-, ரூ. 3/-



டில்லித் தமிழ்ச் சங்கத்தினர் 'பொங்கல் விழாவை'ச் சிறப்பாகக் கொண்டாடினர். டில்லி சுகாதார மந்திரி டாக்டர் சுசீலா நய்யார் விழாவுக்குத் தலைமை வகித்தார். அதுபோது நடந்த நடன நிகழ்ச்சியில் ஸ்ரீமதி கிரிஜா பக்கிரிசாமி, குமாரி சுசீலா, யமுனா, பிரேமா, மீனா முதலானோர் கலந்து கொண்டனர். அவர்களையும் ஆசிரியர் பக்கிரிசாமியையும் தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய கலாசாரப் பணியையும் டாக்டர் சுசீலா நய்யார் பாராட்டினார். சங்கத் தலைவர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், டாக்டர் சுசீலா நய்யார் முதலியவர்களைப் படத்தில் காணலாம்.

அன்று ஒரு பத்திரிகை எனது நக்ஷத்திரத்துக்குப் 'பொருள் நஷ்டம்!' என்று பலன் போட்டிருந்தது.

எனது மூத்த சகோதரருக்கு, மூன்று மாதங்களுக்குள் கட்டாயம் வேலை கிடைக்காது என்று ஒரு சோதிடர் கூறிய மறுநாளே உத்தியோகத்துக்கு உத்தரவு வந்து சேர்ந்தது!

திருச்சி
18—1—54 டி. எஸ். வி. மணி

★

சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் நான் என் ஊரில் ரங்கூன் வைரம், தங்கம், வெள்ளி ஆகிய சில்லறை வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். ஒரு நாள் ஒரு ஜோஸ்யர் என்னிடம் வந்து தற்செயலாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது என் ஜாதகத்தை அவரிடம் காண்பிக்கும்படியான ஒரு சந்தர்ப்பம் நேர்ந்து விட்டது.

ஜோஸ்யர் என்னுடைய ஜாதகத்தைப் பார்த்ததும் இன்னும் இரண்டு மூன்று மாதத்தில் நான் எனது ஊரைவிட்டு வேறு ஊர் சென்று ஒரு ஸ்தாபனத்தில் சேர்ந்து வேலை செய்து ஜீவிக்க வேண்டிய வாய்ப்பு இருக்கிறதென்றும், அது கண்டிப்பாய் நடைபெறும் என்றும் சொன்னார்.

ஜோஸ்யரிடம் என் ஜாதகத்தைக் காண்பிப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்னால் சென்னையில் இருந்த எனக்குப் பழக்கமான நண்பர் ஒருவரிடம் என்னை அங்கு ஏதாவது கம்பெனியில் சேர்த்து விடும்படியாகச் சொல்லி யிருந்தேன்.

ஒரு மாதத்துக்குப் பிறகு அவரிடமிருந்து எனக்குப் பதில் கிடைத்தது. இன்னும் பதினைந்து தினத்தில் அவர் திருச்சி வருவதாகவும் அங்கே நான் வந்து அவரைச் சந்திக்கும் படியாகவும் அப்படியே சென்னைக்கு என்னைக் கூட்டிப் போய் வேலையில் சேர்த்து விடுவதாகவும் எழுதியிருந்தார்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்த பதினைந்தாவது நாள் வியாபாரத்துக்கு வைத்திருந்த ரூ. 375-யும் எடுத்துக்கொண்டு திருச்சி போய் அன்பரைச் சந்தித்துச் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு சுமார் நாலு மாதங்கள் தங்கியிருந்தேன். என்னை அழைத்துச் சென்ற அன்பர் வேலையில் சேர்த்து விடுவதாகச் சொல்லிக் கொண்டே ரூ. 150 வரை என்னிடம் வாங்கிக் கொண்டார். மாதங்களும் நாலு ஆகி விட்டன. என்னிடமிருந்த ரூபாயும் செலவாகிவிட்டது.

திடீரென்று ஒருநாள் என் நண்பர் சொல்லாமல் எங்கோ போய் விட்டார். ஒரு வாரம் தேடியும் ஆளைக் காண முடியவில்லை. கடைசியில் மீதமிருந்த பத்து ரூபாயில் சென்னையில் இருக்க முடியாது என்று என்னை உடனே என் சொந்த ஊருக்குத் திரும்பி வந்து விட்டேன். ஊருக்கு வந்ததும் வியாபாரம் செய்ய முதல் இல்லாததால் ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து விட்டேன். என்னுடைய அநுபவத்தைப் பொறுத்தவரை நான் சோதிடத்தை நம்பத்தானே வேண்டும்!

காரைக்குடி
16—1—54 ரா. கே. சோமசுந்தரம்

★

ஜோதிஷ அனுபவத்தைச் சுருக்கமாக எழுதும் நேயர்களின் அபிப்பிராயத்திலிருந்து, ஜோதிஷத்தின் உண்மையை அறிந்துவிட முடியாது. இது யானையைக் கண்ட குருடர்கள் கதையாகவோ, பச்சோந்தியின் நிறத்தைக் கண்டவர்கள் கூறும் கூற்றாகவோ முடியும்.

ஜாதகப் பலன் நன்றாக இருந்து கோசார பலனும் நன்றாக இருந்தால் யோக பலன் ஏற்படுகிறது.

தற்காலம் பத்திரிகைகளில் வெளி வருவது கோசார பலன். இதை மட்டிலும் நம்பி வாழ்க்கையை நடத்துவது பிசகாகும். ஜாதக பலனோடு கோசார பலனையும் சேர்த்து மதிப்பிடவேண்டும். தசா புத்தி ரீதியாக ஜாதக பலன்களை அறிந்து கொண்டவர்கள் கோசார பலன்களை அனுசரிப்பது பிரயோசனத்தை அளிக்கும்.

ஜோதிஷ சாஸ்திரத்தையே முழுவதும் நம்பிக் காரியங்கள் செய்வதென்பது முடியாத காரியம். ஒவ்வொன்றுக்கும் நாள் நட்சத்திரம் பார்ப்பது என்றால், மிகவும் படித்த வைத்தியன் ஒருவன் காய்கறிகள் வாங்கப் போய், எல்லாவற்றுக்கும் ஒரு தோஷம் கற்பித்து ஒன்றும் வாங்காமல் வீடு திரும்பிய கதையாக முடியும்.

தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதில் ஜோதிஷ பலன் பார்க்கத் தேவை

# பார்!



# காலிகோ
# பாப்ளின்
# இப்பொழுது

SANFORIZED REGD

ஸான்ஃபோரைஸ்ட்

(சுருக்கப்பட்டிருக்கிறது)

தி காலிகோ மில்ஸ், அஹமதாபாத்

SHILPI CA/101

இல்லை. புதியதாக ஏதேனும் ஒரு காரியத்தைத் தொடங்கவோ, முக்கியமான சில காரியங்களுக்கோதான் பலன் பார்க்க வேண்டும்.

“தகப்பனுக்கு ஆபத்து. உடனே புறப்பட்டு வா!” என்று தந்தி வந்தால் பிரயாணத்துக்கு நல்ல வேளை பார்க்க முடியுமா! மிக ஆபத்தில் உள்ள ஒரு நோயாளிக்கு நல்ல நாள் பார்த்துத்தான் மருந்து கொடுக்க வேண்டுமென்றால் நடக்கக் கூடிய காரியமா!

ஜோதிஷத்திலிருந்து அடுத்த நிமிஷம் யாருக்கு என்ன நடக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. பொதுவாக நன்மை உண்டா, தீமை உண்டா என்று அறியலாம். நல்ல காலம் என்றால் தீவிர முயற்சி செய்து காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கெட்ட காலம் என்றால் செய்யும் காரியங்களில் ஜாக்கிரதையையும், பொறுமையையும் கைக்கொள்ள வேண்டும். இதுதான் ஜோதிஷத்திலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயம்.

ஆங்கரை
17—1—54 சோதிடர் பி.எஸ். சந்தானம்

★

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்பில் சோதிடம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். “யான் யானை கட்டி வாழ்வேன்” என்று சோதிடர் கூறினார் என்றும், “அம்மாதிரி வாழவில்லை! தலைமை வகித்த மாநாடுகள் ஊர்வலங்களிலே முன்னாக யானை அணி செய்து சென்றதுண்டு” என்றும் எழுதியுள்ளார். அவர்கள் சோதிடத்தை ஓர் கலையாகக் கருதுகிறார்.

இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் சபையில் ஓர் சோதிடர், ‘இளையவனே பட்டத்துக்கு உரியவனாவான்’ என்றாராம். கேட்ட இளவரசன் அது முதல் துறவியானான்; அந்தம் இல் இன்பம் தரும் வீட்டுலகத்துக்கு அரசராக இளங்கோவடிகளானார். பட்டாபிஷேகம் செய்வித்து நாடாள விட வேண்டுமென்று வசிட்ட மகா முனி குறித்த நல் முகூர்த்த வேளையே இராமனைக் காட்டுக்கு ஓட்டியது; சோதிடப் பலனைப் பார்த்தீர்களா!

“நாடா ளுதற்கு வசிட்டனிடு நன்னய நாள்
காடாளும் நாளாகக் காட்டியதே—வீடாளும்
தொல்லாழி யான்தனையும் தூக்காது வென்ற
வெல்லாது யாரை விதி?” [தென்றல்

என்று பழம் பாடல் பகர்கின்றது. “தம் கடமையைச் செய்யாதவரே இலக்கண நூலையும் சோதிடத்தையும் பார்த்தும் கேட்டும் பிதற்றும் அறிவிலார்” என நாலடியார் நவில்கின்றது:

நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தம்கருமம் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமும் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும்
பித்தரின் பேதையார் இல். —நாலடியார்

(சத்தம்-இலக்கண நூல்; பித்தரின்-பித்தரைக் காட்டிலும்)

உத்தமபாளையம்
17-1-54 நி. பொ. நாராயணசாமி
(தமிழாசிரியர்)

★

தினப் பலன், வாரப் பலன், மாதப் பலன்கள் இவைகளை எல்லாம் கண்டபடி பொறுப்பின்றிப் பலரும் எழுதுவதும் இதைப்பற்றித் தீர யோசித்து ஒரு முடிவுக்கு வராமல் பத்திரிகைகளில் வெளியிடுவதும் கொஞ்சமும் சரி யல்ல.

இவைகளால் பலனடைபவர்கள் கிண்டிரேஸில் ட்ரிபிள் வாங்குபவர்கள் போலும், மயக்க மருந்துகளால் பேரானந்தத்தில் மூழ்கித் திளைப்பவர்கள் போலுந்தான் இருக்க வேண்டும்; இருக்க முடியும். இதனால் ஜோதிஷத்தின் நிஜத்தன்மையே கெட்டுப் போய் விடுகிறது.

ஜோதிஷ சாஸ்திரத்திலுள்ள பல முக்கிய விஷயங்கள் மூலபலங்கள் போன்றுள்ளவைகள். தேவாம்ருதம் போன்ற திவ்ய ஔஷதமாகும்.

அதிலேயே ஒரு பகுதியாகச் சொல்லப்பட்டுள்ள இந்தக் கோசார பலன்கள் ஒரு சில சமயங்களில் உபயோகப்படுகிற, உபயோகப் படுத்த வேண்டியிருக்கிற மயக்க மருந்துகளைப் போன்றவை.


இதை யறியாது கோசார பலன்களையே சோதிடம் என்று சில சோதிடர்கள் பாவித்துக் கொண்டு பிரமாதப்படுத்திப் பலனை மனம்போனபடி எழுதுவதும் இத்தகையவைகளை ஜோதிஷப் பகுதி எனப் பெயரிட்டு வெளியிடுவதும் மிகவும் வருந்தக்கூடிய விஷயமாகும்.

சென்னை 17 காழியூர் ஜோதிஷம்
16—1—54 சீனிவாஸாச்சாரியார்

★

சோதிடத்தில் பலன் உண்டா என்பதற்கு என் குடும்ப வாழ்க்கையில் நடந்த இரண்டு சம்பவங்களைப் பற்றிக் கூறுகிறேன். செல்வந்தராகிய என் தகப்பனார் ஐம்பதாவது வயதில் என் தாயாரின் தமக்கையாகிய பெரிய தாயாரை மணந்தார். பின்பு குழந்தைப் பேறு இல்லையென்று என் தாயாரை ஐம்பத்து மூன்றாவது வயதில் மணம் முடித்துக் கொண்டார். இரு மணத்தின் போது பிரபல சோதிட நிபுணர்களால் ஜாதகம் பார்க்கப் பட்டது. அவர்கள் ‘செட்டியாருக்கு வயது எண்பது வரையில் இருக்கிறது’ என்று கூறினர். ஆனால் விதி சதி செய்து விட்டது. என் தாயாரைக் கரம் பற்றிய மூன்றே ஆண்டுகளில் என் தந்தையார் இவ்வுலக வாழ்வை நீத்தார். மற்றுமொரு சம்பவம் நான் பருவமடைந்த பிறகு என் திருமணத்தின் போது நடந்தது. நான் புஷ்பவதியாகிய நட்சத்திரம் மூலம் என்றும் ஜாதகப்படி மாமனுக்கு ஆகாதென்றும் சோதிடர்கள் பலன் சொன்னதில் வியப்பொன்றும் இல்லை. என் மாமியார் இஷ்டப்படி எனக்கு விவாகம் நடந்து விட்டது. நாளது வரை என் மாமனார் உயிருடனும் திடகாத்திரத்துடனும்தான் இருக்கிறார். கணவரின் கரம் பற்றிய இரண்டு ஆண்டுகளில் எனக்குப் பெண் குழந்தை பிறந்தது. அதற்கும் நீண்ட ஆயுள் என்று ஜாதகம் பார்த்துக் கூறினார்கள். ஆனால் நோயுற்று குழந்தை ஒரு வருட இறுதியில் உயிர் நீத்தது. எனவே, கணவன் மனைவியரின் ஒற்றுமை யின்மைக்காகவும் அல்லது மக்கட்பேற்றை விரும்பியும் மற்றும் ஒரு குடும்பத்தில் வரவுக்கு மீறிச் செலவு ஆவது குறித்தும் எதிர்காலத்தில் செல்வந்தர்களாகும் ஆசையாலும், உத்தியோக உயர்வு வேண்டியும், லாட்டரியில் வரும் பணத்தை எதிர்பார்த்தும் சோதிடத்தைப் பார்த்துப் பரிகாரம் செய்து கொள்ள நினைப்பதும், சனீசுவரனுக்கு அர்ச்சனை செய்வதும் முழுதும் அபத்தம், கூடாத காரியம் என்பது எனது முடிவான தீர்மானமாகும்.

அமராவதிபுதூர்
20-1-54 ஆர். எம். அமிர்தவல்லி



## உங்கள்

## குழந்தைகள் எளிதில்

## சோர்வடைகின்றனரா?

சாதாரண ஆரோக்கியமான குழந்தைகள் ஓடி ஆட விரும்பும். இதனால் அவர்களின் சக்தி துரிதமாக செலவடைகிறது. அன்றாடம் செலவாகும் சக்தியை ஈடு செய்து வளர்ச்சி தர சாதாரண உணவு போதுமானதல்ல. குழந்தைகள் சுறுசுறுப்பின்றி வாட்டமுற்றிருந்தால் அவர்களின் போஷணைக் குறைவை நிவர்த்திக்க, அவர்களுக்கு புஷ்டியான, ஜீரணமாககூடிய அதிகப்படியான போஷணை தேவை.. ருசி மிகுந்த ஓவல்டின் சுறுசுறுப்பையும் வலிமையையும் அளிக்கும். பழுத்த பார்லிமால்ட், ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், சிறந்த கொக்கோ, இயற்கையான பாஸ்பேட்டுகள், பி & டி விடமின்கள் சேர்ந்து. அது உன்னத குடும்ப உணவு பானமாக விளங்குகிறது. போலிகளைத் தள்ளி விடுங்கள்.




விநியோகஸ்தர்கள் :


கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

# ஓவல்டின்

**உறுதியான வலிமையான வளர்ச்சிக்கு !**

OV.593

# 14 நாட்களில் மக்ளீன்ஸ் உதவியால் அதிக வெண்மையான பற்கள்



ஏற்கனவே ஆயிரக் கணக்கானவர்களால் ஆமோதிக்கப்பெற்றது

இப்பொழுது 14 தினங்களுக்குள் அதி வெண்மையான பற்களை நீங்களும் பெறலாம். இதை உறுதியாகக் கொள்ளுங்கள் —பிரதிதினமும்—தினசரி இருமுறை உங்கள் பற்களை நன்கு மக்ளீன் செய்யுங்கள். ஆரம்பமுதலே, மக்ளீனிலுள்ள விசேஷ பொருள்கள், மிருதுவாகவும் அபாயமில்லாமலும், உங்கள் பற்களில் உள்ள அவலட்சணமான கறைகளை போக்கி, அவைகள் இயற்கையான ஒளி வீசச் செய்வதைக்காண்பீர். 14 நாட்களுக்குள் — அல்லது அதற்கும் குறைவாகவேகூட நீங்கள் பெருமைப்படக்கூடிய பற்களை அடைவீர்கள் — மக்ளீன் வெண்மையான பற்கள், ஆரோக்கியமான பற்கள்.

க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

பற்களை வெண்மையாக்குவதில் உலகில் மிகச் சிறந்த மக்ளீன்ஸ் பேராக்ஸைட் பற்பசை – இயற்கை அளிக்கும் சுத்தமாக்கும் நறுமணமான க்ளோரோபில் சேர்த்தும் கிடைக்கும்.




# மக்ளீன்ஸ்

## பெராக்ஸைட் பற்பசை

பற்களை அதிக வெண்மையாக்குகிறது.

MTY 32 - TAM



# அவள் அதிர்ஷ்டம்

ஜயலக்ஷ்மி

"இதோ பார், அம்மா! நீ இங்கே வந்து இன்றோடு ஐந்து நாட்கள் ஆகி விட்டன. நாளைக் காலையில் நீ வீட்டுக்குப் போய்விட வேண்டும்" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள் நர்ஸ்.

செல்வியின் கண்களில் கண்ணீர் துளித்தது. 'நாளைக்கு எங்கே போவது? வீடேது, வாசலேது? இன்னும் இரண்டு நாளாவது இங்கு தங்கினால் தேவலை. ஆனால் இது என்ன தர்ம சத்திரமா? என்னைப்போல இன்னும் எத்தனை பேரோ?' என்று எண்ணினாள் செல்வி.

ஆறு மாதங்களாகத் தன் ஒரு வயிற்றை வளர்ப்பதே கஷ்டமாக இருந்தது. இப்போது இன்னொரு ஜீவனும் சேர்ந்து விட்டது. இந்தப் பச்சை உடம்பில் வேலை செய்து கூட நாலு காசு சம்பாதிக்க முடியாதே! இதற்கென்ன செய்வது என்று மனங் கலங்கினாள். அவளுடைய கண்களில் கோத்து நின்ற நீர்த்திரையில் சென்று போன நாட்களில் நிகழ்ந்தவைகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. சிந்தனைச் சிலந்தி வேகமாக வலை பின்னத் தொடங்கியது.

செல்விக்குத் தன் தாய் தந்தையர்களைத் தெரியாது. ஆனால் தாத்தாவைத் தெரியும். இருவருமாக ஒரு ஓலைக் குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். செல்விக்குப் பன்னிரண்டு வயது வரையில் அவளை அவளுடைய தாத்தா எப்படியோ காப்பாற்றி விட்டார். அதற்குப் பிறகு அவரால் பாடுபட முடியாமற் போய் விட்டது. வீட்டிலேயே உட்கார்ந்து விட்டார். அன்று முதல் கிழவரையும் தன்னையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுச் செல்வி கருவேப்பிலை விற்க ஆரம்பித்தாள். அதில் அன்றாடம் கால்படி அரிசி கிடைக்கும். தாத்தா வீட்டிலிருந்தபடியே முடைந்து தரும் கூடை, முறங்களையும் செல்வி விற்று வருவாள். ஏதோ ஒரு மாதிரியாகக் காலத்தைப் பிடித்துத் தள்ளினார்கள் இருவரும்.

இந்த நிலையில் செல்வியின் உடலிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. காலமும், பருவமும் தத் தம் கை வன்மைகளை யெல்லாம் அவள்மீது சொரிந்தன. அதன் பயன்? மாநிறம்தான் என்றாலும் பார்க்கப் பரவசமூட்டும் வாளிப்பான உடற்கட்டும், அகன்ற விழிகளும், சங்குப் போன்ற வெண் பற்களும், சுருண்ட கருங் கூந்தலும் எந்த இளைஞனையும் கிறு கிறுக்கச் செய்யும் சக்தியைப் பெற்றிருந்தன. ஆனால் செல்விக்கு இந்த அழகும் பருவமும்தான் துன்பத்தைக் கொடுத்தன.

கண் சிமிட்டும் காலிகளிடமிருந்தும், பல் இளிக்கும் பயில்வான்களிடமிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மிகவும் கஷ்டப்பட்டாள் செல்வி. இந்தச் சமயத்தில் கிழத் தாத்தாவும் காலமாகிச் செல்வியை ஆதரவற்றுப் போகச் செய்துவிடவே சிறகொடிந்த பட்சியானாள் செல்வி.

அதற்காகக் கருவேப்பிலை விற்பதை மட்டும் அவள் நிறுத்தவில்லை. அதுதானே அவளுக்கு உணவளித்து வந்தது.

கிழவர் இறந்துபோய் ஒரு மாதம் கூட ஆகியிருக்காது. ஒருநாள் ஒரு வாடிக்கைக்காரர் வீட்டில் செல்வி கருவேப்பிலை கொடுக்

கக் காத்துக் கொண்டிருக்கும்படி நேர்ந்தது. வாசல் திண்ணையின் அருகேயே நின்றுகொண்டிருந்தாள். 'கொத்துமல்லி, கருப்பிலியோ' என்று நான்கு முறை குரல் கொடுத்தும் வீட்டிற்குள்ளிருந்து யாரும் வெளியே வரவில்லை. அப்போது தெருவில் "பேப்பர் வாங்கறது, பத்திரிகைகள், பழைய புஸ்தகம் வாங்கறது. பழைய பேப்பர் வாங்கறது" என்று கத்திக் கொண்டே வந்த வாலிபன் செல்வி நின்று கொண்டிருந்த வீட்டு வாசலுக்கு வந்து "சாமீ! பேப்பர் இருக்கா? பேப்பர்?" என்று கேட்டான்.

அதற்கு வீட்டிற்குள்ளிருந்து வெளிப்பட்ட ஒரு மாது "இப்போது இல்லே. அடுத்த வாரம் வா, முருகா!" என்று கூறிவிட்டுச் செல்வியிடமிருந்து கருவேப்பிலையையும் வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அவ் வீட்டை விட்டுப் புறப்பட்ட செல்வி மறுபடியும் "கொத்து மல்லீ கருப்பிலியோ" என்று கூறியபடி நடந்தாள். அவள் ஒவ்வொரு தடவை கூவும்போதும், பின்னால் வந்து கொண்டிருந்த வாலிபன் "பேப்பர் வாங்கறது, பேப்பர்" என்று உறக்கக் கூவிக்கொண்டே வந்தான்.

திகைப்புடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே தன் குடிசைக்கு வந்து சேர்ந்தாள் செல்வி. குடிசைக்குள் நுழையும்போது மறுபடியும் ஒரு தடவை பின் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அவளைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த முருகன் வைத்த கண் வாங்காமல் அவளையேபார்த்துக் கொண்டு சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். வெட்கமும் பயமும் அவளை முற்றுகையிடவே சடக்கென்று குடிசைக்குள் நுழைந்து விட்டாள்.

இப்படியாக ஒருவாரம் சென்றது. இந்த மௌன நாடகமும் தினமும் நடந்துகொண்டு தானிருந்தது. எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படியே நடந்து கொண்டிருக்க முடியும்? ஆரம்பம் ஏற்பட்டால் முடிவும் உண்டல்லவா? அந்த வேளையும் வரத்தான் செய்தது.

அன்று செல்விக்கு அரை ஆழாக்கு அரிசி கூடக் கிடைக்கவில்லை. நடந்து நடந்து கால்கள்தான் களைப்படைந்தன. பகல் பன்னிரண்டு மணியிருக்கும். வெய்யிலின் சூடு பொறுக்காமல் கால்கள் தவிக்க, பசி வயிற்றைக் கிள்ள, உடல் அசதியால் துவள, சலித்த உள்ளத்துடன் தளர் நடை நடந்து வந்து கொண்டிருந்தாள் செல்வி.

கால்களின் வலி அதிகமாகிப் பொறுக்க முடியாமற் போகவே அங்கு இருந்த ஒரு தூங்கு மூஞ்சி மரத்தடியில் அசந்து போய் உட்கார்ந்து விட்டாள்.


முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்த செல்வி எதிரில் ஆளரவம் கேட்கவே முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். அங்கு நின்றுகொண்டிருந்தவனைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு. உடனே பதற்றத்துடன் எழுந்தாள்.

மிரண்டு தவிக்கும் அவளுடைய விழிகளையும், பதறும் உடலையும் கண்ட, காகிதம் விலைக்கு வாங்கும் முருகன் முகத்தில் புன்னகையை வருவித்துக் கொண்டவனாய், "ஏன் அப்படிப் பயப்படுகிறாய்? நான் என்ன பேயா? பிசாசா?" என்று அன்பு ததும்பக் கேட்டுச் சிரித்தான்.

அவனுடைய வார்த்தைகளில் தொனித்த கனிவு அவன் காரியவாதி என்பதை அறிவுறுத்தியது. உற்று நோக்கினாள் செல்வி அவனை ஒரு கணம். தைரியத்தை வலுவில் வரவழைத்துக் கொண்டு சற்றுத் துடுக்காகவே "பேயையும் பிசாசையும் கூட நம்பி விடலாம். ஆனால் உங்களைப் போன்ற ஆம்பிள்ளைங்களைத்தான் நம்பக் கூடாது" என்று வெறுப்புடன் மொழிந்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"எங்கேயோ ஒருவன் மோசக்காரனாக இருந்தால், அதற்கு எல்லா ஆம்பிள்ளைங்களையுமே அப்படி நெனச்சுப்பிடறதா?" என்று நயமாகவே கேட்டான் முருகன்.

"சரிதான். உன்னோடு எனக்கென்ன பேச்சு!" என்று அசட்டையாகக் கூறிய



செல்வி கூடையை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு போகத் தலைப்பட்டாள்.

"அட, சித்தே இரு புள்ளே!" என்று கூறிய வண்ணம் அவளெதிரில் போய் நின்றான் முருகன்.

"இதென்ன இது! பெரிய தொந்தரவா கப்போச்சு!" என்று வெகுண்டாள் செல்வி.

"இதோ பாரு, நீயும் அனாதை! நானும் அனாதை! நானுவது ஆம்பிள்ளை. நீ இப்படி இந்த வயசிலே ஆம்பிள்ளைத் துணையில்லாமே தனியாக இருந்தால் உனக்குக் காலிகளாலே தொந்தரவு ஏற்படத்தான் செய்யும். அதனாலே நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. நாளைக்கே நான் ஒரு தாலியும் மஞ்சக் கயிறும் வாங்கிட்டு வரேன். மாரியாத்தாள் கோயிலண்டைப் போய்ச் சாமி கும்பிட்டு நம்ப கலியாணத்தையும் முடிச்சிக்குவோம். என்ன சொல்றே?" என்று அழுத்தந் திருத்தமாகக் கேட்டான் முருகன்.

அவன் கூறியதனைத்தையும் செவியுற்ற செல்வி ஆச்சரியத்தால் வாயடைத்துப் போய் நின்றாள். அவளுடைய நீண்ட நேர மௌனத்தைத் தனக்குச் சாதகமான பதிலாகக் கொண்டான் முருகன்.

"சரி! அப்போ நீ வீட்டுக்குப் போய் யோசனை செய்து பாரு. நான் சாயங்காலம் உன் வீட்டண்டை வரேன்!" என்று கூறிச் செல்வியை அப்படியே விழுங்கி விடுவது போல ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு வெற்றி கொண்ட வேந்தனைப் போலக் கம்பீர நடைபோட்டு நடந்து சென்றான் முருகன்.

குடிசைக்கு வந்த செல்வி, ஏதோ இருந்ததைக் கொண்டு தன் கால் வயிற்றை நனைத்துக் கொண்டு, கட்டையில் தலையை வைத்துப் படுத்துக் கொண்டாள். அவளுடைய மனம் முருகன் கூறிய வார்த்தைகளையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அவன் கூறியதும் நியாயமாகவே பட்டது. 'எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஆண் பிள்ளைத் துணையில்லாமல் ஒண்டிக் கட்டையாகக் காலந்தள்ள முடியும்? தனியாக இருந்து கண்ட கண்ட பசங்களுக்கெல்லாம் பயந்து சாவதைவிட ஒருவனைக் கட்டிக்கிட்டால் துணைக்குத் துணையும் ஆச்சு; காவலாகவும் இருக்கும். அப்புறம் ஒரு பயலும் நம்ம கிட்ட வாலாட்டவும் முடியாது. நான் என்றைக்கும் கன்னியாக இருக்கவும் முடியாது. இந்தப் பேப்பர்காரரும் பார்க்கறத்துக்கும் நல்லாத்தான் இருக்காரு. இவரையே கட்டிக்கிட்டால்தான் என்ன? என்று எண்ணிய செல்விக்குக் கலியாணம் என்று நினைத்த மாத்திரத்தில் அது கற்கண்டுக் கட்டியைப் போல் இனிப்பைத் தருவதாகத் தோன்றியது. அந்த இன்ப நினைவுகளிலேயே மனம் ஒன்றிப் போய்க் கற்பனை உலகில் பறந்து கொண்டிருந்த அவளை எப்படியோ தன் வசப்படுத்திக் கொண்டாள் நித்திரையரசி.



★

"செல்வீ......" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்ட செல்வி கலவரத்துடன் புடவையை வாரிப் போட்டுக் கொண்டு எழுந்திருந்து வாசற் பக்கம் நோக்கினாள்.

முண்டாசும் தலையுமாக, வெள்ளைப் பற்கள் பளிச்சிட, புன்னகை பூத்த பிரசன்ன வதனத்துடன் நின்றிருந்தான் முருகன்.

அந்தி செவ்வானத்தின் செக்கர் ஒளியில் ஒய்யாரமாக நின்றுகொண்டிருந்த முருகனின் அப்போதையத் தோற்றம் செல்வியை மனந் தடுமாறச் செய்தது. பெண்மைதான் பணிந்து கொடுத்தது. லஜ்ஜை மேலிடத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் செல்வி.

நிசப்தம் நிலவிய பாலத்தைப் பக்க பலமாகக் கொண்ட முருகன் சுவாதீனத்துடன் குடிசைக்குள் நுழைந்து, "இதோ பார், செல்வி!

தாலிகூட இப்பவே வாங்கியாந்துட்டேன். உன்னிஷ்டம் என்ன?" என்று வினவியபடி ஒரு மஞ்சள் கயிற்றில் கோத்திருந்த வெள்ளித் தாலியைக் கையில் தூக்கிப் பிடித்துக் காட்டினான் செல்வியிடம்.

தன்னுடைய அகன்ற விழிகளை மலர்த்தி ஆச்சரியத்துடன் பார்த்தாள் செல்வி. முருகனின் கையில் பளிச்சிட்ட தாலி கோத்த சரட்டைக் கண்டதும், "உங்களை எப்படி நம்புகிறது?" என்றாள் மென்று விழுங்கியபடி செல்வி.

"இதோ! இந்தத் தாலிதான் சாட்சி! நம்ப கண்ணாலம் கட்டிக்கிற இடம் என்ன சாமான்யமானதா? மாரியாத்தாள் என்னைச் சும்மா விட்டுவிடுவாளா?"

"அப்போ என்னை என்ன செய்யச் சொல்லுறே?" என்று கேட்ட செல்வியை வெட்கம் கப்பிக் கொண்டது.

"நாளைக்கு வெள்ளிக்கிழமை. கருக்கல்லே எழுந்து குளிச்சு முழுகிப்பிட்டுக் கோயிலண்டை வந்து விடு!" என்று முடிவாகக் கூறிவிட்டு யோக்கியனாக விடைபெற்றுச் சென்றான் முருகன்.

பிறகென்ன? முருகன் கூறியபடி மறுநாளே மாரியாத்தாள் கோவிலின் சன்னதிக்கெதிரில் நின்று அவர்களிருவரும் புருஷன் மனைவியானார்கள். பூசாரி கொடுத்த குங்குமத்தை இருவரும் பயபக்தியுடன் நெற்றியில் இட்டுக் கொண்டார்கள்.

புதுமை தந்த இன்பத்தில் இருவரும் வான வெளியில் பறந்து இன்பம் என்னும் காதற் பொய்கையில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையிலேயே இரண்டு வருஷம் சென்றது.

ஒருநாளிரவு சர்க்கஸ் பார்க்கச் செல்லுவதாகக் கூறி விட்டுச் சென்ற முருகன் பிறகு திரும்பி வரவேயில்லை.

நாழிகை நாட்களாகவும், நாட்கள் மாதங்களாகவும் மாறிச் சென்று கொண்டிருந்தன. முருகன் வீட்டை விட்டுச் சென்றபோது செல்வி மூன்று மாதம் கருவுற்றிருந்தாள். அந்த நிலையில்தான் அவளை அனாதரவாக விட்டுச் சென்று விட்டான் முருகன்.

அது முதல் இந்த ஆறேழு மாதங்களாகச் செல்வி அனுபவித்த கஷ்டம்? அம்மம்மா! நினைக்கவே பயமாக இருக்கிறது. வறுமையின் கொடுமையும், உடலின் பாரமும், மனத்தின் வேதனையும் ஒன்று கூடி அவளைச் சித்திரவதை செய்தது.

முருகனின் இடத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுவதாகக் கூறிக்கொண்டு செல்வியை அணுகிய முரடர்களின் எண்ணிக்கை கொஞ்சமானதா? அவர்களிடமிருந்து தன் மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காகப் பேதை செல்வி பட்ட பாடுதான் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியுமா? இந்தப் பரந்த உலகில் ஒரு அபலைப் பெண் தன்னந் தனியாக மானத்தோடு வாழ முடியாத அவலநிலையல்லவா இன்றைய உலகில் ஏற்பட்டிருக்கிறது. இதென்ன கொடுமை!

முடிவில் ஒரு துன்மார்க்கன் செல்வியின் பத்தினித் தன்மையைக் கண்டு உள்ளங் கொதித்துப் போய் அவளுடைய குடிசையின் மீது ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்து எறிந்து விட்டுச் சென்றான். அதன் பலன்? செல்வி நிற்க நிழலுமின்றி, ஆதரிப்பார் யாருமின்றி வயிறும் பிள்ளையுமாய்த் தெருத் தெருவாய் அலைந்தாள்.

ஒரு நாள் அந்தி மங்கும் வேளையில் உள்ள வேதனையுடன் உடல் வேதனையும் செல்விக்குச் சேர்ந்து கொண்டது. ஆம், அவளுக்குப் பிரசவவேதனை கண்டு விட்டது. தட்டுத் தடுமாறிக் கொண்டு தர்ம ஆஸ்பத்திரியில் சேர்ந்தாள். அன்பு அலட்சியமானாலும் கடமை கைநீட்டி ஆதரித்தது. சிறிது நேரத்தில் செல்வி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். தன் உயிருக்குயிரான அந்தப் பச்சைக் குழந்தையின் பால் வடியும் முகக் காந்தியில் தன் துக்கத்தைச் சிறிது மறந்திருந்தாள் செல்வி.

நாட்கள் சில நகர்ந்தன. அன்று நர்ஸ் வந்து அடுத்த நாள் காலையில் இவ்விடத்தை விட்டு எங்கேயாகிலும் சென்று விடத்தான் வேண்டும் என்று எச்சரித்து விட்டுச் சென்றதை நினைத்த மாத்திரத்தில் செல்வியின் உடம்பு பயத்தால் கிடுகிடுத்தது.

குழந்தையை மார்புடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டு மெள்ள மெள்ள நடந்து பிரசவ விடுதியிலிருந்து வெளிப்பட்டு வீதியில் செல்லத் தொடங்கினாள் செல்வி. அவளுக்கேது புகலிடம்? பூமித் தாய் அவளை அசட்டையாகத் தள்ளாது பாரபட்சமற்ற முறையில் தாங்கிச் சுமந்ததுதான் இயற்கை அவளுக்கு அளித்த பரிசு.

பிச்சை எடுத்துப் பழக்கமில்லை செல்விக்கு. கையை நீட்ட மனங் கூசிற்று. கண் பார்வையுள்ளவர்கள் பார்வையை மறைத்துக்கொண்டும், அங்க அமைப்புகள் சரிவர இருந்தும் நொண்டி வேடம் போட்டுக் கொண்டும், உடம்பைப் பல கோணலாகக் கோணிக் கொண்டும், கும்பலில் இடித்துத் தள்ளிக் கொண்டும், கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டும் பிச்சை எடுக்கும் சாமர்த்தியசாலிகளுக்கே பிச்சை போடாத புண்ணியவான்கள், உள்ளமும் உடலும் வெட்கிக் கூச, கூனிக் குறுகிக் கொண்டு மூலையில் ஒதுங்கி நிற்கும் செல்விக்கா வலிய வந்து பிச்சை போடப் போகிறார்கள்?

பட்டினி கிடந்தே பத்து நாட்களை எப்படியோ தள்ளிவிட்டாள் செல்வி, குழந்தையுடன். உழைத்து ஊதியம் பெறவும் உடலில் உரமில்லை. இருந்த பலத்தையும் 'பால்' என்னும் உருவில் உறிஞ்சி விட்டது மகவு.

சிந்தித்தாள், வாழ வழி தெரியாமல். எவ்வளவு நேரம் சிந்தனையில் லயித்திருந்தாளோ தெரியாது. ஆனால் மனத்தில் மட்டும் ஒரு முடிவு கண்டுவிட்டாள்.

குழந்தையை வாரி யெடுத்துக் கொண்டு வெறி பிடித்தவளைப் போல நடந்தாள். நடையில்தான் என்ன பதட்டம்!

சாட்சியாக நிறுத்திச் சதிபதிகளான மாரியாத்தாள் கோவிலை அடைந்தாள். பலி பீடத் தருகில் கிடத்தினாள் பச்சிளம் பாலகனை. உள்ளத்தில் குமுறும் வேதனையாகத் தெறித்து விழுந்தன சொற்கள்.

"மாரியாத்தா! உன்னை நம்பித்தான் நான் அவரிடம் கழுத்தை நீட்டினேன். இதுவரை பட்ட தொல்லைகள் போதும், தாயே! இதோ இருக்கும் குழந்தையை இனி நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறி விட்டுக் கரம் குவித்து வணங்கினாள் செல்லி. பிறகு குழந்தையைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் 'விடுவிடு' வென்று நடந்தாள்.

அப்போது கொஞ்சமும் எதிர்பாராத வகையில் "செல்லி..." என்றலறிக் கொண்டு அருகில் வந்து நின்றான் முருகன். அவனைக் கண்டதும் அப்படியே அசைவற்று ஆச்சரியத்துடன் நின்றுவிட்டாள் செல்லி. அவளுடைய உள்ளத்தில் முருகன் மீது அளவு கடந்த வெறுப்பும் ஆத்திரமும் ஏற்பட்டு அவளை எரிமலை யாக்கிற்று. நொந்த உள்ளத்தினின்றும் வெந்தணல் போன்ற வார்த்தைகள் வெளிவந்தன.

"ஏன்! மாரியாத்தா உங்களை ஒண்ணும் செய்து விடவில்லையே?" என்றாள் செல்லி.

"ஒண்ணும் செய்யல்லியா? இதோ பாரு! என் காலை ஒடித்துப் போட்டு விட்டாளே?"

"என்ன?!"

"ஆமாம் செல்லி! உன்னை ஒண்டியாகத் தவிக்க விட்டுட்டுப் பணம் சம்பாதிக்கனுமின்னு சர்க்கஸ்காரங்களோடே சேர்ந்து ஓடிப் போனேன். அங்கே கொஞ்சம் கொஞ்சம் வித்தை கத்துக்கிட்டு ஆடினேன். ஒரு நாள் தவறிப் போய் உயரத்திலே யிருந்து கீழே விழுந்துட்டேன். கால் நொண்டியாய்ப் போச்சு. இனிமேல் நீ ஒரு வேலைக்கும் லாயக் கில்லைன்னு சொல்லி என்னை வேலையிலே யிருந்து நீக்கிப்புட்டாங்க. பிறகு, கையிலே யிருந்த துட்டை யெல்லாம் எடுத்துக்கிட்டு நேரே நம்ப குடிசைக்கு வந்து பார்த்தேன். உன்னையும் காணவில்லை. நம்ப குடிசையும் காணவில்லை. எனக்கு ரொம்ப ஆச்சரியமாப் போயிடிச்சு. ஊர் பூராவும் தேடி யலைஞ்சேன். உன்னைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிடுச்சு. கையிலே இருந்த துட்டைக் கொண்டு ஒரு வெத்திலைப் பாக்குக் கடை வெச்சேன், வியாபாரம் செழிப்பா நடந்துகிட்டிருக்கு. நீ எப்படியும் இந்தக் கோயிலுக்கு வருவேன்னு தெரியும். அதனாலேதான் நான் கடையைக் கோயில் வாசலண்டை வைச்சதே. அதோ தெரியுது பாரு கடை! அதுதான் நம்ம கடை. அதுக்குப் பின்னாலேயே நமக்குக் குடியிருக்கக் குடிசையும் இருக்குது. வா! போகலாம்" என்று கூறிச் செல்லியின் கைகளைப் பிடித் திழுத்தான் முருகன். மடமட வென்று பேசியதால் மிக்க களைப்படைந்தவனாகத் தோன்றியது. அவனைப் பார்க்கும்போது. "என்னை மட்டும் அழைச்சுக்கிட்டுப் போயிடலாம்னு பார்த்தியா? அதோ பாரு!" என்று அம்மன் சன்னதியில் எக்கவலையு மின்றி நித்திரையிலாழ்ந்திருந்த தன் குழந்தையைக் காட்டினாள் செல்லி.

முருகன் சொல்லொணா ஆச்சரியத்துடன் விரைந்து சென்று, குழந்தையை வாரியெடுத்தான். "என்னுடைய மகனா? என்னைப் போலவே யிருக்கானே! என் ராசா!" என்று சந்தோஷத்துடன் மொழிந்தபடி குழந்தையை மார்போடு சேர்த்து அணைத்து ஆசை தீர அதன் பட்டுப் போன்ற கன்னத்தில் முத்தமிட்டான். அவனுடைய உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகியது அளவு கடந்த புத்திர பாசம்.

அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண் டிருந்த செல்லியின் உள்ளத்தில்

## இஞ்சினீரிங் பட்டதாரிகள்

இன்றைக்கு வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. பொதுவாக, கல்லூரியில் படித்தவர்கள், எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் எல்லோரும் அரசாங்க உத்தியோகத்தையே நாடிச் செல்கின்றனர். எந்த அரசாங்கமும் எல்லோருக்கும் வேலை கொடுக்க இயலாது. குறிப்பாகப் பல ஆண்டுகள் ஆயிரக் கணக்கில் செலவு செய்து இஞ்சினீரிங் பட்டத்திற்குப் படித்துப் பின்னர் வேலை கிடைக்காமல் திண்டாடுகிற பி. இ. பட்டதாரிகள் அநேகம் பேர் இருக்கின்றனர். இந்த நிலையில் புதிய இஞ்சினீரிங் கல்லூரிகள் ஒரு பக்கத்தில் திறக்கப்படுகின்றன. முன்பெல்லாம் இஞ்சினீரிங் கல்லூரியில் இடம் கிடைப்பது அரிது. ஆனால் இன்று மாணவர்கள் அதில் சேர அஞ்சுகிறார்கள். காரணம் சாதாரண பட்டம் பெற்றால் எந்தத் துறையிலும் போக இயலும். குறிப்பிட்ட தொழிற் படிப்புப் பெற்றால் அந்தத் தொழிலையல்லாது வேறு தொழிலை மேற்கொள்ள இயலாது. இந்தத் தர்மசங்கடமான நிலையில் இருப்பதை விடச் சேராமல் இருப்பது நல்லது என்று முடிவு கட்டுகிறார்கள். அதுவும் ஒரு விதத்தில் நல்லது தான்.

தற்காலம் வேலையின்றிக் கஷ்டப்படும் பட்டதாரிகளுக்கு ஒரு புதிய வழியைக் காண்பிக்க அனுமதிக்க வேண்டுகிறேன். ஐந்தாண்டு திட்டத்தில் அமராவதி, வைகை போன்ற பல சிறு திட்டங்களில் பல பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க முடியும். அநேக சிறு திட்டங்களால் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதோடு உடனுக்குடன் நன்மையும் கிடைக்கும். மேலும் பஞ்சாயத்துப் போர்டுகள், யூனியன்கள், முனிசிபாலிட்டிகள், ஜில்லா போர்டுகள், தாலுக்கா போர்டுகள் முதலியவைகள் குறைந்தது ஒரு பி. இ. பட்டதாரியை நியமிக்குமாறு அரசாங்கம் உத்தரவு கொடுக்க வேண்டும்.

சிதம்பரம்
29-12-53

அ. ஞானசம்பந்தம்.
(இஞ்சினீரிங் மாணவர்)

பெருமிதம் கலந்த மகிழ்ச்சி நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அப்போது வெற்றிலை பாக்குக் கடையின் அருகிலிருந்து "யாரைய்யா கடையிலே?" என்ற குரல் கேட்கவே, "இதோ வந்துட்டேனுங்க" என்று கூறியபடி அவசரம் அவசரமாகக் குழந்தையுடன் காலை விந்தி விந்தி நடந்தபடி கடைக்குச் சென்றான் முருகன்.

அவனுடைய நொண்டிக் காலைப் பார்த்து மனவருத்தம் மிக்க அடைந்த செல்வி "மாரியாத்தா! இந்த மட்டும் நீ அவரைக் காலை மட்டும் ஒடித்துப் போட்டதோடு விட்டாயே. அந்த மட்டும் நான் அதிருஷ்டக்காரிதான்" என்று முணுமுணுத்தபடி புருஷனைப் பின் தொடர்ந்து சென்றாள் நிழலைப் போல. அது தானே பாரதப் பண்பு?

# தமிழ்க் களஞ்சியம்

டி. கே. சி.

## 40. கொடிப் படலம், எத்தனை பெரியது!

செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள ஆற்றூரில் முற்காலத்தில் வாணன் என்ற அரசன் இருந்தான். அவனைத் தான் தொண்டை நாட்டு அரசன் என்று சொல்லுவார்கள். மகா பராக்கிரமசாலியான அரசன் அவன்.

சேனைகளைத் திறம்பட அமைத்து எல்லைப் புறங்களில் வகுத்து வைத்திருந்தான்.

சேனைகளை இப்படி வகுத்த காரணமாக வட நாட்டுக் கொள்ளைக்காரரோ, கொள்ளைக்கார அரசரோ தொண்டை நாட்டுக்குள் பிரவேசிக்க வில்லை.

தொண்டை நாடு பாதுகாக்கப்பட்டது மாத்திரம் காரியம் அல்ல, சோழ நாடு, பாண்டிய நாடு, சேர நாடு மற்றும் எத்தனையோ நாடுகள் பாதுகாக்கப் பட்டு வந்தன.

எல்லாம் மேலே சொன்ன ஆற்றூர் வாணனது சைனிய பலந்தான், போர்த் திறம்தான்.

பெரிய பெரிய அரசர்கள் எத்தனையோ பேர் வாணனது தயவை எதிர்பார்த்து நின்றார்கள். அப்படியானால் வாணனைப் பேட்டி காண்பது எளிதா?

சேர, சோழ, பாண்டியர் வாணனைப் பார்க்க வந்தார்கள். பல நாள் காத்திருக்க வேண்டியிருந்தது. முற்றத்திலே முகாம் போட்டார்கள். (எல்லாம் நாடகத்துக்கும் கவிக்குமாகச் சிருஷ்டித்த காரியம்தான்). இனி:

* * *

அரசர்கள் வந்திருப்பதைக் குறிக்க ஆங்காங்கு கொடிகள் பறக்கின்றன.

திருவாத்தி மரமும் பூவும் எழுதிய கொடி பறக்கிறது. சோழன் அங்கே இருக்கிறான் என்பதைக் குறிக்கிறது.

வேப்ப மரத்தை எழுதிய கொடி பாண்டியன் இருக்கிறான் என்பதைக் குறித்துப் பறக்கிறது.

அப்படியே பனை எழுதிய கொடி சேரன் இருக்கிற இடத்தில் பறக்கிறது.

இதெல்லாம் போக அந்தக் கொடிகளை எல்லாம் உள்ளடக்கியது போல ஒரு கொடி விலாசமாகப் பறக்கிறது. அதில் ஆதொண்டைச் செடியைச் சிவந்த பூக்களோடு எழுதி யிருக்கிறது. அது தொண்டை நாட்டு அரசன் வாணனுடைய ஆதிக்கத்தைக் குறிக்கிறது.

கம்பர் இத்தனை விஷயங்களையும், (மனசு சிருஷ்டித்த விஷயங்கள்தான்) உள்ளடக்கிப் பாடுகிறார்:

> வெற்றிபுனை தாதகிக்கும்
> வேம்புக்கும் பெண்ணைக்கும்
> சுற்றும் பெருநிழலாய்த்
> தோன்றுமே—

[வெற்றிபுனை தாதகி: எத்தனையோ வெற்றிகளைக் கண்ட திருவாத்தி எழுதிய கொடிப் படலம்; வேம்புக்கும் பெண்ணைக்கும்: வேம்பு பனை எழுதிய கொடிப் படலங்கள்.]

வாணனது செயல்களுக்கு வருகிறார் கம்பர். புலவர்களை ஆதரிப்பான். உலகத்தையே காப்பான். எத்தனையோ தர்மங்களைச் செய்து கொண்டிருப்பான்.

> வெற்றிபுனை தாதகிக்கும்
> வேம்புக்கும் பெண்ணைக்கும்
> சுற்றும் பெருநிழலாய்த்
> தோன்றுமே—கற்றோர்
> திறன்தாங்கும் மன்னு
> ஜெகம்தாங்கும், எண்ணில்
> அறம்தாங்கும் தொண்டை
> அரசு.


அடடா! ஆதொண்டைச் செடி எத்தனை காரியங்களைத் தாங்கி யிருக்கிறது: அதற்காக ஒரு அரசுப் பட்டம்!

வெகு அழகான பாடல். பாடப்பாட நாவில் தமிழ்த் தேன் சொட்டும்.

# ஸிங்கர் 206 K

## தையல் இயந்திரம்

பலவித அலங்காரத்
தையல்கள்
செய்ய




தெனி வட்டத்தில் அமைந்திருக்கும் இருவிசைகள் தையல் இயக்கத்தை நிதானித்து, வேலை செய்பவர் சாதாரணத் தையல் வேலையிலிருந்து அதிக உபயோகமானதும், அலங்கார வேலைப் பாடுமுள்ள தெனி தையல் வேலைகளுக்கு எளிதில் மாற்றிக் கொள்ள உதவுகிறது.

## அதிகப்படியான உபகரணங்களற்றது

இந்த ஆச்சரியகரமானதும், எவ்வித வேலைக்கும், எளிதில் மாற்றிக் கொள்ளக் கூடிய தையல் இயந்திரம் வரையற்ற அலங்காரத் தையல்களை, ப்ரத்யேக உபகரணங்களின்றியே, எளிதில் நன்கு முடித்துக்கொடுக்கும் இதைக்கொண்டும், தையல் தொழில் காரர்களைப்போலவே: பித்தான் துளையிடுதல், பித்தான் தைத்தல் ஒட்டு வேலைகள், சரிகை பொருத்தல், கரை தைத்தல், இழை கூட்டல் முதலிய வேலைகளை நீங்களே கச்சிதமாகச் செய்யக்கூடியதோடு, புதுப்புதுப் பாஷன்கள் உண்டாக்கவும் கூடும்.

**ஸிங்கர்*** உலகெங்கும்
விரும்பப்படுவது...

ஸிங்கர் ஸூயிங் மெஷின் கம்பெனி.
வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமெரிக்க
ஐக்ய நாடுகளில் இணைக்கப்பட்டது

* ஸிங்கர் மான்யுபாக்சரிங் கம்பெனியின் டிரேட் மார்க்.

# இதோ! ஒருமுறை பிரஷ் கொண்டு தேய்த்தால்
# கால்கேட் டெண்டல் கிரீம்
## சொத்தையும் துர்நாற்றமும் ஏற்படுத்தும்
## பாக்டீரியா கிருமிகளை 85% ஒழிக்கிறது!




DCG/24



# பாதத்திலுள்ள புண்கள் நான்கு நாட்களிலேயே தகருகின்றன

## குத்து வலியும் நமைச்சலும்
## 7 நிமிஷங்களில் நிறுத்தப்படுகிறது

உங்கள் பாதங்கள் அதிகமாக வெறுப்படையுமாறு நமைச்சல் எடுக்கிறதா? வெடித்துக் காயமடைகின்றனவா? பாதங்களின் மேலும் விரல்களுக்கிடையிலும் கொப்பளித்து வெந்திருக்கிறதா? மேலும் கொப்புளங்களை உண்டாக்குகின்றனவா? ரத்தம் கசியும்படி பாதங்கள் புண்ணாகின்றனவா? இது ஏதோ கிருமி அல்லது தோலில் ஏற்படும் அழுகல் என்பதையும் இவற்றை ஒழித்தாலன்றி, உபாதைகளிலிருந்து விடுதலை பெற முடியாதென்பதையும் நீங்கள் உணர வேண்டும்.

### மூலகாரணத்தையே அழிக்கிறது

களிம்புகளோ தைலங்களோ அதிக குணத்தை அளிப்பதில்லை. உபாதைக்கு மூல காரணத்தை அவை கொல்லுவதோ வெல்லுவதோ கிடையாது. அதிருஷ்டவசமாக, டாக்டர்கள் சிபார்சு செய்யும் நிக்ஸோடெர்ம் (Nixoderm) இருக்கிறது. ஒரு பிரபல ஆங்கில சரும நிபுணர் தயாரித்தது; பிரபல மருந்து வியாபாரிகளால் இறக்குமதி செய்யப்படுவது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) உங்கள் பாத உபாதையைப் போக்கி விடும் என்பதற்கு உத்தரவாதம். அதன் மூன்று முக்கிய குணங்களாவன: (1) பாதங்களில் ஏற்படும் உபாதைக்கும், படைக்கு மூலகாரணமான கிருமிகளையும், அவற்றை வளர்க்கும் இதர புழுக்களையும் கொன்று விடுகிறது. (2) நமைச்சலை நிறுத்தி சருமத்தை ஏழு நிமிஷங்களில் குளிர்வுறச் செய்து நயிதமளிக்கிறது. (3) சருமத்தைச் சுத்தமாகவும், வழவழப்பாகவும் மிருதுவாகவும் செய்கிறது.



### பரிசீலனைக்கு உத்தரவாதம்

இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். இன்றிரவே போட்டுப் பார்த்தால் மறுநாள் காலை அற்புதமான தேர்ச்சி ஏற்படும். நாலு நாட்களில் பாதங்களில் ஏற்படும் உபாதைகளும் தீர்ந்து விடும். சருமம் சுத்தமாகவும், வழவழப்பாகவும் மிருதுவாகவும் ஆகும். தொடர்ந்து மூன்று நாட்கள் போட்டு பாதங்களில் ஏற்படும் நமைச்சல், கொப்புளங்கள் குணமடையா விட்டால் நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழந்ததாகிறது. இந்த உபத்திரவத்தின் பேரில் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். ஏழு நாட்களுக்கு நிக்ஸோடெர்ம் (Nixoderm) போட்டு பரிசை செய்து பாருங்கள். திருப்தி ஏற்படாவிட்டால், காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்தால் பணத்தைத் திரும்பப் பெறுவீர்கள். உங்கள் மருந்து வியாபாரியிடம் இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் உத்தரவாதமே உங்களைப் பாதுகாக்கும்.




## 34. கடல் சிரித்தது!

ராதா பிரவேசித்ததும் முதல் காரியமாக, "சுதாகர்! நீங்கள் வேறு என்ன வேலை வேண்டுமானாலும் செய்யுங்கள். வியாபாரம், தொழில் என்று சொல்லப்படும் இந்தச் சிலந்தி வலைகளில் மட்டும் விழாதீர்கள்!" என்றாள்.

தன் திட்டத்தை ஜ்வாலாப் பிரஸாத் ஒப்புக் கொண்டு விட்ட பின், ராதாவுக்கு மட்டும் ஏன் இப்படித் தப்பாகப் படுகிறது என்று சுதாகருக்குப் புரியவில்லை. "அதெப்படி முடியும்? இந்த நாட்களில் தொழில் துறையில் உள்ள தந்திரங்களைத் தான் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தொழில் தெரியாத மனிதன் இந்தக் காலத்தில் மனிதனாகவே கருதப்படுவதில்லை. தெரியும் அல்லவா?" என்று கேட்டான்.

"எத்தனையோ விஷயங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கின்றன. இந்த ஒரு விஷயம் மட்டும் தெரியாமல் இருந்து விட்டதனால் அப்படி என்ன குடி முழுகிப் போய் விடும்?" என்று கேட்டாள் ராதா.

"நான் தான் இப்பொழுது அதையும் புரிந்து கொண்டு விட்டேனே! இனி அதற்கு நான் என்ன செய்வது?" என்று கேட்டான் சுதாகர் குழந்தையைப் போல.

"தெரிந்து கொண்டிருந்தால் அதை அறவே மறந்து விடுங்கள். அதைத் தெரிந்து கொள்வது உங்களுக்கு அழகும் அல்ல, நல்லதும் அல்ல!" என்று மறுபடியும் ராதா அடித்துச் சொன்னாள் உபதேசிக்கும் தோரணையில்.

"நல்லதில்லையா? ஏன் நல்லதில்லை? என்ன காரணம்? ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டான் சுதாகர்.

"காரணம் என்ன? எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான். உங்கள் முகமும் அழகாயிருக்கிறது. உங்கள் பேச்சும் பணிக்காயிருக்கிறது. உங்கள் வாயிலிருந்து உதிரும் சொற்களும் முத்து முத்தாக இருக்கின்றன. ஆனால் தொழிலாளி, முதலாளி, வேலை நிறுத்தம், பணம், காசு, லாபம், நஷ்டம், கலகம், சண்டை, தரகு, கமிஷன், குமாஸ்தா, மானேஜர் என்பது போன்ற கடுஞ்சொற்கள் உங்கள் வாயிலிருந்து வெளி வந்தால் என்னவோ நாராசமாகப் படுகிறது. இந்த மாதிரிச் சொற்களை நீங்கள் பேசினால் எனக்கு மிக விசித்திரமாகவும் தோன்றுகிறது. அவ்வார்த்தைகள் எல்லாம் ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டு மாட்டைத் தூக்கி ஆட்டில் போட்டுப் பொய் புளுகி வியாபாரம் செய்து சம்பாதிக்கும் வியாபாரிகளுக்கே இருக்கட்டும். நான் சொல்வதைக் கேளுங்கள். நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்களும் இந்தச் சகதியில் போய் மாட்டிக் கொள்ளாதீர்கள்!" என்றாள் ராதா.

ராதாவின் அந்த வார்த்தைகளைக் கேட்டுச் சுதாகருக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் ராதா சொன்ன விஷயத்தில் உண்மை பொதிந்திருக்கிறது என்பதும் அவனுக்குத் தெள்ளத் தெளிவாகத் தோன்றியது.

உடலும் உயிரும் ஒன்று கூடியிருக்கும் பொழுது, அதை நாம் ஜீவன் என்கிறோம். எழுத்திலும் பேச்சிலும் கூட ஜீவன் இருக்கிறது. அதனால் தான் ஒரு பேச்சாளரையோ எழுத்தாளரையோ பாராட்டும் பொழுது நல்ல ஜீவன் உள்ள நடையைக் கையாளுகிறார் என்கிறோம். அந்த ஜீவன்தான் பாவம் எனப்படுகிறது. எண்ணங்களின் உடல் சொல் ஆகும். எண்ணம் என்பது உயிர். சொல் என்பது உடல். எழுத்திலும் பேச்சிலும் உயிர் இருக்கிறது என்பதை உணரச் சொல்தான் உதவுகிறது. தூய எண்ணங்களும் தீய எண்ணங்களும் சொற்கள் மூலம் தெளிவாகின்றன. மனித தேகத்தைப் போலவே, சொற்களும் பிடித்த அல்லது பிடிக்காத உருவங்களைத் தரித்துக் கொள்கின்றன. குறிப்பிட்டவன் குறிப்பிட்ட மாதிரித்தான் பேசுவான் என்று எண்ணுகிறோம். அவன் அதற்கு மாறாகப் பேசினால் நமக்குப் பிடிப்பதில்லை. உபாத்தியாயர் உபாத்தியாயராகப் பேசினால் தான் அழகாயிருக்கிறது. அவர் வாயிலிருந்து வேறு விதமாகச் சொற்கள் வந்தால் நமக்கு என்னவோ மாதிரி இருக்கிறது.

காளிதாஸர் - பவபூதி, சங்கரர் - சாணக்கியர், அசோகர் - ராணா ரணஜித்சிங், ஸெல்யூகஸ் - முஸோலினி, மகாதேவ கோவிந்த ரானடே - சிந்தாமணி, பிரேம் சந்த் - சுதர்சன், பகவதி சரண் - கிரீஷ், முன்ஷி - ராஜாஜி ஆகியவர்களைப் படிப்பவர்களும் சொல்லிக் கொடுப்பவர்களும் ஒரே மாதிரியானவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. லோகோ பின்ன ருசி: அதாவது 'உலகம் பல விதம்' என்ற முதுமொழிப் படிதான் அவர்கள் இருக்க வேண்டும்.

ஆனால் உலகம் இயற்கையைப் போல் எப்பொழுதும் கவித்துவம் நிறைந்ததாக இருப்பதில்லை. ஏழை மனிதன் கவித்துவத்துக்கு எதிரான சில உண்மைகளைப் பேச வேண்டித்தான் இருக்கிறது. ஆகவே, அவன் தன் வாழ்க்கையில் சிற்சில சமயம் கர்ண கடூரமான, பிடிக்காத, ரஸனைக் குறைவான, இனிமை என்பதே இல்லாத, கசப்பான கடுஞ் சொற்களைக் கையாள வேண்டித்தான் வருகிறது. சுதாகரும் அதன் காரணமாகத் தான் அத்தகைய சொற்களைத் தெரிந்தே உபயோகிக்க நேர்ந்தது.

"சரி! நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் உண்மைதான். அதனால் நீங்கள் இருக்கும் பொழுது உங்கள் எதிரே இம்மாதிரி விசித்திரச் சொற்களை உபயோகிக்க மாட்டேன்!" என்று பதில் சொன்னான் சுதாகர்.

"அது போகட்டும். இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள் ராதா, இப்பொழுது பாடம் படிக்கலாமா, அப்புறம் ஆகட்டுமா என்று கேட்கும் தோரணையில்.

"என்ன செய்வது? இனி உங்களுக்கு நான் சொல்லிக்கொடுப்பதற்கு என்ன இருக்கிறது? என்னுடைய உதவி இனி தங்களுக்குத் தேவை இராது. தாங்களாகவே படித்துக் கொள்ளலாம் என்றே எண்ணுகிறேன்!" என்றான் சுதாகர். அவளுடைய கேள்விக்கு அவன் வேண்டுமென்றே வேறு அர்த்தம் கற்பித்துக் கொண்டு அத்தகைய பதிலைச் சொல்லி வைத்தான்.

"ஓகோ! அப்படியா சமாசாரம்! இங்கிருந்து ஓடி விடவா எண்ணுகிறீர்கள்! நிஜமாகச் சொல்லுங்கள்!" என்று கேட்டாள் ராதா, விஷயத்தை நன்றாகப் புரிந்து கொண்டவள் போல்.

"அதற்காகச் சொல்லவில்லை. இப்பொழுதுதான் நீங்களே நன்றாகப் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டீர்கள். இனி உங்களுக்கு விளக்கவோ சொல்லிக் கொடுக்கவோ வேண்டியதில்லையே என்பதற்காகச் சொன்னேன்!" என்று சுதாகர் மழுப்பினான்.

"எனக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் இங்கு விட்டுப் போக முடியாது. இது நிச்சயம்!" என்றாள் ராதா.

"அப்படியானால் வாருங்கள், ஏதாவது படிப்போம், அல்லது எழுதுவோம்!" என்றான் சுதாகர்.

"இன்று ஊர் முழுவதும் வேலை நிறுத்தம் என்றே பேச்சாயிருக்கிறது. நாமும் இன்று படிப்பு நிறுத்தம் செய்து விடுமுறை கொண்டாடினால் என்ன?" என்றாள் ராதா.

"சரி, அப்படியானால் நான் போய் வரட்டுமா?" என்று கேட்டான்.

"பேஷ்! போய் வருவதா? எங்கே? அதெல்லாம் கூடாது. இன்று நீங்கள் அவசியம் என்னுடன் உலாவ வந்துதான் ஆக வேண்டும். நினைவிருக்கட்டும்!" என்று பிடிவாதமாகச் சொன்னாள் ராதா.

சுதாகருக்கு யோசனையாகப் போய் விட்டது. 'இதேதடா இது தர்ம சங்கடம்! வயிற்று வலி போய்த் திருகுவலி வந்த கதையாக இருக்கிறதே!' என்று எண்ணினான். அன்று ஒரு நாள் ராதாவுடன் காரில் உட்கார்ந்து வீட்டுக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்டதை அவன் மறக்கவே இல்லை. இந்த மாதிரி அரிய சந்தர்ப்பம் கிடைத்ததே என்று ஆனந்தப் படுவதற்குப் பதிலாக வெட்கம் தாளாமல் தலை குனிந்து யோசனையில் ஆழ்ந்து விட்டான். ராதா அவன் படும் அவஸ்தையைப் புரிந்து கொண்டு விட்டாள். ஆண் பிள்ளையாகப் பிறந்தவன் இப்படியும் வெட்கிச் சாவானா என்றே அவளுக்குத் தோன்றியது.

"சுதாகர்! நீங்கள் என்னோடு ஒரு மாதம் சுற்றினால்தான் மனிதர் ஆவீர்கள். பத்து நாட்கள் மோட்டாரில் உட்கார்ந்து உலாவப் போனால் உங்கள் சங்கோசம் வெட்கம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து விடும். எதற்காகக் கூனிக் குறுகிக் கொண்டு இவ்வளவு கஷ்டப் படுகிறீர்கள்?" என்று கேட்டாள் ராதா, மனத்தில் சிறிதும் விகல்பம் இல்லாமல். இருந்தாலும் அவள் கேட்ட அந்தக் கேள்வியில் சுதாகரின் பெருந்தன்மையைப் பார்த்துப் பரிகசிக்கும் பாவம்தான் தொனித்தாற் போலிருந்தது.

சுதாகரினால் அவளுடைய அந்தக் கேள்விக்குச் சரியான பதில் சொல்ல முடியவில்லை. இருந்தாலும் தடுமாறும் குரலில், "இல்லை. நான் இந்தமாதிரி நவ நாகரிகத்தில் வளரவில்லை. நகரத்து வாழ்க்கையே எனக்கு விசித்திரமாகத் தோன்றுகிறது. அதனால்தான்......" என்று இழுத்தான்.

"உங்களுடைய இந்தச் சாக்குப் போக்கு பாசாங்கு ஆகியவற்றைக் கேட்க நான் தயாராயில்லை. வாருங்கள், கார் தயாராக நின்று கொண்டிருக்கிறது. போகலாம்!" என்று வற்புறுத்தினாள் ராதா.

சுதாகரிடம் கல்வி பயிலும் மாணவியின் வேண்டுகோள் அவளுடைய அந்தப் பேச்சில் தொனிக்கவில்லை. விலை கொடுத்து வாங்கியிருக்கும் எஜமானியின் அதிகாரமும் கண்டிப்பான உத்தரவும் தான் அவளுடைய பேச்சில் தாண்டவமாடின.

பெண் பொதுவாகக் கட்டளையிடுவதில்லை. ஆனால் அவள் கட்டளையிட்டுவிடுவாளேயாகில் எந்த ஆண் பிள்ளையினாலும் அதை மீற முடிவதில்லை. சுதாகரினாலும் அவள் கட்டளையை மீற முடியவில்லை. வேறு வழியின்றிப் பாடம் சொல்லிக் கொடுப்பதை ஒரு புறமாக மூட்டை கட்டி வைத்து விட்டு அவள் போட்ட உலாவப் போகும் திட்டத்தை அவன் ஒப்புக் கொள்ளும்படிதான் ஆயிற்று. எஜமானி கட்டளையிடுவது, ஊழி

யன் அதைக் கேட்காமல் இருப்பது என்றால் எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா? ராதாவுடன் காரில் ஏறி உட்காரும்படியான நிர்ப்பந்த நிலை ஏற்படவே, அவன் சிறிது கலங்கினான்; கலவர மடைந்தான். ஆனால் ராதா தன் சொல்லில் உறுதியாக நிற்கவே, அவன் துடிக்கும் உள்ளத்துடனும் வெட்கத்தினால் குறுகிக் குன்றிய உடலுடனும் மோட்டாரில் போய் ஏறிக் கொண்டான்.

இரண்டு மூன்று கடைகள் ஏறி ராதா கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தை வீணாக்கினாள். பிறகு காரைக் கடற்கரைக்கு ஓட்டுமாறு டிரைவருக்குக் கட்டளை யிட்டாள். கடற்கரையை அடைந்த கார் ஒரு ஏகாந்தமான அதிக ஜன நடமாட்ட மில்லாத இடத்தில் போய் நின்றது.

ராதா தினமும் அந்த இடத்துக்குத்தான் உலாவ வருவது வழக்கம். மோட்டாரிலிருந்து இறங்கி ஒன்று அவள் மணற் பரப்பில் போய் உட்காருவாள். இல்லாவிட்டால் அந்தப் பக்கத்தில் உலாவியவாறே நடந்து செல்லுவாள். ஆனால் ஜ்வாலாப் பிரஸாத் அவளுடன் உலாவ வரும் நாட்களில் எல்லாம் நடமாடுவது குறைவாகவும், உட்காருவது அதிகமாகவும் இருக்கும். அவளோ எப்பொழுதும் துறு துறு என்று சுறு சுறுப்பாக இருப்பவள். ஒரு இடத்தில் உட்காருவது என்றால் அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காது. துரு துரு வென்று இங்கும் அங்கும் ஓடியாடி நடமாடிக் கொண்டிருந்தால்தான் அவளுக்கு மன மகிழ்ச்சி ஏற்படும். அவள் செய்த பாக்கியம் என்னவென்றால், உட்கார்ந்தே கிடக்கும் ஜ்வாலாப் பிரஸாத் அவளுடன் அதிக நேரம் இருப்பதில்லை. அப்படியே உலாவ வந்தாலும் சிறிது நேரம் இருந்து விட்டு வேலை தலைக்கு மேல் கிடக்கிறது என்று சொல்லி எழுந்து போய் விடுவார். அதனால் அவள் தன் இஷ்டப்படி யதேச்சையாக எங்கு வேண்டுமானாலும் உலாவ முடிந்தது.

அன்று சுதாகர் அவளுடன்கூட வந்திருந்தான். கடற்கரையின் சூழ்நிலையே மாறி விட்டதாக ராதாவுக்குத் தோன்றியது. தினம் அவள் தனித்தே வந்து கொண்டிருந்ததனால் அவளைச் சிற்சில சமயம் சோம்பேறித்தனம் ஆட்கொண்டு விடும். கடற்கரையே சுறு சுறுப்பைக் குறைத்து விடுமோ என்ற எண்ணங்கூடப் பழக்கப் பட்டுப் போன அவளுக்குத் தோன்றியதுண்டு. ஆனால் அன்று கடல் அத்தகையதாகத் தோன்றவில்லை. அலை மேல் அலையை எழுப்பி அவள் உள்ளத்திலும் எண்ண அலைகளை எழுப்புவதாகவே தோன்றியது. அடிவானமும் ஆழ் கடலும் ஒன்று கூடும் இடத்தில் அஸ்தமிக்கும் ஆதவன் தனது பொன்னிறக் கிரணங்கள் மூலம் வர்ணஜால விசித்திரங்கள் புரிந்து கொண்டிருந்தான். மாலை இளங் காற்று மெல்ல மெல்ல வீசிக் கொண்டிருந்தது. அதை யெல்லாம் விடத் தனிமை



வேறு. எல்லாமாகச் சேர்ந்து கொண்டு அவளுடைய இருதயத்தில் இன்ப வெறியை ஊட்டிக் கொண்டிருந்தன.

ராதாவும் சுதாகரும் காரிலிருந்து இறங்கி மணற் பரப்பில் உலாவத் தொடங்கினார்கள். கடல் அலைகள் கெக்கலி கொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன. உயர்ந்து உயர்ந்து எழும்பி மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றுக் கொண்டிருந்தன. கடல் அலைகள் காட்டிய களிப்பும் கனிவும் ராதாவின் உள்ளத்தில் பிரதிபலித்தன. பெருமிதத்துடன் பற்பல சிந்தனைகள் செய்தவாறு நடந்து கொண்டிருந்தவள் திடீரென்று சுதாகரைப் பார்த்து "ஏன் சுதாகர்! உங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும். சாதாரணமாக நீந்துவேன்!" என்றான் சுதாகர்.

"கடலில் உங்களால் நீந்த முடியுமா?"

"முடியும். ஆற்றில் நீந்துவதைக் காட்டிலும் கடலில் நீந்துவது வெகு சுலபம்!"

"அப்படியா? எனக்கு நீங்கள் நீந்தக் கற்றுத் தருகிறீர்களா?"

ராதாவின் அந்த விசித்திரமான சரளசுபாவத்தைக் கண்ட சுதாகருக்கு ஒரு புறம் வெட்கமாகவும் இருந்தது; இன்னொரு புறம் சிரிப்பாகவும் இருந்தது. வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு வெட்கம் காரணமாக அவன் இலேசாக இளநகை புரிந்தான்.

"ஏன்? எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் ராதா.

"பிறருக்குக் கற்றுக் கொடுக்கக் கூடிய அளவுக்கு எனக்கு நீந்தத் தெரியாது!"

"அதற்காகச் சிரிப்பானேன்?"

"எப்படிக் கற்றுக் கொடுப்பது என்று..."

"சரி, நீங்கள் நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டாம். இப்பொழுது இங்கே குளிக்கலாம் அல்லவா?"

"இங்கேயா?"

"ஆமாம், ஏன்? உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை, சிரமம், சிரமம் உண்டோ?"

"இல்லை, இருட்டப் போகிறதே!"

"இருட்டினால் என்ன? இருட்டைக் கண்டு பயப்படுவீர்களோ?"

"இல்லை, இல்லை! இருட்டிய பிறகு குளிக்கலாமா? குளிருமே! சனி வேறு பிடித்துக் கொள்ளுமே!" என்றான் சுதாகர்.

"நாம் சட்டுப் புட்டென்று குளித்துவிட்டுக் கரையேறி விட்டால் போகிறது!"

"இன்னொரு நாளைக்குக் குளித்துக் கொள்ளக் கூடாதா?"

"இன்றைக்குத்தான், இப்பொழுதுதான் எனக்குக் குளிக்க வேண்டும்!" என்று குழந்தைப் பிடிவாதம் பிடித்தாள் ராதா.

"குளித்த பின் உடுத்திக் கொள்ளத் துணிமணிகள் எங்கே இருக்கின்றன?"— வேண்டாம் என்பதற்கு எவ்வளவு விதமாக


## தண்ணீர்பேய் - எதிராய் - "ஸான்போரைஸ்ட்"




"ஸான்போரைஸ்ட்" குறியிடப்பட்ட துணி ஒருவித சரியான யந்திர உபாயத்தின் நீரில் நனைக்கவேண்டிய அவசியமில்லை.

வாதாடலாமோ அவ்வளவு விதமாகவும் சுதாகர் வாதாடிப் பார்த்து விட்டான்.

தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பவர்களைப் போல் ராதா பிடிவாதம் பிடித்தாள். "உடுத்தியிருக்கும் துணிகளே போதும், குளிப்பதற்கு. குளித்த பின் உடுத்திக் கொள்வதற்கு நான் வீட்டிலிருந்து உலர்ந்த உடைகள் இப்பொழுதே கொண்டு வரச் செய்கிறேன். அந்தக் கவலைப் படாதீர்கள்!" என்று சொல்லிக் கையைத் தட்டிக் கார் டிரைவரைக் கூப்பிட்டாள். காரில் உட்கார்ந்திருந்த டிரைவர் அவள் அருகில் ஓடிவந்தான். உடனே வீட்டுக்குப் போய் வேறு உடைகள் கொண்டு வருமாறு அவனுக்குக் கட்டளை யிட்டாள் ராதா.

டிரைவர் அவ்விடத்தை விட்டு நகர்ந்ததும் ராதா கடலில் இறங்கி விட்டாள். சுதாகரின் சம்மதத்தையோ, சம்மத மில்லாமையையோ கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று அவள் கருதவே இல்லை. அவனிடம் அது சம்பந்தமாக அவள் அதிகமாகப் பேச்சே வைத்துக் கொள்ள வில்லை. விலையுயர்ந்த ஆடைகள் கெட்டு விடுமே என்று கூட அவள் கவலைப்பட வில்லை. கடலில் குளிக்க வேண்டும் என்று எண்ணினாள். இறங்கி விட்டாள். ஆனந்தமாகக் குளிக்கவும் தொடங்கி விட்டாள்.

சுதாகர் கரையில் நின்ற வண்ணம் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். ராதாவோ நிமிஷத்துக்கு நிமிஷம் அலைகளைக் கிழித்துக் கொண்டு கடலில் முன்னேறிக் கொண்டிருந்தாள். ராதா இனி முன்னேறினால் மூழ்கி விடுவாள் என்று சுதாகர் பயந்தான். நீந்தத் தெரியாதவர்கள் கடல் நீரில் முன்னேறிக் கொண்டே போவது என்றால் அது சுத்தப் பைத்தியக்காரத்தனம் தானே? சுதாகர் அப்படி எண்ணியதில் என்ன தவறு?

அவள் நாற்புறத்து நீரையும் கைகளினால் தட்டி அட்டகாசம் செய்து கொண்டிருந்தாள். இரண்டு கைகளினாலும் வாரி வாரி நீரை உயரத் தெளித்துக் கொண்டிருந்தாள். நிமிஷத்துக்கு ஒரு முறை முழுக்கும் போட்டுக் கொண்டிருந்தாள். அத்துடன் நிறுத்திக் கொண்டாலாவது தேவலையே! நீந்தத் தெரியாமல் இருக்கும் பொழுதே நீந்தவும் முயற்சித்துக் கொண்டிருந்தாள். வேடிக்கையாக அவள் முன்னேறிக் கொண்டிருக்கிறாள் என்பதையும் சுதாகர் கவனிக்கத் தவறவில்லை.

கரையில் இருந்த வண்ணம் அவன் கூச்சல் போட்டான். குளிக்கும் களிப்பில் மூழ்கிக் கிடந்த அவள் அவன் சொல்லைக் காதில் வாங்கிக் கொண்டால்தானே? சுதாகரினால் அதற்கு மேலும் கரையிலேயே கையைக் கட்டிக்கொண்டு நிற்க முடியவில்லை. ராதா மூழ்கி விடாமல் இருக்க வேண்டுமே என்ற பயத்தில் கடலில் குதித்து விட்டான். அதைக் கண்ட ராதா இன்னும் ஓடத் தொடங்கினாள்.





மூலம் முன்னாலேயே சுருங்கப்பட்டுள்ளது. ஆகையால் தைக்குமுன் அதை

NAS 959

அவனும் இறங்கி விட்டான் என்ற மகிழ்ச்சியில் கைதட்டிக் கொக்கரித்துக் கொண்டு, "பார்த்தீர்களா? கடைசியில் நீங்களும் இறங்கி வந்து விடும்படியாகி விட்டதல்லவா?" என்று கேட்டாள்.

"என்ன செய்வது? நீங்கள்தான் என் சொல்லைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. இனிமேல் அதிகமாக முன்னேறிப் போகாதீர்கள். அலைகள் அதிகமாயிருக்கின்றன. இழுப்பு வேறு வேகமாயிருக்கிறது. விழுந்து மூழ்கி விடுவீர்கள்!" என்று ஓடிக் கொண்டிருந்த ராதாவுக்கு உரக்க எச்சரிக்கை விடுத்தான் சுதாகர்.

"எங்கே? என்னைப் பிடியுங்கள், பார்ப்போம்!" என்று ராதா முன்னேறினாள்.

அப்பப்பா! யௌவனத்தின் படியில் அடியெடுத்து வைத்துப் பல வருஷங்களாகியும் இன்னும் ராதாவுக்குக் குழந்தைக் குணம் போகவில்லையே! இளங் கன்று பயம் அறியாது என்பதுபோல் அப்படியா ஓடுவது? கடல் நீருடன் அப்படியெல்லாம் விளையாடலாமா? அதைக் கண்ட சுதாகரும் அவளைக் காப்பாற்றும் எண்ணத்துடன் பின்தொடர்ந்தான். சுதாகர் வெகு வேகமாக ராதாவை நெருங்கினான். அவன் அருகில் வந்ததும் அவள் இரு கைகளாலும் அவன்மீது தண்ணீரை வீசினாள்.

சுதாகர் கண்ணில் புகுந்த நீரைத் துடைத்துக் கொள்வதற்காகக் கைகளைத் தூக்கினான். சிவந்த மேனியாயிருந்தால் நீரில் இன்னும் சிவப்பாக எடுத்துக் 'காட்டு'வது இயல்பேயல்லவா? சுதாகரின் அகன்ற மார்பையும் உருண்டு திரண்டு பலம் பொருந்திக் காணப் பட்ட கைகளையும் ராதா கண்டாள். அவளுடைய உடலிலும் உள்ளத்திலும் மின்சார அலை பாய்வது போலிருந்தது. ஏதோ ஒரு இனந் தெரியாத புத்துணர்ச்சி தன் உள்ளத்தில் உருப் பெறுவதாகத் தோன்றியது ராதாவுக்கு. அந்த உணர்ச்சியை உள்ளத்திலிருந்து அகற்றிவிட வேண்டியதுதானே அவளுடைய கடமை? அத்தகைய உணர்ச்சிக்கு இடம் கொடாமல் இருப்பதுதானே அவளுக்கு அழகு? அதையெல்லாம் சிந்திக்காமல் அவள் மறுபடியும் சிறு பிள்ளை போல் ஓடத் தொடங்கினாள்.

அப்பொழுது அந்த இடம் முழுவதுமே ஜன சஞ்சாரமற்றதாக இருந்தது. கரை காணாத கடலும் அதில் எழும்பிக் கொண்டிருந்த சஞ்சலமே உருவான அலைகளும் ராதாவின் உள்ளத்தில் ஒரு புதுவிதமான சுதந்திர உணர்ச்சிக்கு ஆக்கம் அளித்தன. கடல் நீர் நிலை பெற்று நில்லாமல் நிலையற்று நின்று கொண்டிருந்தது; ஒரு வேகம் அதை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது. அலட்சியமே உருவான அலைகள் கல கல வென்று கை தட்டிச் சிரித்துக் கொண்டு ராதாவுடன் விளையாடிக் கொண்டிருந்தன; உடலைத் தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தன. அலைகள் அவ்வளவு தாஜா செய்யவே, இருதயத்தில் இன்ப வெறி இன்னும் பன்மடங்காக மூண்டது. எனவே, உள்ளத்தில் உதித்த புத்துணர்ச்சி உலர்ந்து குறைந்து மறைந்துபோவதற்குப் பதிலாக அதிகரிக்கத்தான் செய்தது.

"சுதாகர்! இன்று எனக்கு நீந்தக் கற்றுக் கொடுங்கள்!" என்றாள் ராதா உணர்ச்சியினால் உந்தப்பட்ட குரலுடன்.

"இன்று வேண்டாம். இன்னொரு நாள் ஆகட்டும்!" என்றான் சுதாகர்.

"நீங்கள் கற்றுக் கொடுக்கா விட்டால் நான் நீரிலிருந்து வெளியேற முடியாது. ஆமாம், சொல்லி விட்டேன்!" என்றாள் ராதா. அடுத்த கணமே என்ன நினைத்துக் கொண்டாளோ, என்னவோ! "பாருங்கள்! நானே நீந்திக் காட்டுகிறேன்!" என்று சொல்லிக் கழுத்து மட்டும் நீருக்குள் போய் விட்டாள். அது மட்டும் அல்ல; நீந்துவது போல இரு கைகளையும் நீரில் பரப்பிக் கொண்டாள். ஆனால் அவளுக்கு நீந்த எங்கே வந்தது? அவள் தத்தளிக்கத் தொடங்கினாள். நீரில் நான்கைந்து தடவை முழுகியும் விட்டாள். இரண்டொரு வாய் உப்பு நீரைக் குடித்தும் விட்டாள். அப்புறம் அவள் தலையும் தண்ணீரில் மறைந்தது.

சுதாகர் துணுக்குற்று அவள் அருகில் ஓடினான். மூழ்கிக் கொண்டிருந்த ராதாவைப் பிடித்து நிறுத்தினான். கதிகலங்கிக் கலவரமுற்று விட்ட ராதா நீருக்குமேலே வந்ததும் பயந்து போய்ச் சுதாகரைப் பிடித்துக் கொண்டாள். பிடி விட்டுப் போகாமல் இருக்க வேண்டி இரண்டு கைகளாலும் இறுகக் கட்டிக் கொண்டாள்.

"அப்பாடா! நான் பயந்தே போய் விட்டேன். உயிர் போய் உயிர் வந்தது, எனக்கு!"

ராதா இந்த வாக்கியத்தை நடுங்கிக் கொண்டே சொன்னாள். அந்த நடுக்கம் அச்சத்தினால் ஏற்பட்டதா? அல்லது புதிய விசித்திரமான ஸ்பரிசத்தினால் ஏற்பட்டதா? இந்த விஷயம் ராதாவுக்கே சரியாக விளங்கவில்லை. ஆனால் அவள் வெகு நேரம் வரைச் சுதாகரைப் பிடித்திருந்த பிடியை மட்டும் தளர விடவில்லை.

"ராதா! வாருங்கள், கரையேறுவோம்!" என்றான் சுதாகர்.

"முடியாது. நான் இப்பொழுது கரையேற முடியாது!"— ராதாவின் பிடிவாதம் அப்பொழுதும் தளரவில்லை.

"இம்மாதிரி நிலையில் நம்மை யாராவது பார்த்தால் என்ன சொல்வார்கள்?" என்று கேட்டான் சுதாகர்.

ராதா அதற்குப் பதில் சொல்லவில்லை. கரைகாணாத கடலின் அலைகள் செய்யும் பேரிரைச்சலையும் மிஞ்சிக் கொண்டு 'கல கல' வென்று நகைத்தாள்.

அந்தத் தனிமையே உருவான சூழ்நிலையில் ராதாவின் 'கல கல' வென்ற நகைப்பைக் கேட்ட சுதாகர் நடு நடுங்கிக் கதிகலங்கிப் போய் விட்டான். அவன் நிலையைக் கண்ட கடல் கல கல வெனச் சிரித்தது! **(தொடரும்)**

# B.I.S.N. CO. LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

## S. S. "ரஜுலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 பிப்ரவரி 5ௗ
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 பிப்ரவரி 6ௗ

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 8 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள்:

**சென்னையிலிருந்து 5-2-54:** *பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.*

**நாகப்பட்டினத்திலிருந்து 6-2-54:** *பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.*

*சென்னையில் ஏறும் பிரயாணிகள் 5-2-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகி விடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.*

*பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டி, விரும்பம் தால் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இஞ்செக்ஷன் செய்ததற்கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிஸிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லுபடியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.*

| | |
|---|---|
| பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் | மதுரா கம்பெனி லிமிடெட் |
| 7, அரமனைக்காரத் தெரு, மதராஸ் | முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம் |

# புண்பட்டு வலிக்கும் கால்களுக்கு

## ஜாம்-பெக் தடவி சுகம் பெறச் செய்க



# Zam-Buk

ஜாம்-பெக் உலகின் மகோன்னதமான சருமக்களிம்பு. ஜாம்-பெக் சருமத்துவாரங்களுள் புகுந்து நோயுற்ற கால் தசைக்கு கமனமூட்டி பலமும் தருகின்றது. ஜாம்-பெக் சருமத்தை மிருதுவாக்கி, எரிச்சல் அல்லது ரணம் ஏற்படாமல் தடுக்கும். உங்கள் காலில் உபத்திரவம் இருந்தால் ஜாம்-பெக் தடவி உடன் குணம் பெறுக. பிறகு பிரதி இரவிலும் உபயோகித்து பாத ஆரோக்கியமும் அடையுங்கள். சரும நோய்களையும், காயங்களையும் ஆற்றுவதில் ஜாம்-பெக் அற்புத சக்தி வாய்ந்தது. ஜாம்-பெக்கில் இதர மதிப்பு வாய்ந்த மூலப் பொருள்களைத் தவிர க்ளோரோபில் அதன் நோயாற்றும் குணம், தசைநார் போஷாக்கு மற்றும் இதர குணங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.



FZY 37 TAM.

மிருகக் கொழுப்பு சேர்வில்லை என்பதற்கு உத்திரவாதம் ஜாம்-பெக்கினால் குணம் பெறுவீர்கள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க்டவுன்



# பல்லவர் காலத்து விக்கிரகங்கள்

வை. மு. நரஸிம்மன்

மணியம்

**இன்றைக்குத் தெரிந்த விக்கிரகங்கள் :—** சமீப காலத்தில் கண்டெடுக்கப்பட்ட சில பல்லவ கால விக்கிரகங்களையும் (புகைப் படங்கள் 1, 2,) மற்றும் நம் தென்னிந்தியாவில் பிரசித்தி பெறுமல் இருக்கும் மிக அபூர்வமான பல்லவ காலத்து விக்கிரகங்களையும் (புகைப் படங்கள் 3, 4, 5) வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துவது மிகவும் அவசியம். ஏனெனில் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர் காலத்தில் உலோகங்களினுலான விக்கிரகங்கள் இல்லை என்றும், கற்சிலைகள் தான் உண்டு என்றும் கருதப்பட்டு வந்தது. இப்படியே நமது சென்னை அரசாங்க மியூஸியத்தின் 1932-ம் ஆண்டு அறிக்கையில் எழுதப் பட்டும் உள்ளது. தற்செயலாக அகப்பட்ட பல்லவர் காலத்திய இரண்டு விக்கிரகங்களையும், பல்லவர் காலத்தவை அல்ல என்று சென்னை மியூஸியக்காரர்கள் பம்பாய்க்கு அனுப்பி விட்டனர். இப்போது அவை பம்பாயில் இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் :—பல்லவர் காலத்துக் கல் வெட்டுக்களில் கற்சிலைகளைப் பற்றியும், தங்கம், வெள்ளி பூஜைச் சாமான்களைப் பற்றியும் குறிப்பிட்டு, உலோகங்களினுலான விக்கிரகங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் இருப்பதுதான். ஆனல், **குரு பரம் பரா பிரபாவம்** என்ற நூலில் திருமங்கையாழ்வாரைப் பற்றிச் (எட்டாம் நூற்ருண்டில் இருந்தவர்) சொல்லுகையில் நாகப் பட்டினத்துப் பொன்னுற் செய்யப்பட்ட பௌத்த விக்கிரகத்தைப் பற்றியும், இவ்வாழ்வார் ஆராதித்து வந்த **சிந்தனைக் கினியான்** என்பவரைப் பற்றியும் எழுதப் பட்டுள்ளது. இவ்வாழ்வார் பூசைபுரிந்து வந்த பெருமானை இன்றைக்கும் தஞ்சை ஜில்லாவில் உள்ள திருநகரிக் கோவிலில் இவ்வாழ்வாருடன் தரிசிக்கலாம். இந்தப் பெருமான் உபய நாச்சியார்களுடன் (தேவிமாருடன்) காணப் படுகிருர். உயரம் சுமார் எட்டு அங்குலம். பல்லவச் சிற்பங்களில் காணப்படும் எல்லா அம்சங்களும் இந்தக் கடவுள் திருமேனியில் தென்படுகின்றன. மேலும் கடந்த சில வருடங்களாக இன்னும் சில பல்லவ விக்கிரகங்கள் தெரிய வந்துள்ளன. அவைகளின் பெயர்கள் பின்பு கொடுக்கப்படும்.

**பல்லவச் சிற்பம் :** இப்போது பல்லவச் சிற்பங்களைப் பற்றிப் பொதுவாகக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமாக. நம் தமிழ் நாட்டில் இப்போது காணப்படும் தமிழ்ச் சிற்பக்கலை, பல்லவர் காலத்திலிருந்துதான் கிடைக்கின்றது. அதற்கு முன் இருந்த கலை நாளடைவில் அழிந்து விட்டது போலும். முதன் முதல் மகேந்திர வர்மன் (610-640) இக் கலையைத் தொடங்கினான். ஒரு கல்வெட்டில் அவன் தானே முதலில் கல்லை வெட்டிக் கோவில்கள் கட்ட ஆரம்பித்ததாகவும், அதற்கு முன் கோவில்கள் அழியக் கூடிய



மரம், செங்கல் போன்றவைகளால் கட்டப்பட்டு வந்தன என்றும் குறித்துள்ளான். இப்படி கி-பி 610-ல் தொடங்கிய சிற்பக்கலை சுமார் கி-பி 1600, அதாவது ஒரு ஆயிரம் ஆண்டுகள் வளர்ந்து வந்தது.

இந்த ஆயிரம் ஆண்டுகள் சரி சமமாகப் பல்லவர் காலம், முன்சோழர் காலம், பின் சோழர் காலம், விஜயநகர மன்னவர் காலம் என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். இவற்றுள் முதலாவது பல்லவர் காலம் 600 - 850 அல்லது 900 - வரையில். இப் பிரிவினை பற்றி மட்டும் கீழே கூறப்படும். இந்தப் பல்லவ காலத்தை நான்கு உட்பிரிவாகப் பிரிக்கலாம்.

(1) மகேந்திர பாணி610-640. (2) மாமல்ல பாணி 640-670. (3) ராஜ சிம்ம பாணி 670 - 800. (4) நந்திவர்மன்பாணி 800-850 அல்லது 900. குன்றுகளைக் குடைந்து செய்த கோவில்களையும், ஒரே பாறையைச் செதுக்கி மாமல்லபுரத்து ரதங்களைப் போல் செய்யப்பட்ட கோவில்களையும், பாறைகள் மேலே செதுக்கப் பட்ட சிற்பங்களையும் முதல் இரண்டு காலங்களில் செய்தனவாகக் கொள்ள வேண்டும். ஆகையால் 3, 4—வது காலங்களில்தான் பாருங் கற்களால் எழுப்பப்பட்ட கோவில்கள் தோன்றத் தலைப்பட்டன. அந்தக் காலத்தில்தான் உலோகங்களால் விக்கிரகங்கள் பெரும் பாலும் செய்து நாட்டப் பட்டன எனலாம். இதனாலே தான் நமக்குக் கிடைத்துள்ள பல்லவ விக்கிரகங்களெல்லாம் கி-பி 670 - க்குத் தாண்டினவாகவே இருக்கின்றன போலும்.



**பல்லவச் சிற்பங்களின் விசேஷ அம்சங்கள் :-** பொதுவாக இவ்வகைச் சிற்பங்கள் பார்க்க மிக வசீகரமாயும், இயற்கையாக அமைந்தனவாயும், மிகவும் கம்பீரத் தோற்றத்துடனும் இருக்கும். இவைகளின் முகங்கள் கொஞ்சம் நீண்டனவாயும், மூக்கு கொஞ்சம் தட்டையாயும், கை கால்கள் மிக நீண்டு பருமனற்றனவாயும், மூக வாய்க் கட்டை இரண்டு பட்டன போலவும், உடற்பாகம் தட்டையாகவும் காணப் படும். ஆபரணங்கள் கொஞ்சமாயும் ஆனால் தட்டை வடிவாகவும் இருக்கும். கையிலுள்ள ஆயுதங்கள் எவ்விதமான வேலைப்பாடும்இல்லாமல் இயற்கை வடிவுடன் அநேகமாகத் தோள்களை ஒட்டிச் சாய்ந்த வண்ணம் பிடிக்கப்படும். உடைகள் மிகக் கடினமாயும், அநேக தொங்கல்களைக் கொண்ட ஒட்டியாணம் போன்ற கட்டை உடையனவாயும் காணப்படும். முக்கியமாகப் பூணூல் பட்டையாகவும், கைமேல் விழுந்து செல்வதைப் போலவும் இருக்கும். மார்பில் விஷ்ணுவுக்கு அமைக்கப் பெறும் லக்ஷ்மி அல்லது சிரீவற்சம் ஓர் முக்கோணம் போன்ற வடிவில்செதுக்கப்பட்டிருக்கும். இவைகள் பல்லவச் சிற்பங்களின் சிறப்பாகும்.

**நமக்குத் தெரிந்த பல்லவ விக்கிரகங்கள் :—** மிகச் சிலவே நமக்குத் தெரிந்துள்ளன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு—



(1) முன் இராஜ சிம்ம பல்லவ மன்னர் காலத்துப் பாணியில் (கி-பி. 670-750)உள்ளன ஏழு. சென்னை மியூஸியத்திலுள்ள தஞ்சை ஜில்லா கீழைப் புத்தனூர் விஷபஹாரணு, நாகப் பட்டினம் போதி ஸத்துவர். புகைப்படம் (1)ல் காணப்படும் நான்கு மூர்த்திகள் : அகமதாபாத் கௌதம சாராபாயிடம் உள்ள திரிபுராந்தகமூர்த்தி ஒன்று, ஆக ஏழு.

(2) பின் இராஜ சிம்ம பல்லவ மன்னர் காலத்துப் பாணியில், கி-பி. 750-800 உள்ளன நான்கு. அவை - புகைப் படங்கள் (2, 3)ல் காணப்படும் விஷ்ணுக்கள் இரண்டு; திருவனந்தபுரம் மியூஸியத்திலுள்ள விஷ்ணு பிம்பம் ஒன்று (ரூபம் செ. 30-ல் பார்க்க): சென்னை மியூஸியத்திலுள்ள விஷ்ணு பிம்பம் ஒன்று (மியூஸியம்

அறிக்கை, வருஷம்-1932, பிளேட் இரண்டு. எண் - 1)

(3) மூன் நந்திவர்மன் பாணியில் உள்ளன நான்கு. சென்னை மியூஸியத்திலுள்ள கூரம் நடராஜர் உருவம் ஒன்று; கல்லூரியிலுள்ள நடராஜர் உருவம் ஒன்று; இப்பொழுது பம்பாயிலுள்ள விஷ்ணுக்களின் பிம்பங்கள் இரண்டு. (4) பின் நந்தி வர்மன் பாணியில் உள்ளன (கி. பி. 850-900) நான்கு. 4, 5 புகைப் படங்களில் உள்ள மூர்த்திகளுடன் மூன்று; சென்னை மியூஸியத்திலுள்ள திருவேலங்காடு சோமாஸ்கந்தர் ஒன்று; ஆக நான்கு. மேற்குறித்த 19 விக்கிரகங்களில் மியூஸியங்களிலும் சென்னை ராஜதானிக்கு வெளியும் உள்ளவைகளைத் தவிர மற்றவை என்பதேயாம். அவைகளை யெல்லாம் நேரிலே போய்ப் பார்ப்பது எளிதல்ல. ஆகவே அவைகளின் புகைப்படங்கள் இங்கே கொடுக்கப் பட்டு





திருமாளிகையில் காணப்பட்டது. மிக அபூர்வ வேலைப் பாட்டைக் கொண்டது. இதன் உடைகள், ஆபரணங்கள், தோற்றம் முதலியன இதை மேலே குறித்த விக்கிரகங்களுக்குக் காலத்தில் சிறிது பிற்பட்டன எனத் தெரிகின்றன. இதன் உயரம் 12 அங்குலம். நிறம் - சிவப்பு வர்ணம். அநேகமாகப் பெருந் தோட்டத்து விக்கிரகங்களை ஒத்திருக்கின்றது. ஆனால் அவைகளை விட மிக வேலைப்பாடுடன் இருக்கிறது. பின் இராஜஸிம்மபாணியில் அமைந்து உள்ளது.

புகைப் படம் - 3. சென்னை புரசைவாக்கத்திலிருக்கும் எஸ். டி. சீனிவாச கோபாலாச்சாரியார் மியூஸியத் (எஸ். டி. மியூஸியம்) திலுள்ளது. சுமார் ஆறு அங்குல உயரம் உள்ளது. புகைப் படம் - 2ல் காணப்படும் விஷ்ணுவின் காலத்தது. புகைப்படம் 1ல் உள்ள உட்கார்ந்த




DEALERS

BHARAT MOTORS :: MOUNT ROAD, MADRAS




"அம்மா! அம்மா! எனக்கு வேலை கிடைத்து விட்டது" என்று முகத்தில் மகிழ்ச்சி பொங்கக் கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தான் சோமநாதன். அந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்ட அவன் தாயார் மீனம்மாளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது.

இத்தனை நாளும் விடியுமா என்றிருந்த கஷ்டங்களுக்கெல்லாம் விடிவு காலம் வந்து விட்டது என்பதை எண்ணும்பொழுது யார்தான் உவகை அடைய மாட்டார்கள்! அவளுக்குத் தரையில் கால் பாவவில்லை. அக்கம் பக்கத்து வீடுகளுக்கெல்லாம் சென்று அந்த ஆனந்தச் செய்தியைச் சொல்லலானாள்.

அதைக் கண்ட சோமநாதன், "இதற்குள் ஏனம்மா இந்த விஷயத்தை எல்லோரிடமும் சொல்கிறாய்! அடுத்த வாரம் தானே வேலைக்கு உத்தரவு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள்! உத்தரவு வந்து வேலைக்குப் போய் முடிந்த பிறகு போய்ச் சொன்னால் போதாதா!" என்றான்.

அவன் வார்த்தைகளை அவள் காதில் வாங்கிக் கொண்டால் தானே!

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு தினமும் நித்யா சேவாலயிலிருந்து உத்தியோகத்துக்கான உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் சோமநாதன். ஆனால் நாட்கள்தான் நகர்ந்தனவே ஒழிய ஒரு கடிதமும் அவனுக்கு வரவில்லை. மானேஜர் குறிப்பிட்டிருந்த ஒரு வாரமும் கழிந்து விட்டது. சோமநாதனின் மனத்தில் திகில் புகுந்து கொண்டது. "ஒரு வேளை அந்த வேலையை வேறு யாருக்காவது கொடுத்திருப்பார்களோ!" என்ற எண்ணம் எழுந்ததுதான் தாமதம், அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

ஆனால் மீனம்மாள் மட்டும் தன் மகனுக்குத் தைரியம் கூறிக் கொண்டே இருந்தாள். "சோமு! வீணாக ஏன் கவலைப்படுகிறாய்! இன்று இல்லாவிட்டால் நாளை உத்தரவு வந்து விடப் போகிறது. கடவுள் நம்மைக் கைவிட மாட்டார். கலங்காதே!" என்று ஆறுதல் கூறினாள்.

மேலும் இரண்டு தினங்கள் சென்றன. சோமுவினால் அதற்கு மேலும் வீட்டில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. நித்யா சேவாலைக்குச் சென்று மானேஜரைச் சந்தித்துத் தனக்கு உத்தரவு வராத காரணத்தை வினவினான்.

தமக்கு மிகவும் வேண்டிய ஒரு நண்பர் அவர் பிள்ளைக்கு அந்த மில்லில் அவசியம் வேலை கொடுக்க வேண்டும் என்று மிகவும் கேட்டுக் கொண்டதால் அந்த மானேஜர் சோமுவுக்குக் கொடுக்கவிருந்த வேலையை நண்பரின் மகனுக்குக் கொடுத்து விட்டிருந்தார்.

அதை அறிந்த சோமநாதன் உடைந்த உள்ளத்துடன் வீடு திரும்பினான்.

சோமநாதனைக் கண்டதும் சமையலறையிலிருந்த மீனம்மாள் கைவேலையை அப்படியே போட்டுவிட்டுக் கூடத்துக்கு விரைந்து வந்தாள்.

"சோமு! மானேஜர் என்ன சொன்னார்!" என்று ஆவலுடன் வினவினாள்.

"யாருக்கு எது கிடைக்க வேண்டும் என்கிற பிராப்தம் இருக்கிறதோ, அது தானே அம்மா கிடைக்கும்! நாம் வீணாக மனக் கோட்டை கட்டினோம். அது தகர்ந்து விட்டது" என்று கூறிக் கொண்டே சோமநாதன் ஆயாசத்துடன் தரையில் உட்கார்ந்தான்.

"என்ன!"—மீனம்மாளின் உடல் நடுங்கியது.

"ஆமாம், அம்மா! அந்த வேலையை வேறு ஒரு பையனுக்குக் கொடுத்து விட்டார்களாம்!"

துக்கம் நெஞ்சை அழுத்த மீனம்மாள் அங்கேயே உட்கார்ந்து விட்டாள். அவள் தன் மகனுக்கு உத்தியோகம் கிடைத்து விட்டது என்று எவ்வளவு மன அமைதியுடன் இருந்தாள்! தங்கள் கஷ்டம் எல்லாம் தொலைந்துவிடும் என்று எவ்வளவு மன மகிழ்வடைந்திருந்தாள்! ஆனால் என்ன ஏமாற்றம்! அவள் அடைந்த அமைதியும் ஆனந்தமும் ஒரு கணத்தில் அவள் இருதயத்தை விட்டு அகன்று விட்டனவே!

மீனம்மாளால் அந்தப் பயங்கர ஏமாற்ற உணர்ச்சியைத் தாள முடியவில்லை. 'ஓ'வென்று

வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. ஆனால் தன் எதிரே சோகமே உருவாய் அமர்ந்திருந்த மகனின் முன்பு, தான் அழுதால் தன் மகன் மனம் எப்படித் துடிக்கும் என்பது தாயாரான அவளுக்குத் தெரியாத விஷயமா! எனவே, மனத் துயரத்தை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள். "சோமு! வருத்தப்படாதே! அதைவிட உயர்ந்த உத்தியோகம் நமக்குக் கிடைக்கும். கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்" என்று தழுதழுத்த குரலில் கூறிவிட்டுக் கண்களிலிருந்து பெருகிய நீரை அவன் பார்த்து விடாத வண்ணம் வேறு புறம் திரும்பித் துடைத்துக் கொண்டாள். ஆனால் அதைச் சோமநாதன் கவனிக்கத் தவறவில்லை. பெற்ற தாய் படும் துன்பத்தைக் கண்டு அவன் உள்ளம் குமுறியது. தன் துரதிர்ஷ்டத்தை எண்ணித் தன்னையே நொந்து கொண்டான்.

* * *

அன்று மாலை சோமு, தான் வழக்கமாகச் செல்லும் பூங்காவை நோக்கி நடந்துகொண்டிருந்தான். தன் தோளை யாரோ அழுத்துவதை உணர்ந்த அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் அருகில் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான் அவன் கல்லூரி நண்பன் வரதன்.

"அட, வரதனா! நீ எப்பொழுது அப்பா வந்தாய்!" என்று வினவிய சோமு தன் நண்பனை வியப்புடன் நோக்கினான்.

"இன்றைக்குக் காலையில்தான் வந்தேன்."

"ஊரில் எல்லோரும் சௌக்கியம்தானே!"

"சௌக்கியம்தான். வா, காப்பி சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்" என்று சோமுவை இழுத்துக் கொண்டு ஒரு சிற்றுண்டிச் சாலையில் நுழைந்தான் வரதன். சாப்பிட்டுக் கொண்டே பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர் நண்பர்களிருவரும்.

"இப்பொழுது நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்!" என்று சோமுவிடம் கேட்டான் வரதன்.

காப்பி டம்ளரை வாயருகில் கொண்டு சென்ற சோமு, இக்கேள்விக்குப் பதிலளிக்க அதை மீண்டும் மேஜைமேல் வைத்து விட்டு, "இரண்டு வருஷங்களாக வேலை தேடிக் கொண்டிருக்கிறேன். என்னால் முடிந்த வரை முயன்று பார்த்து விட்டேன். ஆனால் ஒரு வேலையும் கிடைக்கவில்லை" என்று கம்பிய குரலில் கூறினான்.

"என்ன! இரண்டு வருஷங்களாக வேலையில்லாமல் சும்மா இருக்கிறாயா! அதைப் பற்றி எனக்கு ஒரு கடிதம் கூட நீ எழுத வில்லையே! வீட்டை நிர்வகிக்க உங்கப்பா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பாரே!" என்று பச்சாத்தாபத்துடன் கேட்டான் வரதன்.

"ஆம், மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டுதானிருக்கிறோம்."

"சோமு! கவலைப்படாதே. உனக்கு எப்படியாவது ஒரு வேலையைப் பார்த்துக் கொடுக்கிறேன். அது என் பொறுப்பு. காப்பியைச் சாப்பிடு. ஆறிவிடப் போகிறது" என்று பரிவுடன் கூறித் தன்னுடைய அருமை நண்பனை உற்சாகப்படுத்தினான் வரதன்.

அன்று வெகு நேரம் வரை அவ்விருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

"சோமு! பல்லவன் இன்ஷியூரன்ஸ் கம்பெனி மானேஜரை எனக்கு நன்றாகத் தெரியும். எங்கப்பாவின் நெருங்கிய நண்பர். அந்தக் கம்பெனியில் இரண்டொருவர் வேலைக்குத் தேவையிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நாளைக்கு உன்னை அதன் மானேஜரிடம் அழைத்துப் போகிறேன். பத்து மணிக்கெல்லாம் தயாராக இரு, நான் வந்து விடுகிறேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டான் வரதன்.

மறுநாள் சரியாகப் பத்து மணிக்கு ஒரு வாடகைக் காரில் சோமுவின் வீட்டுக்கு வந்தான் வரதன். சோமுவை ஏற்றிக் கொண்ட கார் பல்லவன் இன்ஷியூரன்ஸ் கம்பெனியின் பிரும்மாண்டமான கட்டிடத்தின் முன் நின்றது. இருவரும் மானேஜரின் அறையில் நுழைந்தனர். வரதனை மானேஜர் மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்றார். க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்ட பின் மெதுவாகத் தான் வந்த காரியத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தான் வரதன்.

"ஸார்! உங்கள் ஆபீஸில் வேலை காலியாக இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அது உண்மை தானே!"

"ஆம், இரண்டு பேர் தேவை. முப்பத்திமூன்று பேர் பரீட்சை எழுதியிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு பேரை நேற்றுத்தான் தேர்ந்தெடுத்தேன். உத்தியோகத்துக்கான உத்தரவை அடுத்த வாரம் அனுப்புவதாக அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அது சரி, அதை ஏன் நீ கேட்கிறாய்!"

"இவன் என் அத்யந்த நண்பன், சோமு. இவனை நீங்கள் கட்டாயம் உங்கள் காரியாலயத்தில் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த உதவியை நீங்கள் எனக்குச் செய்வதாகவே எண்ண வேண்டும். பி. ஏ. படித்து விட்டு இரண்டு வருஷங்களாகச் சும்மா இருக்கிறான்."

"அடாடா! இதை நேற்றே என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா! அந்த இரண்டு பையன்களுக்கும் 'உத்தரவு' அனுப்புவதாகச் சொல்லி விட்டேனே!...ம்..." என்று கூறிப் பலத்த யோசனையில் ஆழ்ந்தார் மானேஜர். ஆனால் வரதன் அவரை விடவில்லை.





அவர் (அவனிடமிருந்து பழங்களை வாங்கிக் கொண்டு):—அம்பி, பழங்கள் ரொம்ப நன்றாயிருக்கின்றன. இந்த அரை டஜன் பழங்களுக்கும் அப்பாவிடம் வந்தனம் செலுத்த வேண்டும்.

அம்பி:—மாமா, அப்பாவிடம் நீங்கள் வந்தனம் செலுத்தும்போது முக்கால் டஜன் பழங்களுக்கு வந்தனம் செலுத்துங்கள்!

---

"அதனால் என்ன! ஒருவனுக்கு 'உத்தரவு' அனுப்பாமல் இருந்து விட்டால் போகிறது. நீங்கள் எப்படியும் என் நண்பனுக்கு வேலை கொடுக்க வேண்டும்" என்றான் வரதன்.

"சரி! உன் வேண்டுகோளை நிராகரிக்க என் மனம் சம்மதிக்க மாட்டேன் என்கிறது. உன் சிநேகிதனை வேலைக்கு எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறினார் மானேஜர்.

முகத்தில் வெற்றிக் குறி தாண்டவமாடச் சோமநாதன் பக்கம் திரும்பினான் வரதன். அவன் முகத்தில் எவ்வித மகிழ்ச்சிப் பிரதிபலிப்பும் இல்லாதிருப்பதைக் கண்டதும் ஒரு கணம் திடுக்கிட்டான். இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "சோமு! உன்னை வேலைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லி விட்டார், மானேஜர். உனக்குச் சந்தோஷம்தானே!" என்று கேட்டு விட்டு ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தான்.

"இல்லை" என்று பதிலளித்தான் சோமு.

"என்ன! உனக்கு வேலை கிடைத்திருப்பது சந்தோஷமாக இல்லையா!" என்று வியப்புடன் மீண்டும் கேட்டான் வரதன்.

"வரதன்! எனக்கு இந்த வேலை வேண்டாம். நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அதை அடையட்டும். தமக்கு உத்தியோகம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் பல ஆசைக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருப்பார்கள். அவை தகர்ந்து விழ நான் ஏன் காரணமாக இருக்க வேண்டும்! வரதன்! இரண்டு மாதங்களுக்கு முன் நானும் பல கோட்டைகள் கட்டினேன். எனக்கு உத்தியோக உத்தரவு அனுப்புவதாகச் சொல்லியிருந்தார் நித்யா நெசவாலை மானேஜர். ஆனால் அந்த வேலையைத் தம் நண்பரின் மகனுக்கு அவர் கொடுத்து விட்டார். நான் எழுப்பியிருந்த ஆசைக்கோட்டை மண்ணாகியது. என் பெற்றோர் எதிர்பார்த்து ஏமாந்து தாங்கொணா மனவேதனையை அடைந்தார்கள். அந்த நிலையை நான் மற்றவர்களுக்கு ஏற்படுத்த விரும்பவில்லை. என்னை மன்னித்து விடு. எனக்காக நீ மிகவும் சிரமத்தை மேற்கொண்டிருக்கிறாய். அதற்காக நன்றி" என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான் சோமு. அதைக்கேட்ட வரதன் பிரமித்துப் போய் விட்டான். சோமுவின் உயர்ந்த குணத்தைக் கண்டு மானேஜர் மனத்துள் பெரிதும் வியந்தார்.

கார் சோமுவின் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதில் அமர்ந்திருந்த நண்பர்களுக்கிடையே அமைதி நிலவியது. சில நிமிஷங்களுக்குப் பிறகு வரதனே பேசலானான்.

"சோமு! பிறர் கஷ்டப்படுவார்கள் என்பதற்காக நீ உன்னைக் கஷ்டப்படுத்திக் கொள்கிறாய். ஒரு அருமையான உத்தியோகத்தை உதறித் தள்ளி விட்டாய். பிறர் கஷ்டத்துக்கு இரங்கினால் இவ்வுலகில் நாம் வாழவே முடியாது" என்று உபதேசம் செய்தான் வரதன். சோமநாதன் அதற்கு மறுமொழி ஒன்றும் கூறாமல் புன்னகையுடன் வரதனை நோக்கினான்.

"சாயந்திரம் வருகிறேன்" என்று கூறிச் சோமுவை அவன் வீட்டெதிரே இறக்கி விட்டுப் போய் விட்டான் வரதன்.

சோமு வீட்டில் பிரவேசித்ததும் மீனம்மாள் "சோமு! எங்கே போய்விட்டு வருகிறாய்? காரிலிருந்தானே, அந்தப் பையன் யார்!" என்று ஆவலுடன் கேட்டாள்.

"அவன் என் சிநேகிதன் வரதன், அம்மா! பட்டணத்திலிருந்து வந்திருக்கிறான். அவனுக்கு ஊரைச் சுற்றிக் காட்டிவிட்டு வந்தேன்" என்று ஒரு பொய்யைக் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்று விட்டான் சோமு.

மறுநாள் காலை. தபால்காரர் எறிந்து விட்டுச் சென்ற கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்ட சோமநாதன் அதை ஆவலுடன் உடைத்துப் பார்த்தான். பல்லவன் இன்ஷியூரன்ஸ் கம்பெனியிலிருந்து அக் கடிதம் வந்திருந்தது.

"அன்புள்ள சோமநாதனுக்கு,

உன்னுடைய உயர்ந்த உள்ளமும், மேன்மையான குணமும் என்னைக் கவர்ந்து விட்டன. உன்னை என் அந்தரங்கக் காரியதரிசியாக நியமித்திருக்கிறேன். நாளைக் காலை பத்து மணிக்கு வந்து உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளவும்.

வேணுகோபால்
மானேஜர்."

கடிதத்தைப் படித்து முடித்த சோமுவுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதைப் பன்முறை படித்துப் பார்த்த பிறகே அவனால் நம்ப முடிந்தது. துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினான்.

"அம்மா, அம்மா! எனக்குப் பெரிய உத்தியோகம் கிடைத்து விட்டதம்மா! நாளை முதல் நான் பல்லவன் இன்ஷியூரன்ஸ் கம்பெனி மானேஜரின் அந்தரங்கக் காரியதரிசி" என்று மகிழ்ச்சி பொங்கத் தன் தாயாரிடம் தெரிவித்தான்.

அதைக் கேட்டதும் வியப்பினால் விரிந்த கண்களுடன் சோமுவைப் பார்த்தாள் மீனம்மாள்.

வறண்டு போயிருந்த அவன் உள்ளத்தில் 'குபீ'ரென்று ஆனந்த வெள்ளம் பாய்ந்தது. "கடவுள் கண் திறந்து பார்த்து விட்டார்!" என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

# அரவிந்த்

ஜவுளிகளில் புகழ்பெற்ற
பெயர்

**இப்பொழுது
அளிக்கின்றது...**

**·ஸான்போரைஸ்ட்·
துணிமணிகளும்
பலவர்ண
பிரிண்டுகளும்**

"அரவிந்த்" ஸான்போ
ரைஸ்ட்-சுருக்கப்பெற்ற

-ஷர்ட்டிங்-பாப்ளின்
-கோட்டிங் இப்போ
ழுது கிடைக்கும்.

பலவர்ண பிரிண்டுகள்-
எட்டு வர்ணங்கள் கொண்
டுள்ள-வாயில்கள்-
கேம்பிரிக்-பாப்ளின்.

Arvind

QUALITY FABRICS

**அரவிந்த் மில்ஸ் லிமிடெட் · அமதாபாத் 2.**

ஏஜண்டுகள் :

அஜித் பாய் ஜயந்திலால் & கம்பெனி
5, கிடங்கு தெரு, சென்னை-76, கீழ மாரட் வீதி, மதுரை & விஜயவாடா

யு. என். ஷர்மா
சிக்பேட், பெங்களூர் சிட்டி

கணேஷ்மல் பிரதாப்மல் & கம்பெனி
கார் தெரு, பெல்லாரி

நாக்ஜி புருஷோத்தம் & கம்பெனி லிமிடெட்
பெரிய கடைத் தெரு, த. பெ., 36, கோழிக்கோடு

# யோகாசன சிகிச்சை


**வி. என். குமாரஸ்வாமி**

## 13 ஆஸ்துமா

ஆஸ்துமாவைப் பற்றித் தற்காலத்தில் அனைவரும் அறிவர். ஆஸ்துமா என்றால் மூச்சைச் சரிவர விட முடியாது. இழுப்பு மாதிரி வரும், இருமல் இருக்கும் என்று பொதுவாக அறிவார்களே தவிர, அதன் அடிப்படைக் காரணங்களைச் சரிவர அறியார்கள். அப்படி அதன் காரணங்களை அறிந்தார்களானால் ஆஸ்துமா மருந்தால் போகக் கூடியதா அல்லது யோக ஆசனங்களால் போகக் கூடியதா என்பதைப்பற்றி அவர்களாகவே முடிவுக்கு வந்து விடுவார்கள்.

"ஆஸ்துமா ஒரு நோய் அல்ல. அது நோயாயிருந்தாலல்லவா மருந்துக்குக் கட்டுப்படும்!" என்று மருந்தைப் பற்றிப் பரிந்து கொண்டு சிலர் பேசுவார்கள். ஆனால் இப்படிப் பேசிக் கொண்டு மருந்தை மட்டும் உபயோகிப்பதை நிறுத்த மாட்டார்கள். மருந்துகளை உபயோகித்துக் கொண்டு தான் இருப்பார்கள். மருந்தை நிறுத்தி விட்டால் எங்கு நோய் அதிகரித்து விடுமோ என்ற பயம்.

ஆஸ்துமா, நோயைச் சேர்ந்தது இல்லை என்கிறார்கள். ஆனால் ஆஸ்துமாக்காரர்கள் படும் அவஸ்தைகளைக் கவனியுங்கள். நோய் உள்ளவர்கள்தான் அவஸ்தைப் படுவார்கள். ஆஸ்துமா ஒரு நோய் அல்ல என்றால் ஆஸ்துமாக்காரர்கள் சுகத்தையா அனுபவிக்கிறார்கள்! கிருமிகளால் உண்டாகும் நோய் அல்ல என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, நோயே அல்ல என்று சொல்வதற்கில்லை. சாதாரணத் தலைவலிகளை நோய் என்கிறோம். வயிற்று வலியை நோய் என்கிறோம். அப்படியிருக்கச் சரியாய் மூச்சு விட முடியாமல், இருமிக்கொண்டு, அப்படி இருமியும் கபம் வெளி வராமல் திணறும் ஆஸ்துமாவை நோய் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது!



"பொங்கல் இறும் வேணுமா? ஐயா இல்லே போய், வா!"

"இல்லையா? அவரைக் கதவு மூலையிலோ, பீரோவின் பின்னாலோ, கட்டிலுக் கடியிலோ போய்த் தேடிப் பாருங்கள், இடைப்பாரு!"


சாதாரணமாய் உடலில் நடக்க வேண்டிய காரியங்கள் எக்காரணத்தினாலோ சரிவர நடவாமல் மாறுதல் ஏற்பட்டு அம்மாறுதலினால் கஷ்டப் படுவதுதான் நோய் எனப்படும்.

அந்த விதத்தில் பார்த்தால் ஆஸ்துமா கட்டாயம்நோய் என்றுதான் சொல்ல வேண்டும்.

சரி, மருந்துகளினால், ஆஸ்துமாவைப் போக்க முடியாது என்பதையும் அறிகின்றார்கள். ஆனால் மீண்டும் மீண்டும், மருந்துகளையே நாடுகிறார்களே, இதற்கு என்ன காரணம்! வேறு வழிகளை மக்கள் சரிவர அறியாததினால்தான் என்று சொல்லலாம். இன்னமும் நம் நாட்டு மக்களுக்கு உடல் சம்பந்தமான ஞானம் போதிய அளவு ஏற்படவில்லை. எண்ணிறந்த பத்திரிகைகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளில் எத்தனை பத்திரிகைகள் மக்கள் நோய்களின்றி ஆரோக்கியமாய் வாழ, உடல் ஞானத்தை உண்டாக்க வழிவகை செய்கின்றன என்று பார்த்தால் விரல் விட்டு எண்ணி விடலாம். மற்ற நாடுகளில் இதற்கென்றே தனிப் பத்திரிகைகள் வெளியிடுகின்றனர். மக்கள் அவைகளை வாசித்து உடல் ஞானம் பெறுகின்றனர். ஒரு நோய் வந்தால் அதன் தன்மையை அறிந்து அதைப் போக்கச் சரியான வழி தேட முற்படுகின்றனர்.

ஆஸ்துமா நோய் நமது நாட்டில் மட்டுமல்ல உலகெங்கிலும் இந்த நோய் இருக்கிறது. ஆஸ்துமா நோய்க்கு ஒரு முடிவுகாண வேண்டுமென்று பல விஞ்ஞானிகளும், டாக்டர்களும் சேர்ந்து 1927-ம் வருடத்தில் லண்டனில் "ஆஸ்துமா பரிசோதனைக் கமிட்டி" என்று ஒன்றை ஏற்படுத்தினார்கள். அவர்கள் ஆஸ்துமாவைப் பற்றிப் பலவிதமாய் ஆராய்ந்து கடைசியில் ஒரு முடிவைத் தெரிவித்தார்கள். "ஆஸ்துமா மருந்துகளினால் முற்றிலும் போக்க முடியாது; தேகப்பயிற்சிகளினால்தான் முற்றிலும் போக்க முடியும்" என்பதுதான் அவர்களின் முடிவு.

எனவே, சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே செய்த முடிவை எத்தனை பேர் அறிவார்கள்! ஏதோ வைத்திய உலகம் அறியும். அதற்கான பத்திரிகைகளில் மேற்படி விஷயம் பிரசுரமாகியிருக்கும். நம் நாட்டில் அம்மாதிரிப் பத்திரிகைகளை எத்தனை பேர் வாசித்திருப்பார்கள்! ஆனால் இம்மாதிரி விஷயங்களைப் பொது மக்கள் சீக்கிரம் உணராவிட்டாலும் புதுப் புது விதமான மருந்துகளைப் பற்றி யெல்லாம் எப்படியோ தெரிந்து கொள்ளுகிறார்கள். ஸ்டெரப்டோமைஸின் என்ன, ஆரோமைஸின் என்ன, குளோரோபில் என்ன! இவைகளைப் பற்றி யெல்லாம் தெரிந்திருக்கிறது. இவைகளெல்லாம் மிக மிகச் சமீப காலத்தில் வந்தவை தான். பெனிஸிலின், சல்பொடமைன் எல்லாம்



சென்னை, தேனாம்பேட்டையில் நடந்துவரும் இவ் வருஷத்திய அகில இந்திய காதி சுதேசி பொருட் காட்சியில் சிறந்த கலைக் காட்சிகளும் இடம் பெற்றிருக்கின்றன. பாலு சகோதரர்களின் ஓவியக் கலைக் கண் காட்சி கலைப் பண்புடன் தமிழ் மணமும் கலந்து மிளிர்கிறது. அகநானூறு, புறநானூறு, திருக் குறள், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களின் அபூர்வ காட்சிகளுக்கு அருமையான வர்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அத்துடன் காந்தி மகானின் வாழ்க்கையின் சில முக்கியப் பகுதிகளையும் வண்ண ஓவியமாக வரைந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுத் தலைவர்கள், பிரமுகர்கள் இவர்களின் உருவங்கள் சிலவற்றையும் தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறார்கள். இந்தக் கலைக் காட்சியை ஜனவரி மாதம் 3ந் தேதி அன்று கல்வி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் தலைமையில் "கல்கி" ஆசிரியர் திறந்து வைத்தார். பாலு சகோதரர்களுடன் கலைக் காட்சியைத் தலைவர்கள் பார்வையிடும் காட்சியை மேலே படத்தில் காணலாம்.

மட்டமாய் விட்டிருக்கிறது. எனவே மக்கள் மனப் பான்மை அப்படி யிருக்கிறது.

ஒருகால் ஆஸ்துமா பரிசோதனைக் கமிட்டியார் ஒரு புது வித மருந்தைச்சிபாரிசுசெய்திருப்பார்களானல் மக்கள்சீக்கிரம்உணர்ந்திருப்பார்களோ என்னவோ! தவிர மருந்தைச் சிபார்சு செய்திருந்தால் மருந்தை உற்பத்தி செய்பவர்களே அதை மக்கள் அறியக் கவர்ச்சியுடன் வெளியிட் டிருப்பார்களோ என்னவோ!

தேகப் பயிற்சிகள் செய்வதுதான் அதற்கு மருந்து என்றால், எந்த விளம்பரக் காரராவது தேகப் பயிற்சி செய்யுங்கள் என்று விளம்பரம் கொடுப்பாரா! அல்லது வைத்தியர்கள்தான் தன்னிடம் வரும் நோயாளிக்குத் 'தேகப் பயிற்சி செய், உன் ஆஸ்துமா நீங்கி விடும்' என்று சொல்ல முடியுமா! அப்படிச் சொன்னால் "இந்த டாக்டர் என்ன, கையையும் காலையும் வளைத்துக் கஷ்டப் படச் சொல்லுகிறாரே! ஏதோ மருந்து கொடுப்பார், ஊசி போடுவார் என்று பார்த்தால் இவர் இம்மாதிரி சொல்லுகிறாரே!" என்று மறு முறை அவரிடம் போக மாட்டார்கள். இந்த டாக்டர் டிரில் மாஸ்டராய் இருக்க வேண்டியவர், டாக்டராய் வந்து விட்டார் என்றும் முடிவு செய்து விடுவார்கள். மக்கள் மனப்பான்மை அவ்விதம் இருக்கிறது. அதற்குத் தகுந்தபடிதான் வைத்தியர்களும் நடந்து கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. அதனால்தான் ஆஸ்துமா தேகப் பயிற்சிகளினால் போக்க முடியும் என்ற முடிவை மக்கள் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

விஞ்ஞானம், அறிவு, ஆராய்ச்சிகள் பெருகப் பெருக மக்களுக்கு உடல் உழைப்பு குறைந்துவிட்டது. சோம்பல் அதிகரித்து விட்டது. எல்லாம் தன்னாலேயே நடக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். உடை நலுங்காமல், உடல் அசையாமல் வாழ்வதுதான் நாகரிகம் என்று நம்புகிறார்கள். ஆனால் இயற்கை விதி அப்படி இல்லை. உடலை உழைத்து உரமேற்றிக் கொண்டு வாழ வேண்டு மென்று இருக்கிறது.

"தோளை வலியுடையதாக்கி — உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி — அரி
வாளைக்கொண்டு பிளந்தாலும் — கட்டு
மாறு உடலுறுதி தந்து"

என்று பாரதியார் பாடி யிருக்கிறார். எத்தனை பேருக்கு நம் நாட்டில் அப்படி யிருக்கிறது! வழு வென்று வாழைக்காய் போல அல்லவா உடல் இருக்கிறது. உடல் ஞானம் என்று நம் மக்களிடையே ஏற்படுகின்றதோ அன்றுதான் நமது மக்கள் ஆரோக்கியமாக இருக்க முடியும்.

சமூகத்தில் சேர்ந்து வாழும் போது மக்கள் எல்லோருக்கும் ஒரே விதமாய் உடலுழைப்பு இருக்காதுதான். சிலருக்கு உடலுழைப்பு இருக்கும். சிலருக்கு மூளை உழைப்பு இருக்கும். சிலருக்குக் கை உழைப்பு இருக்கும். சிலருக்குக் கால் உழைப்பு இருக்கும். உடலிலுள்ள எல்லா அவயவங்களுக்கும் வேலை கிடைக்கும்படி யாரும் வாழ முடியாது. ஆனால் யார் யாருக்கு எந்த அவயவங்களுக்கு வேலை யில்லையோ, அதைத் தேகப் பயிற்சிகள் மூலம் அடைய வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஆரோக்கியமாய் வாழ முடியும். ஆஸ்துமா போன்ற நோய்களைத் தடுக்க முடியும். ஏதோ அவரவர்களால் ஆன உழைப்பைச் செய்பவர்களுக்கே ஆஸ்துமா வியாதி பற்றுகிறதென்றால் வெறும் வயிற்றுப் பிழைப்பை மட்டும் செய்து வருகிறவர்களுக்கு இந்த நோய் வரச் சொல்லவா வேண்டும்!

ஆஸ்துமா யாரையும் பாரபட்சம் பாராட்டுவதில்லை. ஏழைக்கும் வருகிறது; பணக்காரனுக்கும் வருகிறது. சிறுவர்களுக்கும் வருகிறது; பெரியவர்களுக்கும் வருகிறது; ஆண்களுக்கும் வருகிறது; பெண்களுக்கும் வருகிறது. உஷ்ண நாட்டிலும், வருகிறது; சம சீதோஷ்ண நாட்டிலும் வருகிறது;

குளிர் காட்டிலும் வருகிறது. எனவே, இது வல்லமை மிக்க நோயாய் இருக்கிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்த நோயைப் போக்க மக்களின் மனப்பான்மைக்குத் தக அந்தந்த நாட்டில் அவரவர்களுக்குப் பிடித்தமான முறைகளில் எத்தனையோ வித வைத்தியங்கள் இருக்கின்றன. அலோபதி, ஹோமியோபதி, நேசுரோபதி முதல் நம் நாட்டு ஆயுர்வேத, சித்த, யுனானி வரை சகலவித வைத்தியங்களிலும் மருந்துகள் பல உண்டு. இத்தனையும் தவிர, வீட்டுக் கை வைத்தியம் பல உண்டு. அவரவர்கள் சௌகரியம் போல் இவைகளைச் செய்து கொள்ளுகின்றார்கள். ஆனால் இவைகளெல்லாம் தற்கால சாந்தியே தவிர, முற்றிலும் குணமாக்காது. சிலருக்கு முற்றிலும் விலகினது போல் தோன்றும். ஆனால் அடுத்த வருடமோ அல்லது இரண்டு மூன்று வருடங்கள் கழித்தோ மறுபடியும் வந்துவிடும். அப்படி வந்தால் பழையபடி பல நாள் கஷ்டப்பட வேண்டியதே. மருந்துகளினாலும் உடனே போக்கிவிட முடியாது. நீண்ட நாள் சிகிச்சைக்குப் பின்தான் குறையும். முழுதும் குறையுமென்று சொல்ல முடியாது. அப்படி மறைந்தால், அடியோடு அற்றுவிட்டால், பின் ஒரு வருடம் கழித்தோ இரு வருடங்கள் கழித்தோ ஏன் வருகிறது! ஏதோ சிறிது தணிந்து, பிறகு சமயம் பார்த்துத் தாக்கும் எதிரிபோல் தாக்குகிறது. சிலருக்கு ஐந்து ஆறு வருடங்களுக்குப் பின்பும் தாக்குவது உண்டு.

எனவே, ஆஸ்துமா நோயாளிகள் ஒரு தடவை ஆஸ்துமா வந்து விட்டால், அவர்கள் ஆயுள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியதுதான் என்று நன்கு தெரிகிறது. ஏதோ ஒரு தடவை வந்து கஷ்டப்பட்டோம், மருந்துகள் அருந்தினோம், ஊசிகள் போட்டுக் கொண்டோம் விலகிற்று என்பது கிடையாது. அப்படி மருந்துகளினால் குறைந்தாலும் எந்த நேரத்தில், எந்த நாளில் மறுபடியும் வந்துவிடுமோ என்று பயந்து கொண்டுதான் வாழ வேண்டும். இதுவும் ஒரு வாழ்க்கையாகுமா! பயந்து பயந்து சாவது ஒரு வாழ்க்கையாகுமா! ஆஸ்துமாவை ஒரு நோய் அல்ல என்று சொல்லுபவர்கள், ஆஸ்துமா நோய் வந்து கஷ்டப்படுகிறவர்களைக் கேட்டுப் பார்க்கட்டும். அவர்கள் 'ஆஸ்துமாவா! அது பிரம்ம ராட்சதன் போலல்லவா தாக்கும்' என்று சொல்லுவார்கள். ஏன் நேரில்தான் அவர்கள் படும் அவஸ்தையைப் பார்க்கட்டுமே! கண் கொண்டு பார்க்கச் சகிக்காது. முகம் வெளுத்துக் கண் செருக, ஒரு நல்ல மூச்சு விட எவ்வளவு ஆவலாய் எதிர்பார்த்துக் கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியும். படுக்கக்கூட முடியாது. படுத்தால் மூச்சு விட முடியாது. நான்கைந்து தலையணைகள் போட்டு அதன்மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நித்திரையில்லாமல் கஷ்டப்படுவார்கள். ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்களல்ல, பல இரவுகள் இம்மாதிரி கழிக்க வேண்டியிருக்கும். நித்திரை கெட்டால் பின் உடல் நலம் கெடக் கேட்க வேண்டுமா! அப்பொழுது அவர்களுக்கு எதன்மேலும் இச்சை இருக்காது. லட்சம் லட்சமாய்க் கொடுத்தாலும் லட்சியம் செய்யமாட்டார்கள். அவர்கள் விரும்புவது எல்லாம் நன்றாய் மூச்சு விடவும், தூக்கம் வரவுமே. அதில் இருமல் வேறு இருந்து விட்டால் சொல்ல வேண்டியதில்லை. நோயாளி இருமி இருமி பிரம்மஹத்திகளைப் போன்று முகம் தோன்றும். இதற்குப் பிரம்ம ராட்சதன் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுவார்கள்!

ஆகையால் ஆஸ்துமாவுக்கு வைத்தியத்தினால் செய்ய முடியாத சிகிச்சையை ஆசனங்களின் மூலமாகச் செய்யலாம். அதற்குக் கொஞ்சம் உடலுழைப்பு அவசியம். காலையிலோ, மாலையிலோ தினம் தினம் ஆசனப் பயிற்சிகள் செய்து வர வேணும். ஆசன நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து உடலின் நிலைமைக்குத் தக்கபடி ஆசனங்கள் செய்து வரவேணும். (தொடரும்)

# திரு வி. க. மணிமண்டப நிதி

திரு வி. க. மணிமண்டப நிதிக்கு 29–11–53ல் "கல்கி" இதழில் வெளியான தொகைகளுக்குப் பின்னர் கீழ்க்கண்ட நன்கொடைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன:—

ஸ்ரீமான்கள் எஸ். எஸ். வாஸன், ஜெமினி அதிபர் சென்னை, ரூ. 250; சி. எம். ராமச்சந்திரன் செட்டியார் தம்பதிகள் ரூ. 142; விற்பனை வரி எதிர்ப்பு மகாநாடு, ஈரோடு, ரூ. 105; எஸ். குப்புசாமி முதலியார், பார்க் டவுன், சென்னை, ரூ. 101; எஸ். பாலசுப்பிரமணிய முதலியார், பார்க்டவுன், சென்னை. ரூ. 101; டி. கே. நாராயணசாமி நாயுடு, கிழக்கு மருதூர், ரூ. 100; காரியதரிசி, திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கம், ரூ. 100; ஆர். எம். சின்னய நாயுடு, திருவானைக்கா, ரூ. 100; திருவள்ளுவர் கழகம், மதுரை, ரூ. 100; பி. தண்டபாணி ஐயர், சேலம், ரூ. 59; பி. பத்மநாப ஐயர், ராயப்பேட்டை, சென்னை, ரூ. 50; பி. நாராயணசாமி, சிங்கப்பூர், ரூ. 50; கெ. ராமலிங்க முதலியார், திருச்சி, ரூ. 50; எம். சின்னசாமி ரெட்டியார், திருவெண்ணெய் நல்லூர், ரூ. 50; பி. எச். சுந்தரம், நெல்லூர், ரூ. 25; பி. வி. தேவராஜ முதலியார், திருப்பாதிரிப்புலியூர், ரூ. 25; கே. ராமநாதன் செட்டியார், கோலாலம்பூர், ரூ. 16; டாக்டர் எஸ். பாலசுந்தரம், பாலாஜி நகர், சென்னை, ரூ. 15; எம். ராமானுஜம், நாஸரேத், ரூ. 10; பி. எஸ். சுப்பிரமணியம், சேடர்பாளையம், ரூ. 9–9–0; ரூ. 5–0–0 கொடுத்த அன்பர்கள்: வி. டி. சுப்பிரமணியம், சின்ன சேலம்; கே. கந்தசாமிச் செட்டியார், திருப்பூர்; வி. கல்யாணசுந்தரம், தியாகராயநகர், சென்னை; எஸ். ஜி. சேஷகிரி மல்லிகார்ஜுனன்; வி. எம். சங்கரன், கூடலூர், ரூ. 4; எஸ். பொன்னப்ப ஆழ்வார் ஐயங்கார், ஆழ்வார் திருநகரி, ரூ. 3; எஸ். சிதம்பரம், ரூ. 3; வித்வான் பழனி மகாதேவன், ஆம்பூர் ரூ. 2; ரூ. 1–0–0 கொடுத்த அன்பர்கள்: கே. தியாகராஜன், மேட்டூர் அணை; எம். மீனாக்ஷி, மதுரை; கே. அழகர்சாமி, குலப்புரம்; சி. சீதாராம், உடுமலைப்பேட்டை; ச. சிவராஜன், செய்துப்பை: பா. கமலக்கண்ணன், புதுச்சேரி; குத்தாலலிங்கம், விக்கிரமசிங்கபுரம்; வி. பி. தாமோதரம், பெல்லாரி; வி. சுப்பிரமணியம், மன்னார்குடி; ஆர். நடராஜன், திருவண்ணாமலை; சுப. காசி, மதுரை.

குறிப்பு:— திரு வி. க. மணிமண்டப நிதிக்கு நன்கொடை அனுப்ப விரும்புவோர் ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., காரியதரிசி, திரு. வி. க. மணிமண்டப அமைப்புக் குழு, 175/A, லாயிட்ஸ் ரோடு, சென்னை 14. என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம்.

# ஸ்டோன்வேர் பைப்புகள்

பாதாள சாக்கடைகளுக்கு ஏற்றவிதத்தில்
'ஸால்ட் கிளேஸ்' செய்யப்பட்டிருக்கிறது

ஒரு "டால்மியா" தயாரிப்பு

**டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்**


டால்மியாபுரம் - திருச்சி ஜில்லா







**நோவுகள், தலைவலி, ஜலதோஷம், ஜுரம்**

இவற்றினின்று துரிதமாக நிவர்த்திபெற



# விசைச் சக்தியின் வேகம்


நீங்களும் பெறுக



# வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சிரமமான வேலை நிலையிலும், சளைக்காத உணர்ச்சியிருக்கும் போதுதான் நீங்கள் திடமான ஆரோக்யம் உள்ளவரென்பதைக் குறிக்கும். சளைக்காத உணர்ச்சி பெறுவதற்கு, பிரதி தினமும் போஜனத்தின் அங்கமாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுவதைத்தவிர சிறந்த தொன்றுமில்லை. தேக வலுவூட்டுவதற்கு அத்யாவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட், வேலை செய்வதற்கான திராணியை பெருக்கி, சோர்வு, ஜலதோஷம், இருமல் மற்றும் இதர பிணிகளுக்கு இடம் கொடாதபடி தேகத்திற்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.


உங்கள் குடும்பம் முழுவதற்கும் இப்பொழுதே வாங்கி விடுங்கள்



## WATERBURY'S
## COMPOUND
## வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களை தென்புடன் வைத்திருக்கும்

NAS-41-63



# கடமை முடிந்தது

ரா. பாலகிருஷ்ணன்

கந்தசாமி கவலையே உருவாகத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அப்போது அங்கே அவசர அவசரமாக ஓடி வந்த செங்கமலம் "அப்பா உங்களை உடனே பார்க்கணுமாம், உள்ளே வரச் சொன்னாங்க" என்றாள்.

இதைக் கேட்டதும் கந்தசாமிக்கு உடம்பு வெலவெலத்து விட்டது. எந்த முகத்துடன் அவர் முன்னால் போய் நிற்பது என்ற கவலை அவனை எல்லையற்ற வேதனைக் குள்ளாக்கியது.

"கூப்பிட்டாரா! சரி, இன்னியோடே என் பிழைப்பு போச்சு! தின்கிற சோற்றிலே மண் விழுந்து விடும்!" என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"என்ன யோசனை! போய்க் கேளுங்க" என்று செங்கமலம் அவனைத் துரிதப்படுத்தினாள். ஆனால் இடத்தை விட்டு எழுந்து நின்ற கந்தசாமியால் அடியெடுத்து வைக்க முடியவில்லை. அவன் கால்கள் தள்ளாடின.

"செங்கமலம்! நீ சிறு பெண். உனக்கு விவரம் தெரியாது. உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்த பாவி என்று அவர் கேட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்! உங்க அப்பா எனக்குச் செய்திருக்கிற உபகாரத்துக்கு நான் அவருக்குத் திருப்பிச் செய்தது என்ன! அவர் என்னை மன்னித்து விடுவாருன்னு நினைக்க முடியுமா! இந்த ஒரு மாதகாலம் என்னை வீட்டை விட்டுத் துரத்தாமல் இருந்தாரே, அதுவே என் நல்லகாலந்தான்! இன்னொரு முதலாளியாக இருந்தால், நான் செய்த காரியத்துக்கு என்ன நடந்திருக்கும், தெரியுமா!" என்றான் கந்தசாமி அழ மாட்டாக் குறையாக.

"அப்படி நீங்க மனதார என்ன தப்பு செய்து விட்டீங்க! தெரிந்து செய்தால்தானே அது குற்றமாகும்! சும்மா போங்க, பயப்படாமே!" என்று அவனுக்குத் தைரியமூட்டிப் பேசினாள் செங்கமலம். அவள் சொன்னதும் ஒரு விதத்தில் நியாயந்தான் என்றாலும், கந்தசாமியின் உள்ளத்திலிருந்த பாரம் இறங்கவில்லை. இனமறியாத ஒரு கலவரம் தோன்றி அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது.

** ** **

கந்தசாமி கடமை உணர்ச்சி மிக்கவன். மூன்று வருடங்களுக்கும் மேலாகத் தங்கவேலுப் பிள்ளையிடம் அவன் தொடர்ந்து லாரி ஓட்டும் உத்தியோகம் பார்த்து வருகிறான், என்றால் அதற்குக் காரணம் அவனது கடமை உணர்ச்சியும் நேர்மையான நடத்தையுமே. அதற்கு முன்பு அந்த வேலையிலிருந்த யாராலும் மூன்று மாதங்களுக்கு மேல் தங்கவேலுப் பிள்ளையின் முன் கோபத்தைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

தங்கவேலுப் பிள்ளைக்கு அவனிடமிருந்த விசுவாசத்தாலேயே அவனையும் அவனுடைய தாயாரையும் தம்முடைய விருந்தினர் வீட்டில் வாடகையின்றிக் குடியிருக்க அநுமதியளித்திருந்தார். அந்த மூன்று வருட காலத்தில் அவன் ஏதாவது தவறு செய்திருந்தால், அது தங்கவேலுப் பிள்ளையின் ஒரே மகளான செங்கமலத்தைக் காதலித்தது ஒன்றுதான். அது தவறானால், அதற்குப் பொறுப்பாளி அவனல்ல. செங்கமலத்தின் முகத்தில் தவழ்ந்த குறுநகையும், யௌவனத்தின் பூரணப் பொலிவுடன் விளங்கிய அவள் உடற்கட்டும் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் வியப்பென்ன! அவனும் ஆண் மகன் தானே! அதிலும் கல்யாணமாக வேண்டிய வாலிபன்!

கந்தசாமியின் கட்டுமஸ்தான உடலமைப்பும் கள்ளமற்ற உள்ளமும் செங்கமலத்தின் மனத்தைக் கவர்ந்திருந்தன. ஆனால் பொருளாதார

விஷயத்தில் மட்டும் பலவிதங்களிலும் ஒன்று பட்ட அந்த இரு ஜீவன்களுக்கு மிடையே எத்தனை வித்தியாசம்! கந்தசாமி மாதம் அறுபது ரூபாய் சம்பாதிக்கும் லாரி டிரைவர். அவன் முதலாளி தங்கவேலுப் பிள்ளையோ தரகு வியா பாரத்தில் ஏராளமாகப் பணம் சேர்த்திருந்தார். தம் மகளுக்கும் கந்தசாமிக்கு மிடையே வளர்ந்து வந்த அன்பு, கனிந்து காதலாகி விடாமலிருக்க வேண்டி, மகளைச் சமயம் வாய்த்தபொழுது ஒன்றிரண்டு தடவைகள் ஜாடையாகக் கண்டித்தும் வந்திருக்கிறார். ஆனால் காதல், கண்டிப்புக்குப் பயப்படுகிறதா, என்ன! கண்டிப்பு அதிகமாக ஆக, காதலின் வேகமும் விருத்தியடைந்து கொண்டுதானே வருகிறது!

•• •• ••

அன்று கந்தசாமி லாரியை அதன் கொட்டடியிலிருந்து எடுத்தபோது மழை பிசு பிசுவென்று தூறிக் கொண்டிருந்தது. வானத்தை நிமிர்ந்து நோக்கியவன், கருமேகங்களினூடே பளிச்சிட்ட மின்னல்கள் பலத்த மழைக்கு அடி கோலுவதை யுணர்ந்தான். மழையோ, இடியோ, எப்படியும் முதலாளி தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றியே தீருவது என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்.

லாரி கிளம்பிய சத்தம் கேட்டுச் செங்கமலம் வாசலுக்கு ஓடோடியும் வந்தாள்.

"என்னங்க இது! இந்த இடியிலும் மழையிலும் எங்கே கிளம்புவதாக உத்தேசம்!" என்றாள், கலவரம் தோய்ந்த குரலுடன்.

"உஷ்! சத்தம் போடாதே!" என்ற கந்தசாமியின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், கலகலவென்று சிரித்தாள் அவள்.

"ஏன் சிரிக்கிறே!" என்றான் அவன்.

"அப்பா வந்துடப் போகிறாரே என்றுதானே நீங்கள் பயப்படறீங்க! அவர் சைதாப்பேட்டை போயிருக்காங்க. திரும்பிவரப் பத்து மணி ஆகும்" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தாள் அவள்.

"உனக்கென்ன அம்மா! நீ பேசுவே! முதலாளி மகள் என்ன வேணுமானாலும் பேசலாம், செய்யலாம். ஆனால், நான் முறை தவறி நடந்துவிட்டதாக முதலாளி சந்தேகப்பட்டால் என் வேலைக்கே சீட்டுக் கிழித்து விடுவாரே!" என்றான் கந்தசாமி.

"சீட்டுக் கிழித்தால் என்னவாம்! பட்டினியா கிடந்துவிடப் போறீங்க! இந்த லாரி இல்லாவிட்டால் பட்டணத்திலே வேறே எத்தனையோ லாரி! என்னவோ கிடந்து உசிரை விடுறீங்களே!" என்றாள் அவள், கேலியாக.

"இந்த லாரிக்காகவா நான் உசிரை விடறேன்! லாரிக்குப் பஞ்சமில்லே, சரிதான். ஆனால், எல்லா முதலாளிக்கும் ஒரு செங்கமலம் மகளாகப் பிறந்திருக்க முடியுமா!" என்றான் கந்தசாமி.

"ஏது! இவ்வளவு ஜோராகப் பேசத் தெரியுமா உங்களுக்கு!" என்றாள் அவள்.

"ஏன் பேசாமே! நானும் ஒரு முதலாளி மகனாயிருந்தால், இன்னும் கூட ஜோராகப் பேசுவேன்" என்றான் கந்தசாமி.

"அது சரி, இப்போ எங்கே கிளம்பினீங்க!" என்று கேட்டாள் செங்கமலம்.

"போகிறப்போ, எங்கே போறேன்னு கேட்டால் காரியம் முடிந்தால் போலத்தான்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்த வண்ணம் வண்டியை ஓட்ட முயற்சி செய்தான் அவன்.

"அப்படி என்னதான் தலைபோகிற விஷயமோ! போய்விட்டு ஜாக்கிரதையாகத் திரும்புங்க" என்று செங்கமலம் கூறியது அவன் காதில் விழுந்ததோ, என்னவோ!

•• •• ••

முதலாளியின் உத்தரவுப்படி பஞ்சுப் பொதிகளை ஏற்றிக் கொண்டு அதிவேகமாய்த் திரும்பிக் கொண்டிருந்தான் கந்தசாமி. மணிக்கு நாற்பது மைல் வேகத்துக்கு மேல் போய்க் கொண்டிருந்தது, லாரி. அந்தத் தெருவின் திருப்பத்திலிருந்த விளக்குக் கம்பத்தினடியில் ஒரு ஆசாமி நின்று கொண்டிருப்பதைக் கவனித்த கந்தசாமி, போலீஸ்காரனு யிருக்குமோ என்று சந்தேகித்து வண்டியின் வேகத்தைச் சற்றுக் குறைத்து அந்த ஆசாமியை உற்று நோக்கினான். வண்டி அவனை நெருங்கியதும், வண்டியை நிறுத்தும்படி அவன் கையை ஆட்டிச் சமிக்ஞை செய்து கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது.

லாரியை நிறுத்தி விட்டு அவனை உற்றுப் பார்த்தான் கந்தசாமி. அவனது கறுப்பு நிஜார், அழுக்கடைந்த சட்டை, கம்பீரமற்ற பார்வை இவைகளை ஒரு நொடிப் போதில் கவனித்துப் பார்த்தவன் போலீஸ் இலாகாவுக்கும் இவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கமுடியாதென்ற முடிவுக்கு வந்தான்.

"அண்ணே! எங்கே போகுது வண்டி!" என்று கெஞ்சும் குரலில் கேட்டான், புதிய ஆசாமி.

"ஏன், எங்கே போனால் உனக்கென்னவாம்! இதைக் கேட்கவா கொட்டுகிற மழையிலே வண்டியை நிறுத்தினாய்!" என்று சற்றுக் கடுமையாகத் திருப்பிக் கேட்டான் கந்தசாமி.

அவன் தயக்கத்துடன், "இல்லே நகரத்துப் பக்கம் போனால் என்னையும் அழைத்துக் கொண்டு போவீங்களோ என்று பார்த்தேன். ஒரு அவசர வேலை. நீங்க பெரிய மனசு பண்ணி எனக்கும்

● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

## விவசாயிகள் வேதனை

கடந்த ஆறு வருடங்களாக மழையின்றிக் காய்ந்து கிடந்த எங்கள் ஊரில் நல்ல மழை பெய்துள்ளது. அதை நம்பி ஊர்வாசிகளாகிய நாங்கள் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு மேல் சாகுபடி செய்து நெற் பயிர்களும் நன்றாய் இருந்தன. இதற்கிடையில் இயற்கையின் விபரீத விளையாட்டால் பயிர்களில் பூச்சி தோன்றிப் பயிர்களை அடியோடு அழித்து விடுகின்றன. இதனைச் செய்யாறு தாலுக்கா விவசாய இலாக்காவுக்குத் தெரிவித்து, அவர்கள் கொடுத்த மருந்தை வாங்கித் தூவியும் யாதொரு பயனின்றி, மொத்தத்தில் இந்தப் பூச்சிகளால் பயிர் அரிக்கப்பட்டுக் கருகி விட்டன. இதனை வட ஆற்காடு ஜில்லா கலெக்டர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். இதற்கிடையில் அதிகாரிகள் நிலங்கள் சாகுபடியானதெனக் கருதி, எங்களை வரி கட்டும்படி கட்டாயப்படுத்துகின்றனர். இதனால், ஏற்கெனவே பூச்சிகளால் பெரும் நஷ்டத்துக்கும், கஷ்டத்துக்கும் உள்ளாகி இருக்கும் ஏழை விவசாயிகளாகிய நாங்கள் இப்போது எப்படி வரி செலுத்த முடியும்!

ஆலத்தூர்
13—1—54
மாசிலாமணி

● ○ ● ○ ● ○ ● ○ ● ○ ● ○

கொஞ்சம் இடம் கொடுத்தால் புண்ணியமுண்டு'' என்று கெஞ்சினான். அவன் மழையில் முழுவதும் நனைந்திருக்கிறான் என்பதை யுணர்ந்த கந்தசாமிக்கு மனது இளகியது. லாரியில் நிறையச் சாமான்கள் ஏற்றி யிருக்கிற போது யாரையும் ஏற்றிக் கொள்ளக் கூடாது என்ற முதலாளியின் கண்டிப்பான உத்தரவு அப்போது அவன் கவனத்துக்கு வந்தது. ஆனால் அவனுடைய பரிதாபமான நிலையைக் கண்டு, 'ஐயோ, பாவம்! அவசர வேலை யென்று சொல்கிறானே, ஏற்றிக் கொண்டால் என்ன! முதலாளியின் பொதுவான உத்தரவைச் சந்தர்ப்பத்தை உத்தேசித்து ஓரளவு தளர்த்தினால் தான் என்ன!' என்று அவன் மனம் இரக்கம் காட்டியது.

"உம், எங்கே தம்பி போகணும் நீ!" என்று கடுமையான குரலில் அவனை வினவினான் கந்தசாமி.

"நகரத்துக்குப் போகணும் என்று சொன்னேனே!" என்றான் அவன்.

"என்ன அப்படித் தலை போகிற காரியம், இந்த மழையிலே!" என்று மேலும் விசாரித்தான் கந்தசாமி. அவனுடைய தோற்றத்தையும் முகபாவத்தையும் கண்டு கந்தசாமிக்கு உள்ளூற ஏதோ சந்தேகமாகவே யிருந்தது

"வீட்டிலே பெரியவருக்கு உடம்பு சரியில்லே. மருந்து வாங்கிக் கிட்டுப் போகிறேன்" என்று தன் கையிலிருந்த சிறு துணிப் பையைச் சுட்டிக் காட்டினான் அவன்.

"சரி, வந்து உட்காரு" என்று கந்தசாமி வேண்டா வெறுப்பாகக் கூறியதும், அவன் லாரியின் பின்புறம் சென்றான், உள்ளே தாவி ஏறிக் கொள்ளும் உத்தேசத்துடன்.

உடனே கந்தசாமி பரபரப்புடன், "இந்தா, தம்பி! இப்படி என் பக்கத்திலே வந்து உட்காரு. உள்ளே பஞ்சுப் பொதி இருக்கிறது. முதலில் உன் கையிலே இருக்கிற பீடியைத் தூக்கி எறி" என்றான் கண்டிப்பான குரலில். அவன் கந்தசாமிக்கு அருகிலிருந்த இடத்தில் ஏறி அமர்ந்ததும் லாரி 'விர்' என்று கிளம்பியது.

சற்று நேரத்துக்குப் பின் கந்தசாமியின் மூக்கு எதையோ மோப்பம் பிடித்தது. அந்தப் பேர்வழி குடித்திருப்பானோ என்ற சந்தேகத்துடன் லாரி அசையும் போது ஒன்றிரண்டு தடவைகள் அவன் பக்கம் தற்செயலாகச் சாய்வது போலச் சாய்ந்து மோப்பம் பிடித்தான். அவன் குடித்திருக்கவில்லை என்பது கந்தசாமிக்குப் புலப்பட்ட போதிலும் அந்த வாடை எங்கிருந்து வந்து கொண்டிருந்தது என்பது மட்டும் அவனுக்கு விளங்கவேயில்லை.

புதிய ஆசாமி தன் கையிலிருந்த பையை அழுத்திப் பிடித்துக் கொண்டான். அவன் கண்களும் அந்தப் பையையே கவனித்துக் கொண்டிருந்ததை அந்த இருளிலும் நன்றாகக் கண்டு கொண்ட கந்தசாமி, "தம்பி! பையிலே என்ன இருக்கு! மருந்தா! நிஜத்தைச் சொல்கிறாயா, இல்லாட்டி இப்படியே இறங்கி நடக்கிறாயா!" என்று கடுமையாக மிரட்டினான்.

புதிய ஆசாமிக்குத் தன் குட்டு வெளிப்பட்டு விட்டது என்பது தெரிந்து போயிற்று. அவன் குற்றமுள்ள நெஞ்சுதான் அவனைக் காட்டிக் கொடுத்து விட்டதே!

"இந்தப் பழக்கம் உள்ள ஆசாமி ஒருத்தருக்குக் கொண்டு போறேன், அண்ணே! வாரத்துக்கு ஒருமுறை வாடிக்கை. இன்னிக்கு முறை கொண்டு போகாத போனால் அவர் ரொம்பக் கோவிச்சுக்குவாரு. அதோடே என் வாடிக்கையும் போய் விடும்" என்றான் அவன்.

கந்தசாமியின் உதடுகள் ஆத்திரத்தால் துடித்தன. கள்ளச் சாராயமும் கையுமாக வந்து தன்னை ஏமாற்றி விட்டு லாரியில் ஏறிக்கொண்ட அந்தப் போக்கிரியின் துணிச்சல் அவனுக்கு எரிச்சலைத் தான் உண்டு பண்ணியது. முதலாளிக்குத் தெரிந்தால் தன்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக எண்ணிக் கொள்ளுவார்! தற்செயலாக ஒரு போலீஸ்காரரே பிடித்து விட்டால் தன் கதி என்னவாகும் என்று நினைத்த மாத்திரத்தில்,

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

## முஸ்லிம்களின் கடமை

**பா**கிஸ்தான் — அமெரிக்க ராணுவ ஒப்பந்த பேரத்தின் விளைவாகச் சென்ற சில தினங்களாக, ஆசிய நாடுகள் பூராவிலும், சில ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும், குறிப்பாக முஸ்லிம் நாடுகள் எல்லாவற்றி லிருந்தும் கண்டனங்கள் கிளம்பி யிருக்கின்றன. ஆனால் இந்தக் கண்டனங்களின் மூலம் அந்த நாட்டு மக்களின் நாடியை உணர்ந் திருப்பதாகப் பாகிஸ்தான் பிரதமரின் சமீபகாலப் பேச்சுகள் உணர்த்தவில்லை. முக்கியமாக ஆசிய நாடுகள் பலவும் சென்ற இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பின்பே சுதந்திரமடைந்தவை. தங்களுடைய அரிய தியாகத்தின் மூலம் பெற்ற சுதந்திரத்தைப் பாகிஸ்தான் போல, அடகு வைக்கவோ, அல்லது ஆபத்திற்குள்ளாக்கவோ அந்த நாடுகள் விரும்பாததில் ஆச்சரியம் எதுவுமில்லை. மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய நாடுகளனைத்தும் பூரண சுதந்திரம் பெறாதவைகளோடன்றி, அதற்காகப் போரிட்டு வருபவைகளும் கூட. இத்தருணத்தில் உலக முஸ்லிம்களின் பாதுகாவலராகத் தன்னைப் பாவித்துக் கொள்ளும் பாகிஸ்தான் அவர்களின் சுதந்திரப் போராட்டங்களுக்கே உலைவைக்கும் சதியில் இறங்கி யிருப்பது கண்டனத்துக்குரியது. இவ்வாபத்தான வேலையில், இந்திய முஸ்லிம்களின் நலனுக்காகவே இயங்கி வருவதாகக் கூறிவரும் இந்திய முஸ்லிம் லீக் பகிரங்கமாகத் தங்களுடைய கருத்தை ஏன் தெரிவிக்கவில்லை யென்பதைப் பார்க்க மிகவும் வியப்பாக இருக்கிறது.

இங்குள்ள முஸ்லிம் மக்கள் இந்த லீகர்களின் சென்ற கால நடவடிக்கையை யொட்டி இந்தியக் குடியரசுக்குப் பாதகம் விளைவிக்கும் எந்த நடத்தையிலாவது ஈடுபடுவார்களென்று அவர்கள் எண்ணுவார்களானால், அவர்கள் ஏமாறுவது திண்ணம். இந்திய தேசிய பரம்பரையில் உதித்த முஸ்லிம்கள் தங்கள் தாய்நாட்டின் சுதந்திரத்தைக் காக்கத் தங்கள் ஊனில் உயிருள்ளவரைப் போரிடுவார்கள். எனவே, இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் முஸ்லிம் பெருமக்களின் கடமை யென்ன! முஸ்லிம் லீகர்களின் நடவடிக்கையை ஒட்டிப் பிற வகுப்புவாதிகளும், சில பத்திரிகைகளும் தெரிவிக்கும் சந்தேக மனப்பான்மையை ஒழிக்கும் முறையில் அனைவரும் வேலை செய்ய வேண்டும். இந்தியாவில் பழம்பெரும் துரோகச் செயல்களுக்கு இருப்பிடமாக முஸ்லிம் லீகிற்கு இடமே இல்லை யென்று உணர்த்தும் வகையில் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவேண்டும்.

மதுரை — எஸ். அப்துல் ரஸாக்
13—1—54 — நகர காங்கிரஸ் கமிட்டி பொக்கிஷதார்

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★



"இதெல்லாம் உங்கள் குழந்தைகளா?"

"ஆமாம்!"

"இவ்வளவுதானா? இன்னும் குழந்தைகள் இருக்கிறார்களா?"

"நன்றாக இருக்கிறது! நீங்கள் கேட்டு நான் இல்லை என்று சொல்வேனா? இன்னும் இரண்டு குழந்தைகள் இருக்கின்றன!"

---

இந்தச் சட்டவிரோதமான செய்கைக்குத் தான் உடந்தையாக இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான். அந்தச் சாலையின் திருப்பத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷன் வாசலுக்கு முன் வண்டியை வேகமாக ஓட்டி நிறுத்தினான். அருகிலிருந்த ஆசாமி இறங்கி நழுவப் பார்த்தான். அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட கந்தசாமி, "ஒரு அவசர வேலை இருக்கு, தம்பி! நீயும் வா!" என்று சொல்லி அவனை முரட்டுத்தனமாக இழுத்துக் கொண்டுபோய் இன்ஸ்பெக்டர் முன் நிறுத்திவிட்டு நிம்மதியாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

இன்ஸ்பெக்டர் அவனைச் சோதனை போட்டார். துணிப் பைக்குள்ளிருந்த கள்ளச் சரக்கு வெளிப்பட்டதும், அவனை விசாரணை செய்தார்.

"உன் பெயர் என்ன?"

"முனுசாமி."

"நீ இருக்குமிடம்?"

"கோயம்பேடு."

"என்ன தொழில்?"

இந்தக் கேள்விக்கு அவன் பதில் சொல்லத் தயங்கினான். இன்ஸ்பெக்டரின் மீசை கோபத்தால் துடித்ததைக் கண்டு கதிகலங்கியவனாய், "அப்படி வேலை என்று சொல்லும்படியாக எதுவுமில்லீங்க" என்றான் தட்டுத் தடுமாறி.

"கள்ளச் சாராயம் காய்ச்சுவதுதானாக்கும்!" என்று கர்ஜித்தார் இன்ஸ்பெக்டர்.

"நான் காய்ச்சுகிற வழக்கமில்லே, எஜமான்! எனக்குத் தெரியவே தெரியாதுங்க. ஒருவருக்கு வாங்கிக்கிட்டுப் போறேன். எனக்கு ஏதாவது இரண்டு ரூபாய் கிடைக்கும், அவ்வளவுதான்!" என்றான் முனுசாமி.

"யாருக்கு வாங்கிக் கொண்டு போகிறாய்! உண்மையைச் சொல்லு!" என்று பயங்கரமாகச் சீறினார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

முனுசாமி ஒரு கணம் தயங்கி விட்டு, "தரகு வியாபாரி தங்கவேலுப் பிள்ளைக்கு, எஜமான். முப்பத் தெட்டாம் நம்பர் வி. பி. கோவில் தெருவிலே இருக்காரே..." என்று சொல்லி முடிப்பதற்குள் டிரைவர் கந்தசாமிக்கு உலகமே இருண்டு விட்டது. அவன் தலை சுழன்றது. தன் முதலாளிக்குக் குடிப் பழக்கம்உண்டு என்பது அவனுக்கு அப்போதுதான் தெரிந்தது. கடமையைச் செய்யப் போய் அது தன்னை எத்தகைய சங்கடமான நிலையில் கொண்டு வந்து விட்டிருக்கிறது என்று எண்ணிய மாத்திரத்தில் அவனுக்குத் தன் செய்கையின் விளைவு எல்லையற்ற வேதனையையும் துயரத்தையும் அளித்தது.

** ** **

தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்ட தங்கவேலுப் பிள்ளை ஒரு மாத சிறைத் தண்டனையனுபவித்து விட்டு அன்றுதான் விடுதலையாகி வீட்டுக்கு வந்திருந்தார்.

புலியின் முன்பு பொறி கலங்கி நிற்கும் ஆடுபோல முதலாளியின் எதிரில் வந்து நின்றான், கந்தசாமி. அவன் சப்த நாடியும் ஒடுங்கித் தன் முகத்தைப் பார்க்கவே வெட்கி நிற்பதைக் கண்ட தங்கவேலுப் பிள்ளை, "கந்தசாமி! நீ உன் கடமையைச் செய்து விட்டாய். இப்போது நான் என் கடமையைச் செய்யப் போகிறேன்" என்றார்.

தன் முதலாளி அந்த நிமிஷமே தன்னை வேலையிலிருந்து நீக்கி, வீட்டை விட்டு வெளியேறச் சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்த கந்தசாமிக்கு அவர் மேலும் தொடர்ந்து கூறியது ஆச்சரியத்தை யளித்தது.

"கந்தசாமி! நான் பரம்பரையாகக் குடிப் பழக்க முள்ளவனல்ல. ஆறு மாதத்துக்கு முன்பு தான் இந்தப் புத்தி மாறாட்டம் வந்தது எனக்கு. சட்டத்தைப் புறக்கணித்துச் சர்க்காரை ஏமாற்றிய எனக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான். நம்முடைய முதலாளியாயிற்றே, என்று பாராமல் நேர்மையான முறையில் நீ நடந்து கொண்டது மெச்சத் தகுந்தது. உன்னைப் போன்றவர்களால் தான் நம்முடைய சமூகம் சீர்திருந்த வேண்டும். என்னிடம் பணமிருந்து என்ன பிரயோசனம்! உன்னுடைய தூய்மையான உள்ளம் எனக்கு வருமா!" என்று தங்கவேலுப் பிள்ளை கேட்ட போது அவர் கண்களில் நீர் பெருகியது. கந்தசாமி சிலைபோல் வாயடைத்து நின்றான்.

தங்கவேலுப் பிள்ளை, "என்னுடைய மகளுக்கு உன்னை விட நல்ல கணவன் கிடைக்க மாட்டான். குடிகாரன் மகளைக் கட்டிக் கொள்வதா, என்று நீ யோசனை செய்யாதே, கந்தசாமி! நடுவிலே வந்த இந்தப் பழக்கத்துக்கு மறுபடியும் இடம் கொடுக்க மாட்டேன். என் கண்களைத் திறந்த புண்ணியவான் நீ! செங்கமலத்தை நீ தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டபோது கந்தசாமியின் உள்ளம் பூரிப்பால் வெடித்து விடும் போலிருந்தது.

கடைக் கண்ணால் தன்னையே பார்த்துக் கொண்டு கதவருகில் நின்ற செங்கமலத்தைப் பார்த்து இலேசாகச் சிரித்தான் கந்தசாமி.

"என் தொண்டை ரணத்தினுல்
என்னுல் விழுங்கவே முடியவில்லை"
ஆனுல்

# பெப்ஸ்

அதை சமனமாக்கி குணப் படுத்தியது.





பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் ஸ்வாஸத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே நேராகச் சென்று வேலை செய்கின்றன. இதனுல் தான் பெப்ஸை கண்ட ஔஷதமாயும், உலக பிரசித்திப் பெற்றும் விளங்குகிறது பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன், இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

**PEPS**

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

# ப்ரூக்லாக்ஸ்

ஒரே இரவில்
குணப்படுத்திவிடும்



குடும்ப முழுவதும் விரும்பும் பேதி மருந்தாக ப்ரூக்லாக்ஸ் விளங்குவதில் அதிசயமென்ன! ருசி மிகுந்த சாக்லேட்டின் சுவையுள்ளது. சிறிய துண்டு ஒன்றை இரவில் சாப்பிட்டால் போதும். பத்திரமான நிச்சய நிவாரணம் ஏற்படும். போலிகளைக் கண்டு ஏமாறுமல் சிவப்புப் பெட்டியிலுள்ள ப்ரூக்லாக்ஸை கேட்டு வாங்குங்கள்.




மலச்சிக்கலைத் தவிர்க்க
மிகச் சிறப்பான
நிச்சயமான வழி!

லண்டன், வெஸ்ட் மின்ஸ்டர் லாபரட்டரீஸ் லிமிடெட் தயாரிப்பு
ஏஜண்டுகள்: ஓரியன்டல் மெர்க்கன்டைல் ஏஜன்ஸி
99-ஏ, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ் - 1

# Firestone

பயர்ஸ்டோன்

## பெருமையுடன் அளிக்கும்

முதல்


# 'எர்த்மூவர்' டயர்

இந்தியாவில் தயாரிக்கப்பட்டது




இந்தியா இப்பொழுது பெரிய அபிவிருத்தித் துறையில் இறங்கி யுள்ளது. மாபெரும் அணைக் கட்டுகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், ஹைட்ரோ-எலக்டிரிக் உற்பத்தி இவைகள் எல்லாம் கூடு மான சீக்கிரத்தில் மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய உறுப்புகளாகும். இத்திட்டங்கள் உருப்பெறுவதற்கு ஏராளமான மண் அகற்றும் யந்திர சாதனங்கள் தேவையாகவிருக்கும் இவ்வியந்திரங்களுக்கு வேண்டிய விசேஷ வகை டயர்களும் ஏராளமாக தேவைப்படும். பயர்ஸ்டோன் ஸ்தாபனம் இத் தேவையைப் பூர்த்தி செய்ய உடனே முன் வந்திருப்பதன் பயனாக இப்பொழுது இந்தியாவிலேயே தயாரிக் கப்பட்ட முதல் 'எர்த்மூவர்' டயரை பெருமை யுடன் வழங்குகின்றனர்.

## மீண்டும் பயர்ஸ்டோன் முன்னணியில் நின்று...



**ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தை துரிதமாக்க உதவுகிறது**



# நந்தகுமாரின் பரிசு

கே. ஆர். கௌசல்யா.

**வா**ன வெளியில் நக்ஷத்திரங்களின் பூங்காவனம். நீல நிறக் கடல் நீரில் அப் பூங்கா பிரதிபலித்துப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சலனமில்லாத நடுக் கடலில் நத்தை போல ஊர்ந்து சென்று கொண்டிருந்த கப்பலின் மேல் தளத்தில் தளத்தைச் சுற்றி அமைத்திருந்த இரும்புக் கிராதியைப் பிடித்து நின்றவாறு வான வெளியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் நந்தகுமார். பகலிலே தெரியாத அந்த நக்ஷத்திரங்கள் இரவிலே, இருட்டிலே தெரிவது போன்று, அவனுடைய மன இருளிலே மறைந்து இருந்த உணர்ச்சிகளும் தனிமையிலே வெளியே வந்து அவனுள்ளத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன.

•    •    •

**ஜ**ப்பானியர்களின் தாக்குதலுக்கு ஆளாகியிருந்த காரணத்தால் அப்போது பர்மாவில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பிறப்பிலிருந்தே இயற்கை யன்னை நந்தகுமாருக்குத் திடகாத்திரமான தேகத்தையும், சேவா உணர்ச்சியையும் நாட்டுப் பற்றையும் வரப்பிரசாதம் போன்று அளித்திருந்தாள். 'நாம் ஏன் இந்தச் சமயம் யுத்தத்தில் சேர்ந்து பணி ஆற்றக் கூடாது!' என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் மின்னலெனப் பளிச்சிட்டது.

" நந்து! நான் சொல்றதைக் கேளுடா குழந்தை! நீ யுத்தத்தில் சேர வேண்டாமடா......" என்று அவன் தாய் அவனை முகவாயைப் பிடித்துக் கெஞ்சினாள், அபரிமிதமான வாஞ்சையுடன்.

"உன் மனப் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. உன்னை நாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டுப் படிக்க வைத்தது எதற்காக! 'யுத்த சேவை' செய்ய உன்னை அனுப்பி விடுவதற்கா!" என்று அதிகாரத்துடனும் உரிமையுடனும் கண்டித்துக் கேட்டான் அவன் தமையன் பாலசந்தர்.

ஆனால் இறுதியில் அவனுடைய அண்ணனின் மனத்தாங்கலுக்கும், தாய் கமலத்தின் கண்ணீருக்கும் இடையே ராணுவத்தில் சேவை செய்ய, பர்மா சென்று விட்டான் நந்தகுமார்.

ராணுவத்தில் சேர்ந்துவிட்ட பிறகு நந்தகுமாருக்கு விடுமுறை கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. ஆசைக்கு ஒரு முறை சொந்த ஊர் சென்று வரக்கூட அவனால் முடியவில்லை. அத்துடன் இடம் விட்டு இடம் மாறிச் சென்று போர்ப் பயிற்சி பெற வேண்டிய அவசியமும் அடிக்கடி நேரிட்டதால், அவன் உடன் பிறந்த சகோதரன் விவாகத்துக்கே கூட அவனால் போக முடியவில்லை. அதன் பலனாக, பாலசந்தர், அவன் தாய் கமலம் ஆகியவர்களுடைய மன வருத்தத்தைச் சம்பாதித்துக் கொண்டான் அவன். கமலம் தன் கண்ணீரில் தோய்த்தெடுத்துக் கடிதங்கள் பல எழுதினாள். சமீபத்தில் தம்பி நந்தகுமாருக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தான் பாலசந்தர்.

" அம்மாவுக்கு, இப்போதெல்லாம் முன்போல் உடல் நலம் இல்லை, வயது காரணமாகத் தளர்ச்சியும், முதிர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது. நீயும் விரைவில் ஒரு இடத்தில் விவாகம் செய்துகொண்டு உன் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொண்டு அவளை நம்மிருவருடையவும் சேர்ந்த ஆதரவு விருட்சத்தின் நிழலின் கீழ்ச் சில காலமாவது இருக்கச் செய்து இளைப்பாற வைக்க வேண்டும். அது நம் கடமை. என் கடமையை ஓரளவு நான் நிறைவேற்றி விட்டேன். ஆனால் நீ......! யோசித்துப் பார். உன் விவாக விஷயமாக நான் எழுதிய கடிதங்களுக்கெல்லாம் ஒன்றுக்காவது நீ சரிவரப் பதில் எழுதினாயா! உன் போக்குத்தான் எத்தனை விசித்திரமாகி விட்டது! ஏன்! இந்த வீட்டுக்குள் உன்னை இழுக்கும் பாசம் எதுவும் இல்லையா!"

இப்படியாக அதிகாரத்திலும் அன்பிலும் மிளிர்ந்தது அந்தக் கடிதம். நந்தகுமாருக்கு என்ன பதில் எழுதுவதென்றே தெரியவில்லை. காரணம் அவன் உள்ளமே அவனுக்குப் புரியாத புதிராக, முடிவு காண முடியாத பாதையாக, ஆழம் காண முடியாத கடலாக இருந்ததுதான். அவனுள்ளத்தை அப்படிப்பட்ட ஒரு கலக்கக்

களஞ்சியமாக ஆக்கியவன் அவள்! ஆம்! அவள் தான். அவள் பெயர் விஜயா.

நந்தகுமார் என்று அந்தப் பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் சேர்ந்தானோ, அன்றுதான் விஜயாவும் சேர்ந்தாள். எழுதப் படிக்கத் தெரியாத அந்த வயதில், கள்ளம் கபடமற்ற பிடிப்பு ஏற்பட்டது அந்த இளம் உள்ளங்களிடையே. படிப்பது, ஓடுவது, விளையாடுவது ஆகிய எல்லாவற்றையும் அவ்விரு பிஞ்சுக் கரங்களும் இணைந்து நின்றே நிறைவேற்றின.

அப்போது நந்தகுமாரும், விஜயாவும் முதல் படிவத்தில் படித்துக் கொண்டிருந்தனர். அன்று வகுப்பில் வாத்தியார் பூகோளப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "ஆப்பிரிக்கா கண்டத்தில் வைரம் எங்கு கிடைக்கிறது!" என்று கேட்டார். எல்லா மாணவ மாணவிகளும் யோசனையுடன் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துக் கொண்



டனர். சிலர் "ஐயோ! நெஞ்சிலிருக்கிறது. வாயில் வரவில்லையே!" என்ற பாவனையில் தவித்துக் கொண்டிருந்தனர். ஒரே ஒரு கரம் மட்டும் "விடை தெரியும்" என்பதற் கடையாளமாக உயர்ந்திருந்தது. "நீ, சொல்லு" "நீ, சொல்லு" என்று ஒவ்வொருவராக வாத்தியார் கேட்டுக் கொண்டே வந்தபோது எல்லோரும் 'திரு' 'திரு' வென்று விழித்தவாறே எழுந்து நின்றனர். அடுத்தது நந்தகுமாரின் முறை. பரிதாபமான முக பாவத்துடன் எழுந்து நின்றான் அவன். விஜயா மெல்லக் கையால் வாயை மறைத்துக் கொண்டு விடை சொன்னாள். அவனுக்கு அது புரிந்து தொலைந்தால் தானே!"

"விஜயா!" என்றார் வாத்தியார்.

விஜயா எழுந்து நின்று "கிம்பர்லி!" என்று கணீரென்று பதிலளித்தாள்.

"உங்களுக் கெல்லாம் வெட்கமா யில்லே!...... விஜயா! நான் இவர்களைப் பிரம்பால் அடிக்கப் போவதில்லை. நீயே வரிசையாக ஒவ்வொருவர் தலையிலும் அழுத்தி ஒரு குட்டு குட்டிவிட்டு வந்து உட்கார்! அப்போதுதான் புத்திவரும் இந்த மட சாம்பிராணிகளுக்கு!" என்றார். விஜயா தயங்கினாள். 'ம்!...போ!' என்றார் வாத்தியார். அடுத்த நிமிஷம் 'நறுக்' 'நறுக்' கென்று ஒவ்வொரு தலையிலும் குட்டு விழுந்து கொண்டே வந்தது. அடுத்தது நந்தகுமாரின் முறை. "விடை சொன்னேனே! புரிந்துகொள்ளக் கூடாது! அசடு!" என்று மெதுவாகக் கூறி மெல்ல நோகாமல் குட்டினாள் அவனுக்கு மட்டும்!

அந்தச் சம்பவம் நந்தகுமாரின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டது. அந்த இளம் நெஞ்சுக்குத்தான் அவளிடம் எத்தனை அன்பு!

காலப் பறவை பலமுறை சிறகுதிர்த்து விட்டது. விஜயாவும், நந்தகுமாரும் ஆறும் படிவத் தேர்தல் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தனர். இத்தனை காலப் பழக்கத்தினால் நந்து விஜயாவிடம் உயிரையே வைத்து விட்டான். 'அவள் இல்லையேல் நான் இல்லை' என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

"விஜயா!" என்றான் நந்து.

"என்ன! இப்போ உனக்கு ஏதோ உதவி தேவை! இல்லையா!" என்றாள் சட்டென்று விஜயா.

"...ஆமாம்! ... வந்து ... நான்தான் கணக்கில் ரொம்பப் பலவீனம் என்று நன்றாகத் தெரியுமே உனக்கு!"

"...ம்...அதுக்காக!..."

"...வந்து...நீ..."

"...ஓகோ! புரிந்தது, புரிந்தது!" என்று சொன்னாள் விஜயா.

கணக்குப் பரீட்சையிலே விஜயா சிரமப்பட்டுத் தன் விடைத்தாளில் நந்தகுமாரின் கையெழுத்துப் போலவே எழுதினாள், எல்லாம் எண்களாகவே இருந்து விடவே மிகவும் சுலபமாகி விட்டது. அவன் பெயரை எழுதிக் கொடுத்து விட்டாள். நந்துவும் அவ்விதமே செய்து—அவன் விடைத் தாளில் எழுதியிருந்த பாகமே மிகவும் கொஞ்சம்தானே!—அதில் விஜயாவின் பெயரை எழுதி விட்டான்.

மணி அடித்தவுடன் கணக்குப் பரீட்சை விடைத்தாளை மடித்துக் கொடுத்து விட்டு, "ஸார்! ஸார்!" என்று கணக்கு வாத்தியாரிடம் ஓடினாள் விஜயா. 'என்ன விஜயா, வெற்றி தானே!" என்று புன்னகையுடன் கேட்டார் அவர். அவள் படிப்பில் மிகவும் புத்திசாலி, அதிலும் கணக்கில் அவள் புலி என்பது தான் அந்தப் பள்ளியில் பிரசித்தமாகி யிருந்த விஷயமாயிற்றே!

"இல்லே ஸார்!" என்று தயங்கிய விஜயா, தனது வலது கையைப் பிடித்து விட்டவாறே, "நேற்று மாடிப்படியில் தடுக்கி விழுந்து விட்டேன். கை ஒரு நிறுசாகச் சுளுக்கிக் கொண்டு விட்டது. கைவலியுடனேயே பரீட்சை எழுதினேன். அதனாலே சரியாகவே எழுதவில்லை" என்று கூறிக் 'கட' 'கட' வென்று ஒரு குடம் கண்ணீரைக் கொட்டி விட்டாள்.

உபாத்தியாயர் ரொம்பவும் மனம் இளகிப் போய் விட்டார்.

"அடடா! முதலிலே கையை நன்றாய்க் கவனித்துக்கோ! உள்ளே எலும்பு, கிலும்பு முறிந்திருக்கப் போகிறது. இதனாலே படிவத் தேர்தல்

கிடைக்காமல் போய் விடுமோ என்று பயப் படாதே! உன்னைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பார்களா?'' என்று அவர் கூறியபோது பொங்கி வந்த சிரிப்பை அடக்க அரும்பாடு பட்டாள் விஜயா.

அன்று மாலை. வீட்டுக்குச் செல்லும்போது, "என்ன நந்து! நான் நடித்த நாடகம் எப்படி! இருப்பிதானே!" என்றாள் விஜயா.

"நீ வாழ்க்கை பூராவுமே என்னுடன் இருந்து இப்படி ஒத்துழைத்தால்கூடத் திருப்திதான்!'' என்று சொல்லத் துடித்தன அவன் உதடுகள்.

அந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் வெற்றிகரமாகத் தேறி விட்டனர் இருவரும். விஜயா தன் தகப்பனுருடன் கிராமத்துக்குச் சென்று விட்டாள். பிரிய நேர்ந்த போது இருவரும் கண்ணீர் வடித்துக் குமுறி அழுதனர். "விஜயா! என்னை மறந்துவிட மாட்டாயே!'' என்று ஆவலுடன் கேட்டான் நந்து.


"உன்னைக்கூட நான் மறந்துவிட முடியுமா! அதுவும் நீ என்னிடம் குட்டுப் பட்ட ஆசாமியாயிற்றே!'' என்றாள் விஜயா அழுகையுடன் கலந்து வந்த சிரிப்பினிடையில்.

விஜயா ஊர் சென்று விட்டாள் — நந்துவின் இருதயத்தைத் தன்னுடன் எடுத்துக் கொண்டுதான்.

நந்துவின் அண்ணுவுக்குச் சென்னைக்கு உத்தியோகம் மாற்றலாயிற்று. எல்லோரும் சென்னை வந்து விட்டனர். வேலைக்காக அலைந்து கொண்டிருந்த நந்து ராணுவத்தில் சேர்ந்து பர்மா போய் விட்டான். அவனுடைய நினைவை விஜயா பரிபூரணமாகச் சுவீகரித்துக் கொண்டிருந்தாள். "என்னைப் போன்றே விஜயாவின் நெஞ்சிலும் என் நினைவு நிரந்தரமாக இடம் பெற்றிருக்கும். என் நினைவை அவள் ரயில் வண்டி நட்பாக எண்ணி மறந்து விடமாட்டாள். வரன் தேடும் படலத்தைத் தந்தை தொடங்கும்போது அவள் அவரிடம் என்னைப் பற்றிச் சொல்லுவாள். என்னைத்தான் மணந்து கொள்ளுவேன் என்று கூறி வாதாடுவாள். உடனே அவள் தந்தை என் விலாசத்தைக் கண்டுபிடித்து -அறிந்து இது விஷயமாகக் கடிதம் போடுவார். பிறகு!...... விஜயாவுக்கும், எனக்கும் விவாகம் நடந்தேறும். "விஜயா! நீ பள்ளியில் மட்டுமா என் துணையாயிருந்தாய்! வாழ்க்கையிலேயே எனக்கு என்றும் என் சுக துக்கங்களில் பங்கு கொள்ளும் நிரந்தரத் துணையாக வந்து விட்டாய்' என்று கூறுவேன்'' என்று ஏதோ ஒரு நம்பிக்கையினின்றும் எழுந்த இன்ப நினைவுகளில் மூழ்கி எழுந்து மகிழ்ச்சி உலகில் மிதந்து கொண்டிருந்தான் நந்தகுமார்.

சமீபத்தில் பாலசுந்தர் ஒரு கடிதம் எழுதியிருந்தான். வழக்கம் போல் அம்முறையும் அசிரத்தையாக இருந்துவிட முடியாதபடி ஒரு முக்கியத்தைத் தாங்கியிருந்தது அந்தக் கடிதம்.

"அம்மாவுக்கு ரொம்பவும் உடம்பு சரியில்லை. உடல் நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. இந்தக் கடிதம் கண்டவுடன் புறப்பட்டு வருவாய் என்று நம்புகிறேன்'' என்று மனசு ஒடிந்து போன நிலையில் எழுதியிருந்தான் பாலசுந்தர்.



மிகவும் சிரமப் பட்டு ராணுவ அதிகாரியிடம் விஷயத்தைக் கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு கப்பலேறி விட்டான் நந்தகுமார்.

*** *** ***

நீண்ட கால அயல் நாட்டு வாழ்க்கையினின்றும் வெளிக் கிளம்பி நெடு நாட்களுக்குப் பிறகு தன் தாயையும், சகோதரனையும் காணும் போது அவர்களிடமிருந்து தனக்கு எத்தகைய வரவேற்புக் கிடைக்குமோ என்று எண்ணித் துடிக்கும் உள்ளத்தை ஆசுவாசப் படுத்தியவாறே வீட்டுக்குள் நுழைந்தான் நந்தகுமாரன். கூடத்துத் தூணில் சாய்ந்தவாறே உட்கார்ந்து தன் பேரனைக் கொஞ்சி மகிழ்ந்து சீராட்டிக் கொண்டிருந்த கமலம், காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அடுத்த கணம், "நந்து, நீயா! நான் சொப்பனம் காண வில்லையே...!'' என்று கூறிக்கொண்டே ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டு, தன் கண்களினின்றும் பெருகி ஓடும் கண்ணீரால் அவன் தலையை நனைத்தாள். நந்தகுமாரனின் கண்கள் 'பொல பொல' வென்று கண்ணீரைக் கொட்டின. 'அம்மா! உனக்கு ரொம்பவும் உடம்பு சரியில்லை என்று எழுதியிருந்தானே, அண்ணு!'' என்று வியப்புடன் கேட்டான். கமலம் மெல்லச் சிரித்தாள். "அப்படி எழுதின படியினால்தானே நீ வந்தாய்! எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை'' என்று கூறியவாறே அவனை அழைத்துக் கொண்டு உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

"அடேடே! நந்துவா! இல்லை என் மனப் பிரமையா!'' என்று மட்டற்ற ஆச்சரியத்துடன்

உள்ளே பிரவேசித்த பாலசந்தர், தம்பியின் அருகில் வந்து உட்கார்ந்து அவன் முதுகில் பலமாக ஒரு தட்டுத் தட்டினான். "ஆள் அடையாளம் தெரியாமல் மாறி விட்டாயே! வந்து... உனக்கு அம்மா ஒரு பெண் பார்த்து வைத்திருக்கிறாளே தெரியுமா! சரியான பொருத்தம் இருக்குமடா உனக்கும் அவளுக்கும்!" என்று மட மட வென்று கூறிக் கொண்டே சென்றான். "சரிதாண்டா பாலு! அதெல்லாம் அப்புறம் சாவகாசமாகச் சொல்லிக்கலாம். நீ எழுந்து கை கால் அலம்பிக் கொண்டு வா. நந்து! காப்பி சாப்பிடலாம்" என்றாள் கமலம்.

பாலசந்தர் தாழ்வாரத்தில் தன் போக்கில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஸ்ரீதரனை மட்டற்ற பெருமையுடன் எடுத்து வந்து நந்தகுமாரின் மடி மேல் விட்டு, "ஸ்ரீதர்! சித்தப்பா சொல்லு!" என்று கொஞ்சினான்.

"சித்தப்பா!" என்று தத்தித் தத்திக் கூறி நந்துவின் கலைந்திருந்த கிராப்புத் தலையைக் கலைத்து விளையாடியது குழந்தை.

நந்துவின் மனம் எண்ணமிட்டது. அம்மா பார்த்து வைத்திருக்கும் பெண் என் விஜயாவோ... அப்படியும் இருக்குமா!...அவன் இருதயத்தின் இன்பத் துடிதுடிப்பைச் சட்டென்று தடை செய்தது 'கிரீச்'சென்ற ஓசை. புறக்கடைப் பக்கக் கதவைத் திறந்து கொண்டு அவ்வளவு நேரமும் தோட்ட வேலை செய்து கொண்டிருந்ததன் அறிகுறியாகக் கையில் மண்வெட்டி, தண்ணீர் ஊற்றும் வாளி சகிதம் அங்கு பிரசன்னமானாள் பாலசந்திரனின் மனைவி. நந்தகுமாரை உற்றுப் பார்த்து ஒரு நிமிஷம் மலைத்து நின்றுவிட்ட அவள் அடுத்த கணமே, "நந்து! நீயா!"—என்று தன்னை மறந்து வாய்விட்டுக் கூறிவிட்டாள், "ஆ! இது என்ன விஜயா!...பெயர் சொல்லி அழைக்கிறே! அவன் உன் மைத்துனனுக்கும்!"—என்று அவளை அடக்கினான் பாலசந்தர்.

"இவரை எனக்கு முன்னமேயே தெரியும் அம்மா! இவர் என்னுடன் படித்தவர். அப்பப்பா! பிறத்தியார் உதவி இல்லாமல் இவருக்கு ஒன்றும் செய்யத் தெரியாது. இவருக்கு நிச்சயம் ஒரு துணை அவசியம். சீக்கிரம் இவருக்கு ஒரு கால் கட்டுக் கட்டி விட்டால் தான் நல்லது" என்று மடமட வென்று அவள் பொரிந்து தள்ளினாள்.

நந்தகுமாரின் நெஞ்சு குமுறிக் கொந்தளித்தது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போன்ற தடுமாற்ற நிலையில் அலைமோதும் உள்ளத்துடன், அன்று முழுவதும் எல்லோருடனும் ஏதோ பேசினான்; சாப்பிட்டான் யந்திரம் போல் வளைய வந்தான்.

அன்று இரவு சாப்பிட்டு விட்டுப் படுப்பதற்காக வந்த நந்தகுமாரை நித்திராதேவி தன் வசப்படுத்தக் கண்டிப்பாய் மறுத்து விட்டாள்.

எவ்வளவுதான் தன்னைத் தேற்றிக் கொண்டும் அந்த அதிர்ச்சியை மட்டும் அவனால் தாளவே முடிய வில்லைதான். 'விஜயா என்னை நேசிக்கவே இல்லையா! அந்த எண்ணம் என் நெஞ்சிலே நானாகச் செதுக்கிக் கொண்டது தானே தவிர அவள் எண்ணம் இது விஷயமாக எப்படி யிருக்கிறது என்பதை அறிய வேண்டுமென்று நான் சிந்திக்கவேயில்லை. பள்ளியில் படிக்கும்கால் அவள் எனக்குச் செய்த உதவிகள் தன்னுடன் படிக்கும் சற்றுச் சுவாதீனத்துடன் பழகும் ஒரு மாணவன் என்ற முறையில் நட்பு பாராட்டிய தன் காரணமாகச் செய்தவையாக இருக்கலாம், அந்த விதமான அன்பு இன்னமும்தான் அவள் உள்ளத்திலிருக்கிறது. ஆனால் அது களங்கமற்ற அபிமானத்துடன் கூடியது. நான் மட்டும் தவறாக அவள் அன்பைக் 'காதல்' என்று பெயர் கொடுத்து என்னுள் வளர்த்து இத்தனை காலம் சஞ்சலப் பட்டேன். ஆதாரமில்லாத அந்த ஆசை இப்போது அறுந்து தொங்கிக் கொண்டிருக்கிறது.

என்னுடைய மனப் பிரமை பொருளற்ற நிலையில் அநாதையாயிருக்கிறது. அவள் எனக்கு இப்போது மன்னி. சீதையினிடம் லக்ஷ்மணன் கொண்ட அன்புதான் எனக்கு அவளிடம் உண்டாக வேண்டும்!'

சிந்தனை தானாகவே நின்று விட்டது. மனத்தின் அடித் தளத்தில் உருவாகியிருந்த அர்த்தமற்ற பாரம் இப்போது தானாகவே இலேசாகிவிட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் நந்தகுமார் கண்ணயர்ந்து விட்டான்.

மறுநாள் காலை நந்தகுமார் விழித்து எழுந்ததும், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அம்மாவிடம் வந்தான்.

"அம்மா! நீ சொல்வது ரொம்பவும் சரிதான். நான் ராணுவத்தில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருப்பது என் விவாகத்துக்கு ஒரு பெரிய தடையாக இருக்கிறது என்றுதானே சொல்லுகிறாய்! நான் இன்னும் சில தினங்களில் வேலை நீக்கம் பெற்றுக் கொண்டு வந்துவிடுகிறேன். சரிதானே!" என்று மிகவும் பூரிப்புடன் தன் பிள்ளை சொன்னபோது கமலம் பெருமையால் பொங்கிப் போய்விட்டாள். அவனுடைய புதிய மனமாறுதலைக் கண்டு பாலசந்தர் வியப்புக் கடலில் மூழ்கினான்.

நந்தகுமார் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு பர்மா செல்லக் கப்பலேறினான்.

** ** **

அன்று மாலை. கண்ணாடியின் முன்பு நின்று தலைவாரிக் கொண்டிருந்தான் நந்தகுமார். "மிஸ்டர் நந்தகுமார்!" என்று அழைத்தவாறே அங்கு வந்தான் போர்ப்படையின் தளபதி சுந்தர். "ஜப்பானியர்களுடைய தாக்குதலை எதிர்க்க இப்போது அவசரமாக 'மாண்டலே'க்கு ஒரு படையை அனுப்ப வேண்டும். நீங்கள்தான் அதை நடத்திச் செல்லவேண்டும் போர்முனைக்கு" என்று சொல்லி விட்டு நின்றான்.

நந்தகுமாரின் உள்ளக் கடலில் ஏதேதோ போராட்டம். அவற்றின் முடிவாக "நான் ராணுவத்திலிருந்தே வேலை நீக்கம் பெற்றுச் செல்ல நினைத்தேன். ஆனால் இது கடவுள் சித்தம்!" என்று அவன் மனத்துக்குள் மெதுவாக முணுமுணுத்துக் கொண்டான். பிறகு, "ஓ! அதற்கென்ன! தாராளமாக" என்று வெற்றிப் புன்னகையுடன் கூறிய நந்தகுமாரின் முதுகில் தட்டிக் கொடுத்தான் தளபதி சுந்தர்.

** ** **

நந்தகுமாரன் போர்முனைக்குச் சென்ற சில தினங்களுக்குப் பிறகு தன் பெயருக்கு வந்த ஒரு 'இன்ஷூர்' கவரைக் கண்டு அயர்ந்து போனான் பாலசந்தர். விஜயா அவன் கையிலிருந்த கவரை வாங்கிப் பார்த்தாள். எதிர்கால வாழ்க்கைக்குப் போர் முனையில் முடிவு கண்டு விட்ட நந்தகுமாரால் தன் அருமை அண்ணன் மன்னியின் ஆதர்சத் தாம்பத்ய வாழ்க்கையின் முதற் கனியாகிய குழந்தை ஸ்ரீதரனின் பெயருக்கு 'இன்ஷூர்' செய்யப்பட்டிருந்த பணம் ராணுவ அதிகாரிகளால் அனுப்பப்பட்டிருந்தது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.

# விளம்பரதாரர்களே....

## நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் என்ற ஸ்தாபனந்தான் சுருக்கமாக ஆங்கிலத்தில் ஏபிஸி என்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தாபனத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஸிலோன் ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் நடத்தப்படும் 125க்கு மேற்பட்ட பிரதான பத்திரிகைகள் அங்கம் வகிக்கின்றன. இந்தப் பத்திரிகைகளின் விற்பனை கணக்கு எந்த சமயத்திலும் ஏபிஸி ஸ்தாபனத்தின் ஆடிட்டர்களால் பரிசோதிக்கப்படுகிறது. அத்துடன் அந்தந்த பத்திரிகையின் நிகர விற்பனை எண்ணிக்கை சர்டிபிகேட்டை ஆறுமாதத்திற்கு ஒருமுறை ஏபிஸி ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களுக்கு மட்டும் அந்தரங்கமாக அனுப்பப்படுகிறது. ஒரு விளம்பரதாரர் என்ற முறையில் நீங்கள் ஏபிஸி ஸ்தாபனத்தின் அங்கத்தினராக இருந்தால் உங்களுக்கும் அந்த சர்டிபிகேட் அனுப்பப்படும். அப்போது உங்கள் விளம்பரத்திற்கு நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையின் உண்மை நிகர விற்பனையை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

உங்கள் விளம்பரத்திற்காக நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எவ்வளவு வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்ற உண்மையும் உங்களுக்குத் தெரியவரும்.

### ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லி-ட்.

பாரத் ஹவுஸ், அபோலோ தெரு :: கோட்டை, பம்பாய்

கீழ்க்கண்ட விளம்பரதாரர்களும் விளம்பர ஏஜண்டுகளும் ஏற்கனவே ABCயின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

**விளம்பரதாரர்கள்—**

அல்லேடு போட்டோகிராபிக்ஸ் லி-ட்., ஆயுர்வேதாஸ்ரமம் பார்மஸி லி-ட்., இ. எம். ஆல்காக் அண்டு மொஹாட்டா லி-ட்., அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லி-ட்., பால்மர் லாரி அண்டு கம்பெனி லி-ட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லி-ட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ. (இந்தியா) லி-ட்., பர்மாஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அண்டு டிஸ்ட்ரிபியூட்டிங் கோ. ஆப் இந்தியா லி-ட்., கால்டெக்ஸ் (இந்தியா) லி-ட்., ஸெண்ட்ரல் டீ போர்டு, கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ. (இந்தியா) லி-ட்., டன்லப் ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., கிளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) லி-ட்., கோத்ரெஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கோ., லி-ட்., இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லி-ட்., இம்பீரியல் டுபாகோ கோ. ஆப் இந்தியா லி-ட்., இந்தியா டயர் அண்டு ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (ஸிலோன்) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லி-ட்., லிப்டன் லி-ட்., ஜே. எல். மாரிஸன் ஸன் அண்டு ஜோன்ஸ் (இந்தியா) லி-ட்., எம் & இ. மார்ட்டன் (இந்தியா) லி-ட்., மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லி-ட்., நாஷனல் கார்பன் கோ. (இந்தியா) லி-ட்., பார்ஸி ப்ராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் கோ. லி-ட்., பஞ்சாபி சந்து ஹல்வாய், ஸேல்ஸ் ப்ராடெக்ட்ஸ் ஓவர்ஸீஸ் லி-ட்., ஷாலிமார் பெயிண்ட், கலர் அண்டு வார்னிஷ் கம்பெனி லி-ட்., டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லி-ட்., வால்சார்ட் பிரதர்ஸ்.

**விளம்பர ஏஜெண்டுகள்—**

அட்வர்டைஸிங் அண்டு ஸேல்ஸ் பிரமோஷன் கோ., ஈஸ்டர்ன்ஸ், எபிஷ்யண்ட் பப்ளிஸிட்டிஸ் லி-ட்., எவரெஸ்ட் அட்வர்டைஸிங் லி-ட்., கிராண்ட் அட்வர்டைஸிங் இன்க்., க்ரீன்ஸ் அட்வர்டைஸிங் ஸர்வீஸ் ஏஜண்ட்ஸ், இந்தியா அட்வர்டைஸிங் ஸர்வீஸ், டி. ஜே. கீமர் அண்டு கோ. லி-ட்., லின்டாஸ் லி-ட்., பி. எஸ். மணி அண்டு கம்பெனி, நேஷனல் அட்வர்டைஸிங் ஸர்வீஸ் லி-ட்., பிரஸ் ஸிண்டிகேட் லி-ட்., ரஞ்சித் சேல்ஸ் அண்டு பப்ளிஸிட்டி லி-ட்., ஷில்பி லி-ட்., ஸிஸ்டாஸ் லி-ட்., எப். டி. ஸ்டுவர்ட் லி-ட்., எல். ஏ. ஸ்ட்ரோனக் அண்டு கோ. (இந்தியா) லி-ட்., ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி (ஈஸ்டர்ன்) லி-ட்.

இதைப் பிரசுரித்தவர்கள் :

**ABC ஸ்தாபனத்தின் அங்கத்தினரான 'கல்கி' பத்திரிகை சொந்தக்காரர்கள்**

REGD. NO. M. 4392

*Registered as a newspaper in Ceylon*




இந்தியாவில் தயாரித்தது. L. 244-50 TM